Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

ஏப்.02-09,2000

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

முரசு 351

## தீர்வுப் பேச்சுக்கள் ஐ.தே.க. கையில் பந்து



## கா.பூ.கந்தசாமிக்கு சளப்பிக் கந்தரின் கடிதம்

காதலுக்கு அவமரியாதை





## மன்னாதி மன்னன்

### இராஜகுமாரனின் புதிய தொடர்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## அமெரிக்கா விரிக்கும் வலை?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

[illegible]

கடந்த 22 வருடங்களாக
அமெரிக்க ஜனாதிபதி எவரும்
இந்தியா வந்திருக்கவில்லை.

[illegible]
அமெரிக்க ஜனாதிபதியொருவர்
விஜயம் செய்வது
இது தான் முதற்தடவை.

இதே வேளை
பாகிஸ்தானில்
இராணுவச் சதிப்புரட்சி
நடந்த,
முன்னாள் பிரதமர்
நவாப் ஷரீ..ப்
தூக்குத்தண்டனையை
எதிர்நோக்கும்
இராணுவ விசாரணைகளுக்கு
உள்ளாகியிருக்கும்
பதட்டமான வேளையில்
பாகிஸ்தானுக்குச் செல்லவும்
அமெரிக்க ஜனாதிபதி
உத்தேசித்திருந்தார்.

ஆனால்,
இலங்கைக்கு மட்டும்
விஜயம் செய்ய
அமெரிக்க ஜனாதிபதி
அக்கறை காட்டவில்லை.

இது
இலங்கையின்
ராஜதந்திரத்துக்குப்
பின்னடைவென
எதிர்க்கட்சிகள்
குரலெழுப்பியுள்ளன.

இதே வேளை
அமெரிக்க அதிபரின்
இந்த விஜயங்கள்
அவரது ஆட்சிக்காலத்தின்
இறுதிக் கட்டத்தில்
நிகழ்வதானது
எதிர்வரும் தேர்தலுக்கான
பிரபலமீட்டும்
தந்திரோபாயமாகவும்
கூடவே தொனிக்கிறது.

தெற்காசிய நாடுகளின்
விவகாரங்களில்
அமெரிக்காவுக்கு
உண்மையான அக்கறை
எந்தளவுக்கு உள்ளதென்ற
கேள்வி இங்கே
எழத்தான் செய்கிறது.

இவ் விஜயங்களில்
அமெரிக்காவின்
பிரதானமான கவனம்
இந்தியா மீதே
காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில்
புதிதாகத் தலைப்பட்டுள்ள
தேசிய வாதத்தைக்
கைமீறிப் போகாமல்
பார்த்துக்கொள்வதே
அதனது அவசர நோக்கம்.
அந்தத் தேசியவாதம்
அணுவாயுத வல்லரசாகத்
தானும் மிளிரவேண்டுமென்ற
உந்துதலோடு
இணைந்து கொண்டதே
அமெரிக்காவின்
எச்சரிக்கை விளக்கைப்
பற்றவைத்துள்ளது.
எனவே தான்
அணுவாயுதத்துக்கான
பிரதான சாட்டாக
இந்தியாவுக்கு இருக்கும்
காஷ்மீர் விவகாரத்தின்
பாகிஸ்தான் நெருக்கடியில்
மூக்கை நுளைக்கும்
அவசியம் எழுந்துள்ளது.

இதேவேளை
பாகிஸ்தானின்
புதிய ஆட்சியின்
மனநிலை தன்னை
எடைபோட்டுக் கொள்ளவும்
இந்த விஜயத்தை
அமெரிக்கா பயன்படுத்துகிறது.

இவற்றைவிட
சோவியத் யூனியனின்
வீழ்ச்சிக்குப் பின்னர்
தென்னாசிய நாடுகளில்
தனது மேலாண்மையை
ஏற்படுத்தக்கூடிய
புதிய தந்திரோபாய
அணுகுமுறை ஒன்றையும்
கிளிண்டன் விஜயத்துடன்
பரீட்சித்துப் பார்ப்பதற்கு
அமெரிக்கா முனைகிறது.

அதற்கு முன்னோடியான
உதவித் திட்டங்களுடன்
தென்னாசிய நாடுகளை நோக்கி
புன்னகை புரிந்தபடி
தனது வலையையும்
விரிக்க எத்தனிக்கிறது.

இத்தனைக்கும் மத்தியில்
இலங்கை பற்றிய
அதிக அக்கறை
அமெரிக்காவுக்கு
எப்படி இருக்கப்போகிறது?

காஷ்மீர் பிரச்சனையில்
கால் வைப்பதற்கு
அமெரிக்காவுக்கு
ஆதாயம் இருக்கிறது.

இலங்கையில் எரியும்
இனப் பிரச்சனையில்
அமெரிக்காவையும்
இழந்து விடுவதற்கு
எம்மவர் ஏங்குவது
ஏன் எனப் புரியவில்லை.

குளத்தைக் கலக்கி
கொக்கிடம் கொடுக்கவா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்



## பாவமும் புண்ணியமும்

'முற்பகலில் செய்ததெல்லாம் பிற்பகலில் விளையும்' என்ற வாக்கியம் பொய்யானதல்ல. ஒருவர் ஏதாவது ஒருவகையில் யாருக்காவது தீது செய்து விட்டுத்தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் அவருடைய வாழ்நாளில் அதற்கான பிரதி பலனை அவர் என்றாவது ஒரு நாள் அடைந்தே தீருவார்.

ஒருவர் ஒரு கொலையைச் செய்து விட்டு நீதிபதியின் முன்னால் சென்று நிற்பார். அவருக்காக வாதாடுவதற்காக பணம் கொடுத்து ஏற்பாடு செய்யப்பட்ட வழக்கறிஞரின் வாதத்திறமையால் அவர் தப்பி வெளியேறி, நிரபராதி என்று கூறிக்கொண்டு திரியலாம். ஆனால் உரிய காலம் வரும்போது அவருக்கு இறைவன் தண்டனையைத் தந்து விடுவான். பிறரை வதைத்தவன் தானே பிறரால் வதைபடுவான். 'தெய்வம் நின்றறுக்கும்' என்று அதனைத் தான் கூறுவார்கள். கொலைக்குற்றம் மட்டுமல்ல வேறு எந்தவகையிலும் எவருக்கும் தீங்கு நினைக்கக் கூடாது.

தீமையைப் போலத்தான் நன்மையும். தர்மம் தலைகாக்கும் என்பார்கள். எவருக்காவது உதவி தேவைப்படும் போது ஏதாவது உதவி செய்வோமேயானால் எமக்கு உதவி தேவைப்படும் போது எவ்வகையிலும் உதவி வந்து சேரும்.

நாம் அன்றாடம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் இறைவன் கணக்கு வைத்து வருகிறான். நாம் செய்யும் நன்மைகளையும் தீமைகளையும் அவன் ஒன்று விடாமல் பதித்து வைத்துக்கொள்கிறான். 'ஏடும் எழுத்தாணியும் வைத்துக்கொண்டு எமதர்மனின் தர்பாரில் சித்திர புத்திரனார், பூலோக வாசிகளின் பாவ-புண்ணியங்களைப் பதிவு செய்து வைக்கிறார்' என்று புராணங்கள் கூறுவதாகப் பாட்டி கதைகூறுவார். அக்கதை உண்மையோ பொய்யோ என்பது முக்கியமல்ல. நாம் செய்யும் பாவ-புண்ணியங்களுக்கு உரிய பலன் நமது வாழ்நாளிலேயே நாம் அறியாமல் கிடைக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்த உண்மையை உணர்ந்தால் நாம் நன்மையே புரியத்தயங்கமாட்டோம்.

–ஞானேந்திரன்–

## சுவர்க்கம் செல்வோம்

ஒரு முறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரயாணத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கையில் அவர்கள் பிரயாணம் செய்த ஒட்டகம் பயந்து நின்று விட்டது.

இதனை அவதானித்த உஸ்மான்(ரலி) அவர்கள் இறைதூதரிடம் ஏன் இவ்வாறு தாங்கள் பயணம் செய்த ஒட்கம் பயந்து நிற்கிறது என்று கேட்டார்.

அதற்கு அண்ணல் நபி அவர்கள் மரணித்த ஒருவர் அடக்கம் செய்யப்பட்ட கப்ரில் மண்ணறையில் அல்லாஹ்வின் வேதனை அவர் மீது சாட்டப்பட்ட சத்தம் கேட்டு இந்த ஒட்டகம் நின்று விட்டது என்றார்கள்.

ஆதாரம்: அஹ்மத்

'கப்ரு' என்பது மறுமையின் தங்குமிடங்களில் முதலாவது மன்ஸிலாக இருக்கிறது. மரணித்த ஒருவருக்கு கப்ரு சுவர்க்கத்தின் பூஞ்சோலையாக இருக்கும் அல்லது நரகத்தின் படுகுழியாக இருக்கும்.

ஆகவே நாம் பாவங்கள் செய்வதிலிருந்து எம்மைப் பாதுகாத்து நன்மைகள் அதிகம் புரிந்து இறுதித் தீர்ப்பு நாளில் அல்லாஹ்வின் அன்பைப் பெற்று சுவர்க்கம் செல்வோம்.

எம்.சி.கலீல்-கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.348



## பரிசுக்குரிய கவிதை

### தலைகீழ்

அப்பா களுத்துறையில் காலமானதால்
அம்மா இன்று நடுத்தெருவில்!
வீட்டு நிலமை தலைகீழானதால்-எங்கள்
சோற்றுப் பானையும் தலைகீழானது.

மெற்றில்டா மரியதாஸ்-பண்டாரவளை.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### வ(வெ)றுமை

குட்டித்தம்பிக்கு...
பசிக்கிறதாம்;
அதனால்...;
சமைக்கப் போவது போல்
நடிக்கிறேன்!

ந.மதி-மோதர.

### ஐ.நாவிற்கு ஒரு மடல்

நாம் உகண்டா மக்கள் அல்ல;
ஈழத்திருநாட்டின்
புலம் பேர்ந்தவர்கள்-
எம் ஏக்கம் போக்குங்களேன்!

கே.றஜீதரா (சசி)-கொழும்பு-13.

### காத்திருப்பு!

அருகில் ஷெல் சத்தம் கேட்கிறதே!
அரை வயிறாவது நிரப்ப,
அரிசி வாங்கச் சென்ற
அப்பா சீக்கிரம் வரமாட்டாரா?

இ.ஆனந்தி-கோண்டாவில்.

### அவல நிலை

பசியாற பானையிலே
சாதமில்லை!
படுத்துறங்கத் தான் இங்கு
ஓர் இடமுமில்லை!
உணவு கொண்டு வரப்
போன அப்பாவை
எதிர் பார்த்துத் கண்ணும்
பூத்துப் போய்விட்டது!

கவிதா சாந்தலிங்கம்-ஏறாவூர்-05.

### எதிர்பார்த்து...

வீடிழந்து உணவிழந்து
தெருக்கோடி வந்து விட்டோம்!
உணவு வாகனத்தை
எதிர் பார்த்து வாடுகின்றோம்!

சி.மதியழகன்-திருகோணமலை.

### மீண்டும் அகதிகள்

புதிய வாழ்வு மலர
புத்தாயிரமாம் ஆண்டு
பூத்துக் குலுங்குமென்று
போட்ட கணக்கை மறந்து
அகதி வாழ்வை மீண்டும்
ஆரத் தழுவும் குடும்பம்.

லிங்கராஜா கிரிசாந்தி-மட்டக்களப்பு.

### கைது

இரவில் வந்து அப்பாவை-
கூட்டிக்கொண்டு போனார்கள்
பகலில் வந்து அண்ணாவை
அழைத்துக் கொண்டு சென்றார்கள்,
போனவர்கள் இன்னும் திரும்பவில்லை!
கதிகலங்கி குழம்பிப் போய்
குந்தியிருக்கின்றோம்!

எஸ்.ஞானராஜா-வாழைச்சேனை.

### உணவு!

வெறுமையான பானை
மட்டும்!
எங்களது வயிறுகளைப்
போல...!

வ.வானதி-வெள்ளவத்தை.

### தாயின் அறை கூவல்

மகனே கஞ்சிக்கு காத்திருந்து
ஏமாந்தது-போதும்!
எழுந்திடு மகனே நீயும்-உன்
அண்ணாவின் வழியில் போ!

கே.எஸ்.அரவிந்-சம்பூர்.

# கவிதைப் போட்டி இல.351



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 08.04.2000

கவிதைப் போட்டி இல.351
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### பயம்

ஆட்டிலெறிக்கு அஞ்சினோம்!
புக்காராவுக்கு பயந்தோம்!
செல்லுக்கு செத்து செத்து பிழைத்தோம்!
சுப்பர் சொனிக்குக்கு சுத்தி சுத்தி ஓடினோம்.
இப்பொழுது வெடிக்குப் பதுங்கி இருக்கிறோம்!

ப.சங்கீதா-கொழும்பு 13.

### மு(வி)டிவில்லை!

முடிவில்லை-இந்த
ஈழப்போருக்கு!
விடிவில்லை-எங்கள்
அகதி வாழ்வுக்கு!!

முகம்மட் இர்ஹாம்-
காத்தாங்குடி-05.

### மண்ணின் உயிர்கள்

மண்ணிற்கு இரையாகவிருக்கும்
வன்னியின் உயிர்கள்
இந்நிலையிலா இருக்கும்?

அஸ்ரீன் அனீபா-மாளிகாவத்தை.

## இப்படியும் ஓர் ஆசிரியர்?

பொகவந்தலாவையின் பிரபல தமிழ் கல்லூரியொன்றில் பத்தாம் தர மாணவனொருவன் ஆசிரியரொருவரால் பிடரியில் தாக்கப்பட்டதையடுத்து மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் இடம் பெற்றது. வகுப்புத் தலைவனான அம்மாணவனின் வகுப்பின் கடும் சத்தத்தை பொறுக்க முடியாத குறித்த ஆசிரியரால் இத்தாக்குதல் நிகழ்த்தப்பட்டதென அவரின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக பொலிசில் முறையிட எத்தனித்த குறித்த மாணவனை சார்ந்தோருக்கு கல்லூரியின் ஆசிரியர்கள் சிலரால் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டதாம். மாணவனை தாக்கிய ஆசிரியர் அவனை வைத்தியசாலையில் சந்தித்த வேளையில், தான் பலரை இதனைவிட கடுமையான முறையில் தாக்கியுள்ளதாகவும், இதை பெரிது படுத்த வேண்டாம் எனவும், குறிப்பிட்டதாகவும் பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்தான். இந்த ஆசிரியரின் வித்தியாசமான உபசரிப்பினை பெற எதிர்காலத்தில் எத்தனை மாணவர்கள் தகுதி பெற்றிருக்கிறார்களோ தெரியவில்லை....!

பெயர் குறிப்பிட விரும்பாத வாசகர்.

# வாசக(ர்)சாலை



இனிய முரசே!

அற்புதன் அவர்களின் மரணத்துடன் இனி தினமுரசு வெளிவரமுடியாது என்பதே கொலைஞர்கள் உட்பட அனைவரினதும் எதிர்பார்ப்பாக இருந்தது. அதை பொய் என்று நிரூபித்து விட்டது. மகிழ்ச்சிதான். எனினும் நரன் அவர்களின் "எக்ஸ்ரே ரிப்போட்டில்" அரசியல் விடயங்களை மட்டுமே மிக நன்றாக ஆராய்கின்றார். இராணுவ ரீதியான சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை என்பது ஒரு குறையாக உள்ளது. அற்புதன் அவர்களின் "எக்ஸ்ரே ரிப்போட்டில்" அரசியல், இராணுவ விடயங்களை ஒன்றாக ஆராய்ந்தார் என்பது கவனிக்கத்தக்கது. "புலிகளின் வெற்றியின் இரகசியங்கள்" கட்டுரை நன்றாக அமைகின்றது. அற்புதன் அவர்கள் மரணமடையும் வரை எழுதிய "அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை" என்ற தொடரை மீளவும் தரமுடியுமா? ஏனெனில் பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் அத்தொடரின் ஆரம்ப கட்டங்களை வாசிக்க முடியவில்லை. அத்தொடரினை மீளவும் தரமுடியாவிடின் அதை நாம் அறிந்து கொள்வதற்கு மாற்று ஒழுங்கு செய்வீர்களா? பதில் தரவும்.

க.தனுராஜ், டச்றோட் சாவகச்சேரி.

இனிய முரசுக்கு!

மார்ச் 12, முரசு 348ஐ வாசித்தேன். ஆன்மீகம் என்ற பகுதியில், 'எமது சமயம்' என்ற சைவ வழிபாடு இருந்தது.

'கடவுள் அநாதியானவர் என்றால் சமயமும் அநாதியானது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. கடவுள் ஆதியும் அந்தமும் இல்லாத ஒருவர் மாத்திரமே! கடவுள் என்பதே 'அநாதியானவர்' என்பதின் பொருளாகும் என்பதை வாசகர்களுக்குத் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஜெசி, கொழும்பு-02.

பலகோடிக்கணக்கான வாசகர்களில் எங்கள் குடும்பமுமொன்று. நான், என் மனைவி, பிள்ளைகள் அனைவரும் ஈடுபாடுள்ள ஆக்கங்களை தரும் உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

பத்திரிகையென்றால் ஏதோ பெரியவர்களுக்குத் தான் என்று எண்ணியிருந்த எனக்கு என் பிள்ளைகள் விழுந்தடித்து சிறுவர் சித்திரத்தை வர்ணம் பூசுவதை கண்டு ஆச்சரியப்பட்டுப் போகிறேன். முரசின் ஆக்கம் மென்மேலும் வளர எமது வாழ்த்துக்கள்.

றூபன், லுஸேண், சுவிஸ்.

முத்தான முரசே!
வாரம் தோறும் வெற்றி நடை
போடும் என் இனிய முரசே!
உன் வருகைக்கு மிக்க நன்றி
இப்போது சில வாரங்கள்
விளையாட்டு தகவல்கள்
படிக்காமல் மிக கவலையாக
இருக்கிறது. உங்கள் விளையாட்டு
வாசகர்களை எப்போது சந்தோஷத்துக்கு உள்ளாக்குவாய்?

ஆர்.பிரதீப், கொழும்பு.

என் இனிய முரசே!

நீ உன் இதழில் ஏற்கும் அனைத்து அம்சங்களையும் படிப்பதே எனது பொழுது போக்கு. நீ வியாழன் தோறும் வர நான் எதிர்ப்பார்க்கின்றேன். இதில் முக்கியமாக நான் படிக்கும் விஷயங்கள் உள்ளன. அவை 'திருமறை தரும் பொது நெறி', 'மோனிக்கா', 'பாப்பா முரசு', 'இடி அமீன்', 'தேன் கிண்ணம்' போன்றவை என் உள்ளம் கவர்கின்றன. இப்பணி சிறப்பு பெற்று புகழோங்க வாழ்த்துகிறேன்.

ஜெ.வைதீஸ்வரன், அப்புத்தளை.

என் இனிய முரசே!

பலப் பல ரசிகர்களை பல இடங்களிலும் சூழ்ந்துள்ள உன்னை என்னாலும் போற்றாமல் இருக்க முடியாது. உன்னில் உள்ள பக்கங்கள் அத்தனையும் பாராட்டப்படவேண்டியவை வாழ்த்தப்பட வேண்டியவை. அதிலும் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'சிந்தியாவின் கேள்வி-பதில்', என்னை மிகவும் கவர்ந்துள்ளன. என்றும் உன் பணி தொடர என் நல்வாழ்த்துக்கள்.

இ.கங்காசுதன், பிரான்ஸ்.

என் உயிர் முரசே!

உனது ரோஜா இதழ்களைக் காண்பதற்காக வழிமேல் விழிவைத்து பார்த்துக்கொண்டே இருப்பேன் ஏன் நீ அளிக்கும் அத்தனை அம்சங்களும் பிரமாதம் அதிலும் தேன்கிண்ணம், 'மோனிக்கா என் மோனிக்கா' இவ்வாறான பல விடையங்களை உள்ளடக்கி அள்ளிச் சொரிகின்றாய். உனக்கு நிகர் இங்கு இல்லை இனி. இவ்வாறு உன் பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

க.பரணிகரன், கொக்கட்டிச்சோலை.

அன்பிற்குரிய முரசிற்கு!

என்நெஞ்சில் வாசம் செய்யும் முரசே நீ சங்கமிக்கும் அனைத்து அம்சங்களும் பிரமாதம். 'ஸ்பெஷலாகத்தரும் வெற்றியின் ரகசியத் தின் வெற்றிக்கு எனது பாராட்டுக்கள் திக்கெட்டும் இருக்கும் தமிழ் நெஞ்சங்களைத்திக்கவைக்கும் முரசே உன்பணி என்று வழர்க வாழ்க.

ச.விமல்றாஜ், வவுனியா.

என் இனிய முரசே!

உன் உடலில் என்னைக் கவர்ந்தவை எவையென என்னால் பிரித்துக் கூற முடியாதவாறு அத்தனையும் இனிமையானவை. என் உயிரே உனக்கோர் சிறு விண்ணப்பம். உனது சினிமாப் பகுதியில் சினிமாப் பாடலுக்கென சிறு பகுதி ஒதுக்க முடியுமா? உனதழகுக்கு மேலும் மெருகூட்டும்.

க.ராஜன், வெஸ்ட் கிரோய்டன், இங்கிலாந்து.

# தமிழரை புலி என்று கூறி தாக்குவதற்கு திட்டமிடப்படுகிறதா?

# தலைநகர் சம்பவங்களால் எழுந்துள்ள சந்தேகம்!

**நாட்டில் இனவன்முறைச் சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெறுவது பலருடைய கவனத்தை ஈர்த்து வருகிறது. தலைநகர் கொழும்பில் தமிழ் மாணவர்கள் புலிகள் என்று குற்றச்சாட்டின் பேரில் அவஸ்தைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இது தவிர மலையகத்திலும் தனித்துக் காணப்படும் தமிழ் இளைஞர், யுவதிகளை புலிகள் எனக்கூறி பெரும்பான்மை இன விஷமிகள் தாக்கிவருவது தெரிய வந்துள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

பம்பலபிட்டி இந்துக்கல்லூரியில் படிக்கும் மாணவன் ஒருவர் ரயிலில் பயணம் செய்யும்போது தனது புத்தகப்பையை, இருக்கைக்கு மேலுள்ள பொதிதாங்கியில் வைத்துவிட்டு, தான் இறங்க வேண்டிய இடம் வந்ததும் அப்பையை எடுக்கும் போது, அதனுள்ளிருந்த புத்தகங்கள் கீழே விழுந்தன. அப்புத்தகங்கள் தமிழ்ப் புத்தகங்களாக இருந்தமையினால் அவ்வண்டியில் பயணம் செய்த பெரும்பான்மை இன சகோதரர்களுக்கு ஏனோ கோபம் வந்துவிட்டது. மாணவனை பலரும் ஒன்று கூடித் தாக்கியிருக்கின்றனர். ரயிலிலிருந்து அவரைக்கீழே தள்ளிவிடவும் முயற்சிகள் நடந்ததாகத் தெரிகிறது.

ஓடும் ரயிலிலிருந்து தள்ளப்பட்டிருந்தால் அம்மாணவனை பிரேதமாகத்தான் கண்டெடுத்திருக்க முடியும். "ரயிலிலிருந்து தவறிவிழுந்து விட்டான்" என்று விசாரணை முடிவு அறிவிக்கப்பட்டிருக்கும்.

### தனியார் பஸ்ஸில்

கடந்த 25ம் திகதி சனிக்கிழமை மொறட்டுவையிலிருந்து புறக்கோட்டை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பஸ்ஸில் பயணம் செய்த தமிழ் இளைஞர் ஒருவரை பெரும்பான்மை சமூகத்தவரான அந்த பஸ் நடத்துநர், வெள்ளவத்தையில் வைத்து வெளியே தள்ளிவிட்டிருக்கிறார். "நீ ஒரு தமிழன், ஆகவே நீ ஒரு புலியாகத்தான் இருக்க வேண்டும். புலிகளுக்கு இந்த வண்டியில் இடம் தரமுடியாது!" என்று பலத்த தொனியில் கூறியும் இருக்கிறார்.

இவ்விரு சம்பவங்களும் செய்தித்தாள்களில் இடம்பெற்றமையினால் பலரும் அறியக்கூடியதாக இருந்தது. ஆனால் நாட்டின் பெரும்பான்மை சமூகத்தவர் வாழும் ஏனைய பகுதிகளில், இத்தகைய சம்பவங்கள் அன்றாடம் நடக்கவே செய்கின்றன. இவை இனவன்முறையைத் தூண்டுவதற்காக மேற்கொள்ளப்படும்- சிலரால் திட்டமிடப்படும்- சம்பவங்களின் வெளிப்பாடாக இருக்கலாமோ என்று சந்தேகம் எழுந்துள்ளது.

இந்துக்கல்லூரி மாணவன் தாக்கப்பட்டது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை, இத்தகைய சம்பவங்கள் பற்றி சட்டத்தின் பாதுகாவலர்களிடம் முறையிட்டாலும் அங்கும் சில இடங்களில் மாற்றாந்தாய் மனப்பான்மை நிலவுவதால், அக்கறை செலுத்தப்படுவதில்லை என்று கூறப்படுகிறது.

இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் முளையிலேயே கிள்ளி எறியப்படவேண்டும். உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்து, குற்றவாளிகளுக்கு உரியதண்டனைகள் வழங்கப்படவேண்டும். இல்லையேல் இத்தகைய சம்பவங்கள் பூதாகரமாக வளர்ந்து நிலமையை மேலும் மோசமடையச் செய்யலாம் என்று நோக்கர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## "போர் இடி பாடுகளுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்!"

"போரின் கொடுமைகளையும் மக்கள் படும் துன்பதுயரங்களையும் பார்த்து அறியாதவர்களே போரைத் தொடர வேண்டும் என்று விரும்புகிறார்கள். நான் போர்க் கொடுமைகளை- இடிபாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டே அனுபவிக்கிறேன்!" என்று நயினை நாக விகாராதிபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 25ம் திகதி சனிக்கிழமையன்று நடைபெற்ற சமாதானப் பேரணியில் அறுபது அமைப்புகளுக்கு மேல் பங்குபற்றிய ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அன்று காலை 9 மணியளவில் நல்லூர் கந்தசாமி கோவிலடியில் இருந்து புறப்பட்ட இந்த ஊர்வலம் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைந்தது. அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பல மதத் தலைவர்களும் உரையாற்றினார்கள்.

நயினை நாகவிகாரை விகாராதிபதி ஞானரத்ன தேரர் உரையாற்றுகையில் "யுத்தத்தின் அநர்த்தங்களினால் இடிந்து போன சிதைவுகளுக்கு மத்தியில் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். போரினால் மக்கள் படும் துயரங்களை நேரடியாகவே காண்கிறேன். இத்தகைய பயங்கர விளைவுகளை அனுபவிக்காதவர்களே போரைத் தொடர வேண்டும் என்று கூக்குரலிடுகின்றனர். இத்துன்பங்கள் நீங்கி சமாதானம் ஏற்பட்டால் மட்டுமே மக்கள்படும் துயரங்கள் நீங்கும்." என்று கூறினார்.

வேறு பல சமயத்தலைவர்களும் பிரமுகர்களும் உரையாற்றினார்கள்.

## 'தேசத்துரோகி' என வாலிபர் கொலை?

## மாமியாரும் கொல்லப்பட்டார்!

"காட்டிக் கொடுப்போருடன் சேர்ந்து தமிழீழ மக்களுக்குத் துரோகம் செய்தார்!" எனக் குற்றம் சாட்டி வாலிபர் ஒருவரைப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

மட்டக்களப்பு-கொம்மாதுறையைச் சேர்ந்த ந.வேலன்( 19) என்பவர் கடைக்குச் சென்றவேளை அவரை வழிமறித்து மடக்கிப் பிடித்த புலி உறுப்பினர்கள் சிலர் சற்றுத் தூரம் அழைத்துச் சென்று அவரைச் சுட்டுக் கொன்றார்கள். என்றும் சடலத்திற்கு மேற் சொன்ன குற்றச் சாட்டு வாசக அட்டையொன்று காணப்பட்டதாகவும் ஊர்மக்கள் தெரிவிக்கிறார்கள். மார்ச் 25 ம் திகதி இரவு இச்சம்பவம் கொம்மாதுறையில் இடம் பெற்றது.

இவர் தன் மனைவியை விட்டுப் பிரிந்திருந்தார் அது சம்பந்தமாக விசாரிப்பதற்காக புலிகள் இவரைப் பலமுறை விசாரணைக்கு அழைத்திருந்தனராம். எனினும் அவர் புலிகளின் அழைப்பை தட்டிக் கழித்து வந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொல்லப்பட்டவரின் மனைவியின் தம்பி புலிகள் இயக்கத்தில் உள்ளார். அவரே இவரைச் சுட்டுக் கொன்றதாக பொதுமக்கள் தரப்பில் பேசப்படுகிறது.

இச்சம்பவம் நடந்து மறுநாள் இரவு முகமூடியணிந்த ஆயுத பாணிகள் ஓ.கோமளேஸ்வரி (40) எனும் 5 பிள்ளைகளின் தாயைச் சுட்டுக்கொன்றுள்ளனர். இவர் முதல் நாளிரவு கொல்லப்பட்டவரின் மாமியாராவார்! குடும்பத்தகராறே இந்த இரு கொலைகளுக்கும் பின்னணிக் காரணமாயிருக்கலாமென்று பொதுமக்கள் தரப்பில் பேசப்படுகிறது.

## ஆனையிறவைக் கைப்பற்ற புலிகள் பாய்ச்சல்!

யாழ்ப்பாணத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் ஆனையிறவு பகுதியை தம்வசமாக்குவதற்காக ஓயாத அலைகள்-3 நடவடிக்கையை கடந்த சில மாதங்களாக விடுதலைப்புலிகள் முயற்சித்து வருகின்றனர். இப்போரின் உச்ச கட்டமாக கடந்த 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று இரவு புலிகளின் தாக்குதல் வேகம் அதிகரித்துள்ளது. ஆனையிறவிலுள்ள இராணுவ முகாம் புலிகளின் எதிர்ப்பினைத் தாக்குப் பிடிப்பதற்கான முறையில் நான்கு அரண் செய்யப்பட்டிருக்கிறது. இதனாலேயே கடந்த மூன்று மாதங்களாக புலிகள் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை ஆயுதப்படையினர் எதிர்த்து முறியடித்து வருகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு வடமராட்சி கிழக்கில் கடல் மற்றும் தரை மார்க்கமாக தாக்குதலை ஆரம்பித்த புலிகள் பளை கண்டி வீதிவரை முன்னேறினர் என்று கூறப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு மாமுனை கடற்கரையில் படகுகள் மூலம் புலிகள் சாரி சாரியாக வந்து தரை இறங்கினர். தாழையடி, செம்பியன்பற்று, மருதங்கேணி ஆகிய பகுதிகளிலும் புலிகள் முன்னேறினர்.

ஆனையிறவு படைமுகாமிலுள்ள படையினருக்கு பொருட்களை எடுத்துச் செல்ல பயன் படுத்தப்படும் பளை-கண்டி வீதியை புலிகள் 12 மணி நேரம் தம்வசமாக்கியிருந்தனர் என்றும் பின்னர் படையினர் புலிகளிடமிருந்து அப்பகுதியைக் கைப்பற்றி கொண்டனர் என்றும் இராணுவ வட்டாரங்களிலிருந்து செய்திகள் தரப்பட்டுள்ளன.

பளைக்கு தெற்கேயுள்ள இயக்கச்சி இராணுவ முகாம் முன்னரங்க நிலைகளையும் தாக்கியதாக புலிகள் தெரிவிக்கின்றனர். பளையில் படையினரின் 11 பீரங்கிகளை அழித்தொழித்து விட்டதாக புலிகள் தெரிவித்தனர். ஆனால் இங்கு இரு பீரங்கிகளையே அவர்களால் தாக்கியழிக்க முடிந்தது என்று படைத்தரப்பினர் கூறுகின்றனர்.

இந்தத் தாக்குதலின்போது 15 புலிகளை கொன்றுவிட்டதாகவும் படையினரில் 11 பேரை தாம் இழந்து விட்டதாகவும் படையினர் கூறுகின்றனர். திங்கட்கிழமை வரை 25 படையினர் காயமடைந்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

நாகர் கோவில் தெற்கிலுள்ள மாமுனை பிரதேசத்தில் புலிகளின் படகுகள் பலவற்றை கடற்படையினர் தாங்கி அழித்து விட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையின் போது இடையில் சிக்கி பொதுமக்கள் பலரும் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர்.

சண்டை நடைபெறும் பிரதேசத்தில் விமானப்படை விமானங்கள் திங்கட்கிழமை காலை முதல் குண்டுகளைப் பொழிந்து வருகின்றன.

### பிறந்த குழந்தை பெற்றாரை இழந்தது

திங்கட்கிழமையன்று பகல் யாழ்ப்பாணம் மருத்துவமனையில், தான் பிரசவித்த குழந்தையுடனும் கணவனுடனும் ஆட்டோ ஒன்றில் சென்ற திருமதி லோகேஸ்வரி சிறீதரனும் அவர் கணவர் குமாரசாமி சிறீதரனும் இத்தாவில் -என்ற இடத்தில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி மாண்டனர். ஆட்டோ சாரதியான சி.கணேசலிங்கம் (24) என்பவரும் பலியானார். இவர்களுடன் பிரயாணம் செய்த மரணமான பெண்ணின்-சகோதரி ஜெயலக்சுமி காயங்களுடன் தப்பினார். நான்கு நாட்களுக்கு முன் பிறந்த ஆண் குழந்தையை ஜெயலக்சுமி யாழ். மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார்.

### மக்கள் இடம் பெயர்வு

பளை பிரதேசத்தில் தொடரும் யுத்தத்தின் காரணமாக அங்கிருந்து வெளியேறிய பொதுமக்கள் கொடிகாமம், கச்சாய் ஆகிய இடங்களுக்கு குடி பெயர்ந்து செல்கின்றனர்.

## அடையாள அட்டைகள் கிழித்தெறியப்படுகின்றன

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குப் பல்வேறு காரணங்களுக்காகச் சென்று வரும் அப்பாவிப் பொது மக்களின் தேசிய அடையாள அட்டைகளைச் சில சோதனைச் சாவடிகளில் வைத்துக் கிழித்தெறிவதாகப் புகாரிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு-செங்கலடியை அடுத்துள்ள கறுத்தப் பாலம் சோதனைச்சாவடியில் அண்மையில் சமூர்த்தி உத்தியோகத்தரான ஒரு யுவதியின் அடையாள அட்டையும் வேறு சிலருடைய அடையாள அட்டைகளும் கிழித்தெறியப்பட்டதாக பிரதேச செயலாளரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதனிடையே அக்கரைப்பற்று, கல்முனைப் பகுதியிலிருந்து கொழும்புக்கும், மற்றும் பிற இடங்களுக்கும் செல்வோர் தமது ஆளடையாள அட்டையுடன் வேறு விவரங்களை 8ம் கட்டை, தமண, சியம்பலாண்டுவ போன்ற சோதனைச் சாவடிகளில் பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் ஒருவர் சோதனை முடித்துச் செல்ல சுமார் 45 நிமிடங்களுக்கு மேலாகிறது.

தாம் கொழும்பில் தங்கியிருப்பதாகத் தெரிவிக்கும் பெண்களின் விலாசத்தை மாத்திரம் அங்கு சென்று விசாரிக்கின்றனராம் சீருடையினர்.

## ஆசிரியர் பற்றாக்குறை!

## முஸ்லிம் பாடசாலைகள் மூடப்படும் அபாயம்!!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பலத்த ஆசிரியர் பற்றாக்குறையினால் இங்குள்ள முஸ்லிம் பாடசாலைகளை இழுத்து மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 1998 ஆம் ஆண்டு புதிதாக நியமனம் பெற்ற சுமார் 50 க்கும் மேற்பட்ட முஸ்லிம் ஆசிரியர்கள் இவ்வருட பெப்ரவரி, மார்ச் மாதங்களில் இடமாற்றம் பெற்று புத்தளம், குருநாகல் போன்ற பகுதிகளுக்குச் சென்றுள்ளனர்.

இதனால் முஸ்லிம் ஆசிரியர்களை நம்பியிருந்த மன்/புதுக்குடியிருப்பு அ.மு.க.பா 09 ஆசிரியர்களை இழந்து 02 ஆசிரியர்களுடன் இயங்குகிறது. இப்பாடசாலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் மிகவும் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றான மன்/எருக்கலம்பிட்டி மு.ம.ம.வி.யும் 06 ஆசிரியர்களை இழந்துள்ளது.

திடீரென மேற்கொள்ளப்பட்டு வரும் அரசியல் செல்வாக்கினாலான இடமாற்றம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள சுமார் 1000 மாணவர்களின் எதிர்காலம் குறித்து கேள்வி எழுந்துள்ளது.

இந்த மோசமான நிலைமையை சமாளிக்கும் வகையில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஆபேல்றெவ்வல் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை குறித்து முஸ்லிம் பெற்றோர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## பயிற்றப்படாத முஸ்லிம் ஆசிரியர்கள்

## அட்டாளைச்சேனையில் பயிற்சி

(கண்டி நிருபர்)

2000 ஆம் ஆண்டுக்காக ஆசிரியர் பயிற்சியின் பொருட்டு பயிற்றப்படாத முஸ்லிம் ஆசிரியர்கள் இம்முறை அட்டாளைச் சேனை ஆசிரியர் கலாசாலைக்கே அனுமதிக்கப்பட இருக்கின்றனர்.

பல வருடங்களாக ஆசிரியர் கலாசாலையாகி இயங்கி வரும் அலுத்கம தர்கா டவுண் மகளிர் ஆசிரியர் கலாசாலை அடுத்த வருடம் தொடக்கம் கல்விக் கல்லூரியாக பரிவர்த்தனை செய்யப்பட இருக்கின்றது.

அட்டாளைச் சேனை ஆசிரியர் கலாசாலையில் ஆரம்பப் பயிற்சி, வர்த்தகம், மனையியல், இஸ்லாம், உடற்கல்வி போன்ற பயிற்சி நெறிகளில் பயிற்சியைப் பெறுவதற்கான பயிலுனர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் தற்சமயம் மகரகம தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெற்று வருகின்றன.

## அக்கரைப்பற்று வலய 12 தமிழ்ப் பாடசாலைகளின்

## அபிவிருத்திக்கு ஈ.பி.டி.பி. 60 இலட்ச ரூபா ஒதுக்கீடு

(காரைதீவு நிருபர்)

ஜனாதிபதியின் விசேட நிதியிலிருந்து கிடைக்கப்பெற்ற 77 இலட்ச ரூபாவில் அக்கரைப்பற்று வலய தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கென சுமார் 60 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பியின் முயற்சியால் கிடைக்கப்பெற்ற இந்நிதியை 28 தமிழ்ப் பாடசாலைகள் பயன்படுத்தவுள்ளதாக அம்பாறை மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் குணசேகரம் சங்கர் தெரிவித்தார். அக்கரைப்பற்று வலயத்திலுள்ள தம்பிலுவில் மத்திய கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடம் அமைப்பிற்கு 30 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பு இராகிருஷ்ணா தேசிய கல்லூரி, கோளாவில் விநாயகர் வித்தியாலயம், அக்கரைப்பற்று திருநாவுக் கரசு வித்தியாலயம், வினாயகபுரம் மகா வித்தியாலயம், திருக்கோவில் மெ.மி.த.க. கல்லூரி, கோமாரி மெ.மி.த.க, பொத்துவில் த.ம.வி, திருக்கோவில் குமரவித்தியாலயம், இன்ஸ்பெக்டர் ஏற்றம் த.வி., கோரைக்களப்பு சக்தி வித்தியாலயம், தாண்டியடி விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தாராபுரம் கிராமம் சுற்றிவளைப்பு!

## தலையாட்டி முன்னிலையில் சோதனை!!

(மன்னார் நிருபர்)

கடந்த 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று மன்னார் மாவட்டத்திலுள்ள தாராபுரம் கிராமம் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடாத்தப்பட்டது.

அதிகாலை இக்கிராமத்திற்குள் வந்த நூற்றுக் கணக்கான இராணுவத்தினர் கிராமத்திலுள்ள சகல தமிழ், முஸ்லிம் மக்களையும், பாடசாலைக்கு வருமாறு அழைத்து காலை 10.30 மணி வரை சோதனை நடாத்தினர்.

இரு தலையாட்டிகள் கொண்டுவரப்பட்டு சகலரும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டனர். வன்னிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது தாராபுரம் பகுதியில் வசிக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்களும் தீவிரமாக சோதிக்கப்பட்டனர்.

எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இதேவேளை கடந்த 26.03.2000 ஞாயிறு அன்று மன்னார் மாவட்டத்திலுள்ள நானாட்டான் பிரதேச புலிகளின் நிதிப் பொறுப்பாளர் கலையரசன் விஷேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நானாட்டான் பகுதியிலுள்ள வாழ்க்கைப்பட்டான் கண்டல் பகுதியில் இரகசிய தகவல் கிடைத்ததையடுத்து மறைந்திருந்த விஷேட அதிரடிப்படையினர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த புலிகளை நோக்கிச் சுட்டனர்.

அப்போது ஒருவர் தப்பிவிட்டார். கொல்லப்பட்ட புலியின் சடலத்தையும் மோட்டார் சைக்கிள் மற்றும் சுமார் 25 இலட்சம் ரூபா பணம் என்பவற்றையும் படைமினர் எடுத்துச் சென்றுள்ளனர். இதனையடுத்து அப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

## வட-கிழக்கு விவசாய மேம்பாட்டுக்கு

## உலக வங்கி 226 கோடி உதவி

(கண்டி நிருபர்)

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தக் கெடுபிடிகளால் சீர் குலைந்து போன விவசாயத் துறையையும் மற்றும் பொது மக்களின் அத்தியாவசிய நலன் குறித்தும் உலக வங்கி 226 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதன் பொருட்டு நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இந்த வேலைத் திட்டத்தை எவ்வாறு இட்டுச் செல்வது பற்றிய பயிற்சிப் பட்டறையொன்று கண்டி 'ஓர் ரீஜன்ஸி' ஹோட்டலில் கடந்த வாரம் இடம் பெற்ற பொழுது அங்கு விரிவாக ஆராயப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு.ஜீ.கிருஷ்ணமூர்த்தி செய்திருந்தார். உள்ளூராட்சி மாகாண அமைச்சின் செயலாளர் திரு கே.பீ.சிறிசேன, வடகிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜயவர்தன. உலக, மற்றும் ஐ.நா பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலானா, வடகிழக்கு மாகாண புனர் வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கலாநிதி, சரத் அமுனுகம ஆகியோரும் பங்குபற்றினர்.

இத் தொகை நிதியின் ஊடாக 400 சிறு நீர்ப்பாசன குளங்களும், 1200 கிலோ மீட்டர் தூரம் வரையிலான பாதைகளும் சீரமைக்கப்படுவதுடன் 300 குடி நீர் கிணறுகளும் அங்கு உருவாக்கப்பட உள்ளது.

## கஷ்ட பிரதேச ஆசிரியர்க்கு விசேட படி

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த கஷ்ட, மற்றும் அதி கஷ்ட பிரதேச பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அவர்கள் பெறும் மாத வேதனத்துடன் முறையே 1000/- ரூபாவும் 1500/- ரூபாவும் வழங்கப்படும்.

இதற்கான முடிவை எடுத்திருக்கின்றார் மத்திய மாகாண முதலமைச்சர் திரு. நந்தமித்திர ஏக்கநாயக்க.

மத்திய மாகாணத்தில் உள்ள மாத்தளை, தெல்தெனிய, கொத்மலை, ஹஸ்குரன் கத்தை, நுவரெலியா போன்ற கல்வி வலயங்களில் இயங்கும் பெருந் தொகையான தமிழ்,சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதை அடுத்தே இந்த விசேட கொடுப்பனவை வழங்க முதலமைச்சர் முன்வந்துள்ளார்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



## றொஷானி கணேசன் 26.03.2000

[illegible]பாலை, கோப்பாயைச் [illegible]-செல்வேந்திரகுமாரி தம்பதியினரின் செல்வப்புதல்வி றொஷானி [illegible] பிறந்த தினத்தை 26.03.2000 இல் ஜேர்மனி Dormagen நகரில் [illegible] கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, [illegible]ஷானி அக்கா, [illegible] தாத்தா, அம்மம்மா, ஜேர்மனியிலுள்ள பெரியப்பா, பெரியம்மா, [illegible] சாரா அக்கா மற்றும் இலங்கையிலுள்ள [illegible] மாமா, காந்தா சித்தி [illegible] அப்பம்மா, சுருள் தாத்தா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர் [illegible]வரும் றொஷானியை பல்கலையும் கற்று நீடுழி வாழ்கவென [illegible]

தகவல்: கோ.செல்வராஜா (தாத்தா) [illegible]

## 3வது பிறந்தநின வாழ்த்து / 27.03.2000



முதனை குத்தி உமிலங்குளத்தைச் சேர்ந்த திரு அன்ரன்-கீதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜோய் தனது 3வது பிறந்த நாளை தனது இல்லமாகிய "King House" கிங் ஹவுஸில் அமைதியாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பப்பா, மற்றும் பெரியமாமா, ஆட்டோமாமா, வசிமாமா (லண்டன்), மனோமாமா (லண்டன்), குட்டி மாமா (லண்டன்), ராஜன் சித்தப்பா (ரஷ்யா), யோகன் சித்தப்பா (யாழ் வளாகம்), அன்ரா, மற்றும் மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார் உற்றார், உறவினர் யாவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: மஞ்சு கிங்ஹவுஸ், உமிலங்குளம்.

ஜோய் அன்ரன்


## மஹாசக்தி வசிய மருத்துவம்

(எல்லாப்புகழும் இறைவனுக்கே)

மட்டக்களப்பு மலையாள மாந்திரீக கடல் கடந்த விஷேட வெற்றிகள்.

பலதலைமுறை பரம்பரை தெய்வீக இராஜ வைத்தியம் குருசக்தி நிலையம் கல்லடி, மட்டக்களப்பு, இலங்கை.

GONT APPROVED CHARICABLE SERVICES CENTER Reg.No.HA14/BT/176

மஹாசக்தி உபாசனா பூசகர்

புரதன நவீன மருத்துவ மனோதத்துவ "(மந்திரயோகி)"

YOGI-DR.T.MYLVAGANAM (M.B.B.S.H. (இந்தியா)

R.H.M.P.DAe அக்குப்பஞ்சர் (இலங்கை)

MINISTRY OF HEALTH REGISTERED MEDICAL PRACTITIONER Ree.No.061

[illegible]வினைகளினால் தீயசக்திகளினால் தீயவர்களினால், ஏற்பட்ட தீராத உடல்நோய், மனநோய், வேறு பிரச்சனைகளை தீர்த்து எத்துன்பங்களும் அணுகாமல் காவல்செய்து, காதல் திருமணம், கல்வி, தொழில், வியாபாரம், வெளி நாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளை நீக்கி சகல காரியங்களிலும் வெற்றிபெற்றுச் சந்தோஷமாக வாழ காதலர்கள் [illegible] சேர கணவன்-மனைவி குடும்பப்பிரச்சனைகள் இன்றி பிரியாமல், இன்பமாக இருக்க, பிரிந்தவர்கள் வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக தகாத ஆண்-பெண் உறவை, போதை வஸ்தை மறப்பிக்க வேறு நன்மையான காரியங்களுக்கு மஹா சக்தி [illegible] வசியங்கள் செய்துகொள்ள-வரமுடியாத கடல் கடந்த, வெளி நாட்ட[illegible] தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு இறைபரிகாரப்பொருட்களை [illegible] விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.

[illegible] ஆண்பெண்களின் சகலவிதமான பாலியல் பால் உறுப்பு பிரச்சனைகள், [illegible] வீரியக் குறைவு, குழந்தைகள் இல்லாக் குறைபாடுகள். [illegible] (ஆஸ்துமா) [illegible], தொய்வு, இரைப்பு, இழுப்பு, இளைப்பு கடுமையான [illegible] சகலவிதமான கர்மநோய்கள் உட்பட இவைகளோடு சேர்ந்திருக்கும் [illegible] சகல விதமான மனநோய்கள், தீராத தலையிடி, [illegible] பழுத்தல், கொட்டுப்படல், வளர்ச்சியின்மை, ஞாபசக்தி [illegible] இவைகளுக்கு விஷேட அனுபோக மருத்துவ மனோத்துவ [illegible] அறிவுரைகளையும் பெற்றுக் கொள்ளலாம். விரும்பிய [illegible] நேரில் வந்து மாந்திரீக சேவையைப் பெற்றுக் கொள்ளலாம்.

நாடவேண்டிய விலாசம்

GRUSACKTHY CENTRE (INDIAN CLINIC)

KALLADY-BATTICALOA (P.O.) (SRILANKA)

தொ.பே. 065/24872 பாக்ஸ்:- 065-23796

கொழும்பில் சந்திக்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.



உலகப் புகழ்பெற்ற

## எக்ஸ் ஒயில்




- காய்ச்சல் * தலைவலி
- தலைச்சுற்று * தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை

ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.

ஏக விநியோகஸ்தர் :

SINGHA HOLDINGS (PVT) LTD

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984



# SPOKEN ENGLISH

By K.M.N. NALRAVI

யாருக்காக?

★ தொழில் புரிபவர்களுக்காக.
★ 16 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களுக்காக.
★ வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்காக.
★ இல்லத்தரசிகளுக்காக (Housewives)

- ஒவ்வொரு மாணவரிடமும் அதிக கவனம் செலுத்தும் பொருட்டு ஒரு வகுப்பில் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகை.
- ஆங்கிலம் சற்றேனும் பேசத் தெரியாதவர்கள் கூட சரளமாக பேசப்பயிற்சி.
- அடிப்படையிலிருந்து இலக்கணம்.
- இலக்கணப்பிழையின்றி ஆங்கிலம் எழுதவும் பயிற்சிகள்.
- நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட வகுப்பறை.
- பிரித்தானிய உச்சரிப்பு முறையில் பேச்சுப்பயிற்சி.
- இலகுவாக விளங்கிக் கொள்வதற்கான கல்வி அணுகுமுறைகள்.
- Audio Cassette மூலமாகவும் வேறு நவீன கருவிகள் மூலமாகவும் பயிற்சி.
- வகுப்பிற்கு பின்பு வீட்டிலும் பயிற்சி பெற Cassetteகள்.
- வீட்டிலும் வகுப்பிலும் பயிற்சி பெற Video Cassetteகள்.
- பேச்சுப்பயிற்சிக்காக அதிக நேரம்.
- 3 அல்லது 6 மாத காலப் பாடத்திட்டம்.
- பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு: அலுவலக நேரம் காலை 8.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை
(புதன் கிழமைகளில் அலுவலகம் மூடப்பட்டிருக்கும்)

NALRAVI
ENGLISH LANGUAGE CENTRE
527, First Floor, Galle Road, Wellawatta, Colombo-06. (Hotel Ceylon Innsக்கு அருகில்)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு ◆ 05 ◆ 03 ◆ 1932



உதிர்வு ◆ 15 ◆ 02 ◆ 2000

### அமரர். திரு.சின்னையா நாகராசா

குடும்பத்தின் தலைவராய், அன்பிற்கும், பண்பிற்கும், அறிவிற்கும் பாசத்திற்கும் சிகரமாய் வாழ்ந்து எங்களை வாழவைத்து எமை தவிக்க விட்டுச் சென்ற அன்புத் தெய்வமே!

உங்கள் பிரிவு ஈடு செய்ய முடியாதது. உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம். எம் துயரினில் நேரில் பங்கு பற்றியவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து அனுதாபச் செய்திகள் தெரிவித்தவர்கட்டும் மற்றும் பலவகையாக உதவிகளை புரிந்த நல்லுள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவிப்பதுடன் 31ம் நாள் நினைவுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள், சுற்றத்தார் அனைவருக்கும் எமது நன்றிகள்!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்: மகன் சுவர்ணராசா (கனடா).


## Open Daily P.M.Grand Bargain Sale!

புதிய, பாவித்த வீட்டுத்தள பாடங்கள், பித்தளை கண்ணாடி.... இன்னும் பல அரிய வீட்டுப் பாவனைப் பொருட்கள். இப்பொழுது கொழும்பு-13 கொட்டஞ்சேனை சென்ற் லூசியஸ் வீதி, இலக்கம் 26ல் நடைபெறுகிறது.

தொலைபேசி: 078-655575, 523497



## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

DR. A.P.S. KUTTY

50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349



## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் ஏப்ரல் 23 முதல் 30 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
SRI SAWBAKIYA INN. - No.67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P. 336165, 338163, 338166, செல்டெல் - 072 609388.

கல்முனையில் ஏப்பிரல் 1, 2 திகதிகள்.

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் ஏப்பிரல் 08, 09 திகதிகள்.


(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.


## ஆண்டு ஒன்றிலும் ஆறாத துயரம்

மலர்வு ◻ 21 ✱✱ 09 ✱✱ 77



உதிர்வு ◻ 01 ✱✱ 04 ✱✱ 99

ராகவன் இரகுநாதன்
(கல்லடி, தம்பளைவீதி, பருத்தித்துறை)


என்னுயிர் செல்வமே
எங்களை விட்டு ஒரு நொடியில்
பறந்து விட்டாயே
அம்மாவை விட்டுப் போக மனம்
வந்ததோ!
நாங்கள் ஒன்று கூடி வாழுவோம்
என்று கனவு கண்டு இருந்தோம்.
ஆறாத் துயரில் விட்டுப் பிரிந்தாயே

நாங்கள் மீளாத் துயரில்
துடிக்கிறோம்.
உன் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்,
குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்.

இல; 32, ரயில்வே அவன்யூ,
கொழும்பு-05.

## 60 நாள் நினைவு

பிறப்பு ❦❦ 23 ◆ 05 ◆ 1946



இறப்பு ❦❦ 25 ◆ 01 ◆ 2000

### அமரர் A.T.M. அன்ரனி(துரைரெட்ணம்)

(கிராம சேவை உத்தியோகத்தர்), மாங்கேணி, வாகரை.

காலநதி ஓட்டத்தில்-எங்களை
நீந்தவிட்டுக் கரைசேர்ந்த-எம்
பாசதீபமே!
நடந்ததெல்லாம் நிஜமா?... நிழலா?
இன்னுமே தெளிவின்றித்
தடுமாறுகின்றோம்-தந்தையே!
மின்னலென வந்த உம் பிரிவால்
நெஞ்சுருகித் தவிக்கின்றோம்
எம் இதயத்து வேதனைகளைச்
சொல்லவும் மொழியுண்டோ? அல்ல
மாற்றத்தான் வழி உண்டோ?
வெந்து வெந்தே உம்வழி
சேரலே உறுதி ஐயா.

உங்கள் நினைவுகளைச் சுமந்து நிற்கும் குடும்பத்தினர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தீர்வுப் பேச்சுக்கள்

## ஐ.தே.க. கையில் பந்து

தமிழ் கட்சிகளோடு அரசாங்கம் வகுத்துள்ள தீர்வுத் திட்டம் தொடர்பான ஆராய்வுகள் முற்றுப் பெறாத நிலையில், முக்கியமான விடயங்கள் பற்றி இன்னும் முடிவு காணப்படாத நிலையில், எதிர்க்கட்சியான ஐ.தே.க.வுடனான ஆராய்வுகள் தற்போது நிகழ்ந்தேறி வருகின்றன.

ஐ.தே.க.வும், கடந்த கால எதிர்க்கட்சிகளைப்போல் நடந்து கொள்ளாமல் இணக்கப்பாடொன்றைக் காணுவதற்கு ஒத்துழைப்பதாகத் தெரிவித்து இப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

இதேவேளை நோர்வே, அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமான ஒரு பேச்சுவார்த்தையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இப் பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணையாளராகச் செயற்பட முன்வந்த நோர்வேயின் முன்னைய அரசாங்கம், உள்நாட்டு நெருக்கடிகளால் பதவி கவிழ்க்கப்பட்ட போதிலும், தற்போது உருவாகியிருக்கும் புதிய அரசாங்கமும், இப் பாத்திரத்தை வகிக்க மனமுவந்து முன்வந்துள்ளதால், இதில் அஞ்சப்படத்தக்கவாறான எவ்வித பின்னடைவும் ஏற்படவில்லை.

மாறாக, இப் பேச்சுவார்த்தைகளுக்கான தன் கரிசனையின் நிமித்தம் இப்பேச்சுவார்த்தையில் முக்கிய பங்கு வகிக்கும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் சிறுநீரகக் கோளாறுக்கான சிகிச்சையை நோர்வே அரசாங்கமே பொறுப்பேற்று மேற்கொண்டு, தன் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியது.

சிகிச்சைக்குப்பின் தேறிவரும் அன்ரன் பாலசிங்கம் மீண்டும் லண்டன் வந்தபின் இப் பேச்சுவார்த்தை தொடர்பான தனது கருத்துக்களை பேட்டியொன்றில் தெரிவித்திருந்தார். இதில் புலிகள் பேச்சுவார்த்தைக்கு விதித்திருந்த முன்னைய நிபந்தனைகளிலிருந்து ஒரு பிரதானமான விட்டுக்கொடுப்பை அவர் தெரிவித்திருந்தார்.

புலிகள் முன்னர் மூன்று முக்கிய முன்நிபந்தனைகளைக் கொண்டிருந்தனர். பேச்சுவார்த்தைக்கான சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு, அரசாங்கம் பொருளாதாரத் தடைகளை நீக்கி, தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து தனது படைகளை வாபஸ் பெற்று, ஒரு யுத்த நிறுத்தத்துக்கு முன்வர வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

எனினும் பாலசிங்கத்தின் தற்போதைய போட்டியில், அரசாங்கத்தின் படைகள் தமிழ்ப் பகுதிகளிலிருந்து வாபஸ் பெறப்படவேண்டுமென்பதை பேச்சுவார்த்தைக்கான முன்நிபந்தனையாகத் தாம் அழுத்திப் பிடிக்கப்போவதில்லையென்றும், படைகளை முகாம்களுக்குள் முடக்கி வைத்திருந்தால் போதுமெனவும் தமது நிபந்தனைகளிலிருந்து ஒரு விட்டுக்கொடுப்புக்கு முன்வந்திருந்தார்.

இது, புலிகள் தரப்பில் பேச்சுவார்த்தைக்கான ஆர்வத்தைக் காட்டும் ஒரு நல்ல சமிக்ஞையாக இருக்கும் அதேவேளையில் அரசாங்கம் இதற்கும் உடன்படுமா என்பது சந்தேகமே.

அவ்வாறு படைகள் முகாம்களுக்குள் முடக்கப்படுமேயானால் புலிகள், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்குள் ஊடுருவி விடுவார்களென்ற அச்சமே இதற்குப் பிரதான காரணம். புலிகளுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், ஊடுருவிய புலிகள் அப்பகுதியில் அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கும், படைகளுக்கும் பாரிய சவாலாக ஆகிவிடுவார்கள் என்றே அவர்கள் அஞ்சுகிறார்கள்.

அதேவேளை பேச்சு வார்த்தைக்கான மற்றைய நிபந்தனையான யுத்த நிறுத்தத்துக்கும் அரசாங்கம் சாதகமான பதிலெதையும் இன்னும் வழங்கவில்லை. அரசாங்கத்தைப் பொறுத்த வரை யுத்தத்துக்கு மத்தியில் பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாடே இருந்து வருகிறது.

எனவே புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான தடைகள் இன்னும் முழுமையாக நீங்கவில்லை. இவற்றை நீக்கி, பேச்சுவார்த்தைக்கான களத்தை உருவாக்குவதில்தான் அனுசரணையாளர்களாக முன்வந்துள்ள நோர்வேயின் பங்களிப்பு முதற்கட்டமாக இப்போது அவசியப்படுகிறது.

இதேவேளை அத்தகையதொரு பேச்சுவார்த்தையில் அரசாங்கம் புலிகளைத் திருப்தி செய்யக்கூடிய தனது தீர்வுத் திட்டத்தை முன்வைப்பது அவசியமானது. அதற்கான முயற்சியிலேயே அரசாங்கம் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அதன் முக்கியமான ஒரு கட்டமாக எதிர்க்கட்சியான ஐ.தே.க.வுடன் இணக்கங்களைக் காண அது முயற்சித்து வருகிறது.

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் அரசியல் தீர்வுத் திட்டத்தில் இணக்கம் காண முன்வந்து பேச்சுவார்த்தைகளை நடத்துவதை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் வரவேற்றிருக்கிறார். இது நல்ல முயற்சியெனக் கருத்துத் தெரிவித்த அவர், அதேவேளை இக் கட்சிகள் காணக்கூடிய இணக்கம் எத்தகையது என்பதைப் பற்றிய எச்சரிக்கையையும் விடுத்துள்ளார்.

இக் கட்சிகளிடையே காணப்படும் இணக்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் அமையாவிட்டால், அவர்கள் இணக்கம் கண்டது எமக்கு எவ்விதத்திலும் உபயோககரமானதாக அமையப் போவதில்லையெனவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஒரு புறத்தில் இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணுவதில் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிக்குமிடையிலான இணக்கமென்பது அவசியப்பட்டிருக்கும் போது, அவ்விணக்கமானது தமிழ்த் தரப்பினருடனும் பொருந்தக்கூடிய வகையில் அமைவதே முக்கியம்.

இந்த வகையில் தற்போது அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்குமிடையில் நிகழ்ந்தேறும் பேச்சுவார்த்தைகள் எவ்வளவு நம்பிக்கை தரக்கூடியனவாக உள்ளன என்பது அக்கறைக்குரிய விடயம்.

அரசாங்கம் தமிழ்க் கட்சிகளோடு இணக்கம் கண்ட சில விடயங்கள் ஐ.தே.க. வுடனான பேச்சுவார்த்தைகளில் தளர்வுபடுத்தப்படுவதற்கான அறிகுறிகளைக் காண முடிகிறது.

பிராந்தியங்களுக்கான ஆளுநரை நியமிக்கும் விடயத்தில் மத்திய அரசாங்கத்தின் பிடியை வலுப்படுத்த வேண்டுமென்ற வகையில் எதிர்க்கட்சியின் கருத்துக்கள் அமைகின்றன. தமிழ்க் கட்சிகளே ஆளுநர், பிராந்திய முதலமைச்சரின் சிபாரிசின் பேரில் நியமிக்கப்படவேண்டுமென்ற கருத்தையே கொண்டிருக்கின்றன. அப்போதுதான் அப் பிராந்தியத்தின் செயற்பாடுகளுக்கு ஆளுநர் ஒரு தடையாக இருக்க மாட்டாரென்பது அவர்களது வாதம். ஆனால் ஆளுநரை மத்திய அரசாங்கத்துக்கு விசுவாசமானவராகப் பேணக்கூடிய வகையிலேயே இந் நியமனம் அமைவதை ஐ.தே.க. விரும்புகிறது. இதில், தமிழ்க் கட்சிகளுடன் அரசாங்கம் கண்ட இணங்கத்தை அது தளர்த்தும் முகமாகவே வாதித்து வருகிறது.

அதேவேளை, 'பிராந்தியங்கள்' என்ற பதத்திலும் ஐ.தே.க. திருப்தியடையவில்லை. அத்தோடு இலங்கையின் ஆட்சி முறைக்கான பெயர் 'பிராந்தியங்களின் ஒன்றியமாக' அமைவதையும் ஐ.தே.க. ஏற்கவில்லை. அமெரிக்கா போன்ற நாடுகளில், ஏற்கெனவே தனித்தனி ராஜ்யங்களாக இருந்த குடியரசுகள் ஒன்றிணைந்தமைக்கு 'யுனைட்டட்' என்ற அப்பதம் பொருந்தலாம். ஆனால் இங்கே ஏற்கெனவே ஒரே ராஜ்யமாக இருந்த பகுதிகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கும் செயற்பாட்டினை அவ்வாறு குறிப்பிடுவது பொருந்தாதென ஐ.தே.க வாதித்து வருகிறது.

எனவே, ஏற்கெனவே தமிழ்க் கட்சிகளுடனான பேச்சு வார்த்தைகளில் அரசாங்கம் இணக்கம் கண்ட விடயங்களும் மீண்டும் கேள்விக்குள்ளாக்கப்பட்டு வருவதையே காணக்கூடியதாக இருக்கிறது.


இதைவிட, அதிகாரப் பங்கீட்டுக்கான அலகு அதாவது வடக்கு கிழக்கு, இணைப்பு, முஸ்லிம் தனி மாநிலக் கோரிக்கை போன்ற பிரதான விடயங்களுக்கு இப் பேச்சுவார்த்தை இன்னும் வரவில்லை. அத்தோடு பங்கிடப்படும் அதிகாரங்கள் குறித்த தெளிவான வரையறையையும் ஈட்டவில்லை.

இந் நிலைமையைக் கையாள அரசாங்கம் மேற்கொள்ளக்கூடிய அடுத்தகட்ட சாணக்கியம் தமிழ்க் கட்சிகளை ஐ.தே.க.வுடன் இணக்கம் காணும் படியான பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பதே.

இதன் மூலம் அரசாங்கத்துக்கு சில நன்மைகள் உள்ளன. அதாவது தமிழ்த் தரப்பினரின் அபிலாஷைகளை அரசாங்கம் மதிப்பதாகக் காட்டிக் கொண்டு அதற்கு ஐ.தே.க. தான் தடையாக இருப்பதான அபிப்பிராயத்தை தமிழ் மக்களிடையே உருவாக்கலாம்.

அதேவேளை, ஐ.தே.க. தமிழ்த் தரப்பினருடன் இணக்கம் காணுவார்களாயின், அரசாங்கம் சிங்கள மக்களின் நேரடி எதிர்ப்புக்கு உள்ளாகாமல் தவிர்க்கலாம். அத்தோடு, அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்க முன்வரும் உரிமைகளைவிட அதிகமாக ஐ.தே.க ஒருபோதும் வழங்கப் போவதில்லை, மாறாக அதிலிருந்து எவ்வளவு குறைக்க முடியுமோ அதற்கே முயலுமென அரசாங்கத்துக்குத் தெரியுமாகையால், தமிழ்க் கட்சிகளுடன் ஐ.தே.க பேசுவதால் அதிகப்படியான உரிமைகளை அரசாங்கம் வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படப்போவதில்லையென்ற நம்பிக்கை அதற்கு உண்டு.

ஏற்கெனவே அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையிலேயே, தமிழ்க் கட்சிகள் விட்டுக் கொடுப்புகளுடன்தான் இணக்கங் கண்டன. அதிலும் சில முக்கியமான விடயங்கள் பேசப்படவே இல்லை. இப்போது ஐ.தே.க அவ்விடயங்களில் மேலும் தளர்வுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துமிடத்து தமிழ்க் கட்சிகள் அவற்றுக்கு இணங்கப் போவதில்லை. அதிலும் இன்னும் பேசப்படாத, முக்கிய விடயங்கள் எடுத்துக் கொள்ளப்படும்போது சர்ச்சை உருவாக இடமுண்டு.



இந்நிலையில் ஐ.தே.க. தான் ஒரு விட்டுக்கொடுப்புக்கு வந்தாக வேண்டும், அல்லது இப் பேச்சுவார்த்தைகள் முறியும். அதன் முறிவுக்கான பழியை அதுவே சுமக்க வேண்டும் என்ற ஒரு நிலைமைக்கு அது தள்ளப்படும்.

அதாவது 'பந்து இப்போது ஐ.தே.க.வின் கையில்!' அதனை அது எவ்வாறு கையாளப்போகிறது என்பதைப் பொறுத்தே அதனது திறமை புலப்படும். திறமை மட்டுமல்ல அரசியல் எதிர்காலமும்தான் இங்கே சோதிக்கப்படவுள்ளது.

இவ்வாறு பந்தை ஐ.தே.க.வின் கைகளுக்கு மாற்றிவிட முனையும் அரசாங்கத்தின் தந்திரத்தின் மூலம் ஐ.தே.க.வுக்கு மற்றொரு இக்கட்டையும் அது ஏற்படுத்தியுள்ளது.

அதாவது எப்படி ஆடியாவது தீர்வு ஒன்று ஏற்பட ஐ.தே.க. வழி செய்தாக வேண்டிய ஒரு பொறுப்பை அது மறைமுகமாகச் சுமத்தியுள்ளது. தமிழ்க் கட்சிகளுடன் முரண்பட்டோ, அல்லது சிங்களத் தீவிரவாதிகளின் அழுத்தத்துக்குப் பணிந்தோ ஐ.தே.க. தனது கையில் தரப்பட்ட அப்பந்தை கைவிட இயலாது. அவ்வாறு தீர்வுத் திட்டத்தை அது குழப்பியடித்தால், வெறுமனே 'குழப்பல் காரன்' என்ற பட்டம் மட்டுமல்ல, ஐ.தே.கவே குழம்பிப் போக வேண்டிய ஒரு நிலமைக்கான தயாரிப்பொன்றையும் அரசாங்கம் மறுபுறமாக மேற்கொண்டு வருகிறது.

அது என்னவெனில், ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிரலோடு அது இரகசிய உடன்பாடொன்றை ஏற்படுத்தி வருகிறது. பேச்சுவார்த்தையில் ஐ.தே.க. குழப்பும் பட்சத்தில் இவ் ஐ.தே.க. உறுப்பினர்களின் ஆதரவோடு தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றவே இந்த ஏற்பாடு.

இதன் மூலம் ஐ.தே.க. விற்கு பாரிய அவமானத்தை ஏற்படுத்துவதுடன் ஐ.தே.க.வின் உள்ளேயே பிளவுகளையும் குழப்பங்களையும் விளைவிக்கக்கூடியதாக பொ.ஜ.மு.க்கு இருக்கும். இதற்குத் தயாராக சுமார் 14 ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களை பொ.ஜ.மு இரகசியமாக வென்றெடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

அவ்வாறு ஆதரவளிக்கும் ஐ.தே.க.வினருக்குப் பிரதி உபகாரமாக பாராளுமன்றத்தின் காலத்தை 2 வருடங்களுக்கு நீடித்துத் தருமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஐ.தே.க. வைப் பொறுத்தவரையில் தற்போது உடனடியான தேர்தலுக்கு முகம் கொடுக்கத் தயக்கம் காணப்படுகிறது. இதுவரை தொடர்ச்சியாகப் பெற்றுவந்த தோல்வியிலிருந்து மீளக்கூடிய மாற்று உந்து சக்தி எதையும் அது இன்னும் புதிதாக ஈட்டவில்லை.

முன்னர் பொ.ஜ.மு.வின் மீது ஐ.தே.க. போட்டிருந்த குற்றச்சாட்டுக்களெல்லாம் பழுதாகி ஜனாதிபதித் தேர்தலுடன் அடிபட்டுப் போய்விட்டது. எனவே புதிய குற்றச்சாட்டுகள் தேட வேண்டிய அவகாசம் அதற்குத் தேவைப்படுகிறது.

சிறுபான்மையினரின் ஆதரவு கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்ததுபோல் மறுபடியும் அதற்குக் கிடைக்க வாய்ப்பில்லை. காரணம், இப்போது அதற்கான "விடயப் பொருள்' மாறிவிட்டது. அதாவது-பேச்சுவார்த்தை-தீர்வு, என்ற விடயங்களை பொ.ஜ.மு.கையிலெடுத்து மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்கும் உடன்பட்டு, ஒருசில கட்டங்களுக்கு நகர்ந்துவிட்டது. ஐ.தே.க அதில் புதிதாக எதையும் செய்வதாகக் கூற முடியாது. அத்தோடு, அது ஏதும் நன்மை செய்வதாயின் அதை அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தையில் வெளிக்காட்டியிருக்க வேண்டும். இவற்றைவிட இத் தேர்தல் பொதுத் தேர்தலாகையால் அதில் சிறுபான்மைத் தமிழ்க் கட்சிகள் போட்டியில் இறங்கும்போது, ஐ.தே.க. பக்கம் ஆதரவு திரும்ப வழியில்லை.

அதனால் சிறுபான்மையினரின் கதவு இம்முறை அதற்கு அடைபட்டுப் போய்விடும்.

இவற்றைவிட தேர்தலை அரசாங்கம் ஆலோசித்து வரும் புதிய முறைப்படி நிகழ்த்துமாயிருந்தால் அதாவது தொகுதி ரீதியான தெரிவுகளையும் விகிதாசாரத் தெரிவுகளையும் கலந்த வகையில் நிகழ்த்துமானால், அதிலும் ஐ.தே.க. தொகுதி ரீதியான தெரிவுகளில் வீழ்ச்சியைக் காணக்கூடிய நிலமையே உள்ளது.

இதே நேரம் ஐ.தே.க.வுக்கு புதியதொரு ஆபத்து இன்னொரு புறத்திலிருந்து முளைவிடுகிறது. அதுதான், சிறிசேன கூரே, திருமதி ஹேமா பிரேமதாஸா ஆகியோர் அமைத்துவரும் புதிய கட்சி தேர்தலில் குதிக்கும் ஆபத்து. அவர்கள் தேர்தலில் குதிப்பார்களானால் பல ஐ.தே.க அதிருப்தியாளர்களும் அதன் பக்கம் குடைசாயலாம். அத்தோடு பிரேமதாஸா ஆதரவு வாக்கு வங்கி பறிபோய்விடும். ஏற்கெனவே லலித் அத்துலத் முதலியின் வாக்குவங்கியை அது இழந்திருந்தது.

இந்நிலையில், பொதுத் தேர்தலை முகம் கொடுக்க ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது விருப்பமில்லாத நிலைமையே காணப்படுகிறது. அடுத்த தேர்தலில் தாம் திரும்பவும் பாராளுமன்றத்துக்குத் தெரிவாக முடியுமா என்ற சந்தேகம் தான் பிரதான காரணம்.

எனவே பாராளுமன்றத்தை நீடிக்கும் எண்ணத்துக்கு பல ஐ.தே.க. பா.உ.களுக்கு உள்ளூர ஆதரவு உள்ளது.

அதற்கான சாட்டு ஒன்றே அவர்களுக்கு அவசியப்பட்டு இருக்கிறது. அத்தகைய சாட்டாக 'இனப்பிரச்சனைக்கு தீர்வு கண்டு சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கத்துக்கு ஒத்துழைக்கிறோம்' என்ற பெயரில் அவர்கள் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க முன்வர முடியும். ஐ.தே.க. பேச்சுவார்த்தைகளைக் குழப்பினால் இப்படியான ஒரு குழு மறுபக்கம் தாவும் அபாயத்தையும் கூடவே அது எதிர்நோக்க நேரிடும்.

ஏற்கெனவே, ஐவர் கொண்ட ஒரு ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் குழு மறுபக்கம் சென்றுவிட்டது. அது மட்டுமன்றி உயர், அமைச்சர் பீடங்களையும் சுவீகரித்துள்ளது. அதற்கெதிராக ஐ.தே.க தொகுத்த வழக்குக் கூட முதற்கட்டத்தில் தோல்வியுற்றுவிட்டது. அல்லது தோல்வியுறச் செய்யப்பட்டுவிட்டது.

இது, தொடர்ந்து கட்சி தாவக் கூடியவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாயுள்ளது.

எனவேதான் இப் பேச்சுவார்த்தையில் இறங்கியிருக்கும் ஐ.தே.க, தனது தலையில் சுமத்தப்பட்டுவிட்ட விடயத்தை நிதானமாகக் கையாள வேண்டியிருக்கிறது. அதனால்தான் ரணில் அண்மைய அறிக்கையில் அரசின் ஆத்தாமூட்டல்களுக்கு மத்தியிலும் சமாதானப் பேச்சுக்களைக் கைவிட மாட்டோம்" எனத் தெரிவித்திருந்தார். அதைக் கைவிட்டால், தான் எத்தகைய இக்கட்டில் மாட்ட வேண்டியிருக்குமென்பது அவருக்குத் தெரியும்.

எவ்வாறாக இருந்தாலும் ஐ.தே.க.வை இக்கட்டான நிலைமையில் மாட்டுவதால் மட்டும் இனப்பிரச்சனை தீர்ந்துவிடப் போவதில்லை. அது பெரும்பான்மைக் கட்சிகளுக்கிடையிலான பலப் பரீட்சை மட்டுமே. ஆனால் உண்மையான தீர்வுக்கு வழி, ஏதோ ஒரு வகையில் பேசுவதற்கு இன்று இனப் பிரச்சனையின் அனைத்துத் தரப்புமே முன்னிற்கின்றன. புலிகள், தமிழ்க்கட்சிகள், அரசாங்கம், எதிர்க்கட்சி, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தமாக நோர்வே நாடு ஆகிய யாவும் முன் வந்துள்ளன.

தமிழ் சிங்கள சமாதான விரும்பிகள் புலிகளிடமும் அரசாங்கத்திடமும் தூது சென்றும், மக்களாதரவுடன் பாரிய சமாதான ஊர்வலங்களை நடத்தியும் வருகிறார்கள். இந் நிலைமையை எவ்வளவு தூரம் சாதகமாகப் பயன்படுத்தி, அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும், தமிழ்த் தரப்பினர்களுக்கும் இடையே இணக்கம் கண்டு, நோர்வேயின் மத்தியஸ்தத்தினூடாக புலிகளுடன் பேச்சு வார்த்தையை நிகழ்த்தி யுத்தத்துக்கு முடிவு கட்டி நிரந்தரத் தீர்வுக்கு முயற்சிப்பதுதான் அவசியம். ■

-நரன்-

## செய்திச் சிதறல்

★ வன்னிப் பிராந்தியத்தில் கடமையாற்றி வந்த உயர்தர இராணுவ அதிகாரிகள் ஏழுபேர் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளனர். கடந்த வருடம் வன்னியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுத்துத் தாக்குப் பிடிக்காமல், ஒன்றரை வருடகாலம் ஏராளமான படையினரின் உயிர்களைப் பலி கொடுத்து, பெருந் தொகையான ஆயுதத் தளபாடங்களை இழந்து இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களை ஓரிரு வாரங்களில் புலிகளிடம் பறிகொடுக்க இந்த இராணுவ அதிகாரிகளே காரணமாக இருந்துள்ளனர் என்பதே இவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டாகும். மேஜர் ஜெனரல் லயனல் பலகல தலைமையிலான இராணுவ உயர் மட்டக்குழுவினரே இந்த ஏழு அதிகாரிகள் மீதான குற்றச் சாட்டுகளை விசாரித்தனர்.

★ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவர் மனைவியும் வன்னி மறைவிடத்திலிருந்து வெளியேறி கடல் மார்க்கமாக தென் கிழக்கு ஆசிய நாடு ஒன்றுக்குச் சென்று அங்கிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தில் உதவியுடன் இலண்டன் மாநகரை அடைந்ததாகக் கூறியுள்ளார். இலண்டனிலிருந்து வெளியாகும் 'தமிழ் கார்டியன்' சஞ்சிகைக்கு அவர் வழங்கிய பேட்டி ஒன்றில் இதனை திரு. பாலசிங்கம் கூறியுள்ளார். பாலசிங்கம் தம்பதியினர் இலங்கையிலிருந்து இங்கிலாந்துக்கு எவ்வாறு சென்றார் என்று வினவிய போது தனக்கு எதுவும் தெரியாதென இங்குள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் கூறிவிட்டது. திரு.பாலசிங்கத்திடம் பிரிட்டிஷ் கடவுச்சீட்டு இருப்பதனால் அவர் இங்கிலாந்துக்கு எப்போது வேண்டுமானாலும் வருவதற்கு உரிமை இருக்கிறது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறிவிட்டது.

★ யாழ்ப்பாணத்தில் 25ம் திகதி சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமாதான யாத்திரையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகிய மூவின மக்களும் அணி திரண்டு மாபெரும் சாதனையை நிலை நாட்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★ கிளிநொச்சிப் பிரதேசத்தில் மீளக் குடியேற முயற்சிக்கும் குடியிருப்பாளர்கள் பயங்கரமான அனுபவத்தை அடைந்து வருகின்றனர். அவர்களுடைய பழைய குடியிருப்பு-வீடுகளை துப்புரவு செய்யும் போது மலசலகூடங்களைத் திறந்து பார்க்க நேர்ந்தால் அவற்றுள் மனித எலும்புக் கூடுகளே காணப்படுவதாகக் கூறப்படுகிறது. இதுவரை இவ்வாறு மொத்தம் 42 எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இதுவரை அரசாங்கம் எத்தகைய தகவல்களையும் தெரிவிக்கவில்லை. கிளிநொச்சி இராணுவ வசம் இருந்தபோது அப்பிரதேசத்தில் தமது உடமைகளைத் தேடச் சென்றதாகக் கூறப்பட்ட நூற்றுக்கணக்கானோர் மறைந்த மாயம் இப்போதுதான் வெளிச்சத்துக்கு வருகிறது. அத்தனை அப்பாவிகளையும் உயிரைப் பறித்தோ அல்லது உயிருடனோ மலசல கூடங்களுக்குள் போட்டு மூடியிருக்கிறார்கள். எலும்புக் கூடுகளின் தொகை மேலும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ○

-ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

தமிழ்நாட்டு
மண்ணில்
ஒரு இந்தியத் தலைவர்
கொலை செய்யப்பட்ட-
ராஜீவ் காந்தி
படுகொலைச் சம்பவமானது
தமிழ்நாட்டுச் சூழ்நிலையில்
பெரும் மாற்றத்தை
ஏற்படுத்திவிடத்தான்
செய்தது.

83 ஜுலைக் கலவரத்தில்
இலங்கைத் தமிழருக்கு
அடைக்கலம் கொடுத்து,
விடுதலைப் போராளிகளுக்கு
ஆதரவு கொடுத்து,
இன உணர்வினால்
பொங்குகிநின்ற தமிழ்நாடு
தலைகீழாக மாறியது.

இலங்கைத் தமிழருக்கு
வீடுகள் கொடுக்கவே
தயக்கம் ஏற்பட்டது.

இந்தியப் படைகளை
எதிர்த்துக் கூட
விடுதலைப் புலிகளுக்காய்
பரிந்து பேசிய,
தமிழ்நாட்டு முதலமைச்சர்
கருணாநிதியின் ஆட்சி
கலைத்தெறியப்பட்டது.

அடுத்து நிகழ்ந்த
தமிழ் நாட்டுத் தேர்தலில்
இந்த எதிர்ப்பலை
அவரை ஒரம் கட்டி
மூலையில் ஒதுக்கியது.

இதே வேளை
தமது அரசியலுக்காக
புலிகளை ஆதரித்துச்
செல்வாக்கை ஈட்டமுனைந்த
அதே கருணாநிதி,
தலைகீழாக மாறி
புலி எதிர்ப்பு வாதியாகத்
தன்னை அடையாளப்படுத்த
பகீரதப் பிரயர்த்தனம்
செய்தார்.


புலிகள் தன்னைக்
கொலைசெய்ய முயல்வதாக
அபாண்டமான ஒரு
பழியைத் தூக்கிப்போட்டார்.

இந்தியப் படைகளுக்கும்
புலிகளுக்குமிடையில்
மோதல் நிகழ்ந்தபோது
இரகசியமாக
வள்ளத்தில் சென்று
புலிகளின் தலைவர்
பிரபாகரனைச் சந்தித்தவர்
தி.மு.க.வின்
துணைத் தலைவராக
வர்ணிக்கப்பட்ட
வை.கோபாலசாமி.

அவருடன் ஏற்பட்ட
பிணக்கின்போது
கருணாநிதிக்கு
வை.கோ.மீது
சுமத்துவதற்குக் கிடைத்த
பாரிய குற்றச்சாட்டும்
புலிகளைக் கொண்டு
வை.கோ. தன்னைக்
கொலைசெய்ய முயல்கிறார்
என்ற பழியே!

அதேவேளை
ராஜீவ் கொலையின் பின்
ஆட்சிக்கு வந்த
ஜெயலலிதா கூட
புலிகளை எதிர்க்கும்
கடும் நிலைப்பாட்டையே
கடைப்பிடித்தார்.

ஆனால் முன்னர்
அவரது அதே கட்சியின்
தனிப் பெரும் தலைவர்
எம்.ஜி.ஆர். அவர்கள்
புலிகள் இயக்கத்துக்குப்
பேராதரவு வழங்கியவர்.
அரசியலிலே
நண்பனும் இல்லை,
எதிரியும் இல்லையென
எப்போதும் கூறுவதுண்டு.



சத்தியன்

அப்போது அது
எத்தனை உண்மையென்பதை
இந்த அரசியல்வாதிகள்,
புலிகள் விடயத்தில்
எடுத்துக் கொண்ட
சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள்,
எடுத்துக் காட்டுவதாய்
அமைந்திருந்தன.

ஆனாலும் கூட
இத்தகைய ஒரு
பாரதூரமான நிலைமை
தமிழ்நாட்டில் ஏற்பட்டமை
புலிகளுக்கு எவ்வித
சஞ்சலத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஏனெனில்,
தமிழ்நாட்டு அரசியலையும்
அங்குள்ள அரசியல்வாதிகளையும்
புலிகள் நன்கு
எடைபோட்டிருந்தனர்.

பின்னாளில் அவர்களைத்
தமக்கேற்றவாறு
மாற்றிக் கொள்ள
முடியுமென்பதைப்
புலிகள் நம்பினர்.
அந்த நம்பிக்கை
உண்மை என்பதை
இப்போது அங்கு
காண முடிகிறது.

எந்த ராஜீவ்காந்தியின்
படுகொலை தன்னை
ஆட்சியிலிருந்து
தூக்கி எறிந்ததோ
அதே படுகொலையின்
குற்றவாளிகளுக்கு
மரண தண்டனையை
நீக்கும்படியாக
கருணாநிதியே
கோரும் நிலை தோன்றியுள்ளது.

அது மட்டுமல்லாமல்,
புலிகள் மூலம்
தன்னைக் கொலைசெய்யச்
சதித்திட்டம் தீட்டியதாகக்
குற்றம் சாட்டி
கட்சியிலிருந்து விலக்கிய
வை.கோ.வுடனேயும்,
புலிகளின் தீவிர
ஆதரவாளரான
ராமதாஸின்
பாட்டாளி மக்கள்
கட்சியுடனும்
கருணாநிதி இப்போது
கரம் கோர்த்தபடி
கூட்டணி கட்டவும்
கூடியதாய் இருந்தது.

தமிழ் நாட்டு அரசியலில்
மட்டுமல்ல,
மொத்தமான
இந்திய அரசியலிலும்
ராஜீவ் கொலையுடன்
ஏற்பட்டிருந்த
புலிகளுக்கெதிரான
உணர்வு நிலை
இப்போது மிகவும்
தளர்வு கண்டு விட்டது.

ராஜீவின் மனைவி
சோனியா காந்தி கூட
ராஜீவ் கொலையாளிகளுக்கு
மரணதண்டனையிலிருந்து
மன்னிப்பளிக்கும்படி
பரிந்துரை விடுத்துள்ளார்.

இதே வேளை
ராஜீவ் காந்தி
படுகொலை விடயத்தில்
எமது தமிழ்மக்கள்
எப்படிச் செயற்பட்டனர்,
என்பது கூட
புலிகளைக் காக்கும்
அவர்களின் மனோபாவத்துக்கு
இன்னொரு உதாரணமாகும்.

ராஜீவ் காந்தியைப்
படுகொலை செய்தது
புலிகளாக
இருக்க மாட்டாதெனவே
அவர்கள் முதலில்
வாதித்து வந்தனர்.
விசாரணையின் போது
பல்வேறு சான்றுகள்
கண்டுபிடிக்கப்பட்டு
முன்வைக்கப் பட்டபோது கூட
நீதி மன்றத்தில்
இவைகள் இன்னும்
நிரூபிக்கப் படவில்லையென
மறுத்து வந்தனர்.

நீதி மன்றமே
புலிகளின் செயலெனத்
தீர்ப்பு வழங்கித்
தண்டனை தீர்த்த பின்னர்,
ராஜீவ் காந்தியின்
இந்தியப் படைகள்
இலங்கையில் செய்த
அநியாயங்களைக்கூறி
ராஜீவ் மீதே
குற்றம் சுமத்தினர்.

ராஜீவ் காந்தியைக்
கொலை செய்தது
புலிகள்தான் எனத்
தெரிய வந்தபின்பு
அந்தக் கொலை
நியாயமானதா என
ஆராய்வதன்றி
அந்தக் கொலையை
நியாயப்படுத்துவதே
அவசியமென
மக்கள் நினைப்பார்களாயின்
புலிகளின் வெற்றி
அங்குதான் உள்ளது.

ராஜீவ் கொலையில்
புலிகளுக்கு ஏற்பட்ட
தோல்வியிலும் கூட
அவர்கள் ஈட்டிய
வெற்றி இது.

அந்தத் தோல்வியும்
தவிர்க்கப் பட்டிருக்கலாம்
எதிர்பாராத சில விடயங்கள்
காலை வாரி விட்டன.

அந்நிய மண்ணில்
மேற்கொள்ளப் பட்ட
மிகப்பெரிய திட்டமென்பதால்
அத்தனை அம்சங்களும்
கச்சிதமாய் நிறைவேறுவது
எதிர்பார்க்க முடியாததுதான்.
இந்தத் திட்டத்தில்
ஆறு அம்சங்கள்
அமைந்திருந்தன.

முதலாவது,
காரியத்தைச் செய்வதற்கான
ஏற்பாடுகளை மேற்கொள்ளுவது.


இரண்டாவது,
செய்யப் போகும் விடயம்
எவருக்குமே வெளிப்படாதவாறு
இரகசியத்தைப் பாதுகாப்பது.

மூன்றாவது,
காரியத்தைக்
கச்சிதமாக நிறைவேற்றுவது.

நான்காவது,
தடயங்களை அழிப்பது.

ஐந்தாவது,
தப்பிப்போவது.

ஆறாவது,
தம்மீது சுமத்தப்படக்கூடிய
சந்தேகங்களுக்கும்
பழிகளுக்கும் எதிராக
மறுப்புத் தெரிவித்து
தாம் செய்யவில்லையெனப்
பிரசாரம் செய்து
நம்பவைப்பது.



இந்த ஆறு அம்சங்களில்
முன்னையவை யாவும்
கச்சிதமாக நிறைவேறினாலும்
நான்காவது, ஐந்தாவது,
அம்சங்கள்,
அதாவது,
தடயங்களை அழிப்பதும்
தப்பிப் போவதும்
தவறுற நேர்ந்தது.

தடயங்களை அழிப்பது
புலிகளின் கையில்
பெருமளவு தங்கியிருக்கவில்லை.

இந்தியாவில் இருக்கக்கூடிய
துப்பறியும் தொழில் நுட்பத்தை
புலிகள் அத்தனைதூரம்
எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனால்,
தப்பிப்போகும் விடயத்தில்
கோட்டை விட நேர்ந்தது
புலிகளின் தவறுதான்.

அந்தப் பாகம் மட்டும்
ஒழுங்காக நிறைவேறியிருந்தால்
ராஜீவ் கொலையால்
இத்தனை பின்னடைவு
புலிகளுக்கு ஏற்பட்டிருக்காது.

எனினும்
அதையும் கூட
அவர்கள் சமாளித்தார்கள்.

அடுத்த இதழில்
அதனைப் பார்ப்போம்.

(இன்னும் நகரும்)

---

அண்டை மண்டலத்தில்....

# இந்தியாவில் கிளின்ரன்

எங்கும் எதிலும் கிளின்ரன். ஒரு வார காலம் இந்தியாவின் ஆளும் வர்க்கம், மற்றும் அதன் எடுபிடிகளாகச் செயல்படும் நடுத்தர மக்கள் எல்லோருக்கும் கொண்டாட்டம். பத்திரிகைகள், டி.வி.சேனல்கள், எல்லாவற்றையும் அமெரிக்க அதிபரே ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். ஏதோ வானுலகத்திலிருந்து இந்தியரை ரக்ஷிக்க ஒரு தேவதூதர் வந்துவிட்டதைப் போல ஒரே ஆர்ப்பாட்டம். பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும்கூட ஏறத்தாழ அதே நிலை தான். கிளின்ரன் போதையில் இந்தியத் துணைக்கண்டமே தள்ளாடிக் கொண்டிருந்தது போலத்தோன்றியது.

இவற்றையெல்லாம் கண்டு மெய்மறந்து போன இலங்கை அரசியல்வாதிகள் சிலர்கூட அந்த மகா மனிதரை தங்கள் தீவிற்கு அழைக்கத் தெரியாத அதிபர் சந்திரிக்காவை குறைகூறியதாகச் சில செய்திகள் இந்தியாவில் வெளியாகின.

சற்று சிந்தித்தால் அல்லவா தெரியும், கிளின்ரன் வந்து போனதால் எந்த நாட்டுக்கும் பெரிதாக லாபம் ஏதும் கிடைக்கவில்லை என்று. இந்தியாவில் மக்களாட்சிக்கு ஆதரவென்றார். பங்களா தேச மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக அமெரிக்கா இருந்ததற்காக வருத்தம் தெரிவித்தார். பாகிஸ்தானுக்குச் சென்று காஷ்மீர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு வேண்டுமென்றார். இருபத்தியோரு குண்டுகள் முழங்க விமானமேறி தன் நாட்டுக்குத் திரும்பினார். இடையில் மாலை மரியாதைகளை வாங்கிக் கொண்டார். தன் பெண், மற்றும் மாமியாருடன் ஊர் சுற்றிப் பார்த்தார்.

அதைத்தவிர வேறென்ன நடந்தது? இந்தியாவிற்கோ அல்லது பாகிஸ்தானிற்கோ விதிக்கப்பட்டிருக்கும் தடைகளிலிருந்து விலக்கு எதனையும் அறிவித்தாரா? இல்லையே.

கம்ப்யூட்டர் பயிற்சி பெற்றவர்கள் அமெரிக்காவிற்குள் அதிக எண்ணிக்கையில் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும் என்று மாற்றி மாற்றி, வெட்கத்தைவிட்டு, இந்தியர்கள் கெஞ்சினார்களே! அதற்கும் பலனேதும் இல்லை. அல்லது பெரிய அளவில் நிதி உதவி, அல்லது முதலீடு குறித்து எதும் வாக்குறுதி, ஊஹூம்.. ஒன்றுமில்லை, ஒன்று மேயில்லை.

'எங்கள் நாட்டிற்கு உலகிலேயே மிகவும் வலிமை வாய்ந்த நாட்டின் அதிபர் வந்து விட்டுப்போனார்' என்ற வறட்டுப் பெருமைதான்.



இந்திய அரசியல்வாதிகளும் பத்திரிகையாளர்களும் வழிந்த வழிசலைக் கண்டு வலதுசாரிகள்கூட தர்மசங்கடத்தில் நெளிந்தார்கள். நாடாளுமன்றத்தில் கிளின்ரன் பேசி முடித்த பிறகு அவரைச் சூழ்ந்து கொண்ட எம்.பிக்களின் ஆர்வம்தான் என்னே!

பெண் எம்.பிக்கள் உட்பட பலர் ஒரு முறை கை குலுக்கியதில் திருப்தியடையாமல் மீண்டும் மீண்டும் கைகுலுக்கினர். சிலர் அவரது இரு கைகளையும் பிடித்துக் கொண்டனர்.

ஒரு கட்டத்தில் கிளின்ரன் அயர்ந்து போய் சினிமா நடிகர்கள் பாணியில் தனது கைகளை உயர்த்தி அசைத்துவிட்டு, ஆளை விடுங்கப்பா என்று சொல்லி நழுவிவிட்டார். கைகுலுக்க முடியாத அரசியல் வாதிகளுக்கு பெரும் ஏமாற்றமாம்.

அது மட்டுமல்ல அவரது மகள் செல்ஸியையும்கூட நம் எம்.பி.க்கள் விட்டு வைக்கவில்லை. ஒருவர் மேல் விழுந்தடித்துக் கொண்டு

## கண்ட பலன் ஒன்றுமில்லை

செல்ஸியுடன் கைகுலுக்கினர். அவர்களின் வேகத்தால் பயந்துபோன செல்ஸி, ஹல்லோ மட்டும் சொல்லிவிட்டுத் தப்பினார் என்றார் ஒரு பத்திரிகையாளர்.

சிகரம் வைத்தாற்போன்ற ஒரு கூத்தும் நடந்தது அப்போது. ஒரு பெண் காங்கிரஸ் எம்.பி. வித்தியாசமாக ஏதாவது செய்ய வேண்டும் அல்லது சொல்ல வேண்டும் என்ற ஆசையில், செல்ஸியை நெருங்கிய அந்த ஒரு கணத்தில், "நீங்கள் இந்தியாவிற்கு வந்தது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறோம். நீங்கள் இன்னொரு முறையும் வரவேண்டும். ஆனால் அமெரிக்க அதிபராக!" என்று வாயெல்லாம் பல்லாகக் கூறினார்.

20 வயது செல்ஸிக்கு ஒன்றும் புரிந்திருக்காது. அவர் நாட்டில் அரசியல் வாதிகள் பரம்பரை ஆள்வதெல்லாம் இல்லையே. அவர் தெளிந்துவிட்டாராம்.

அதன் பிறகு, கிளின்ரன், மனிதகுலத்தை- தாஜ்மஹாலைப் பார்த்தவர்கள், பார்க்காதவர்கள் என்று இரு வகையினராகப் பிரிக்கலாம் என்ற ஒரு எழுத்தாளரின் கவிநயமிக்க வரிகளை நினைவுகூர்ந்து, தான் பார்த்தவர்கள் இனத்தில் சேரப்போவதாக உவகை பொங்கக் கூறிவிட்டு டெல்லியிலிருந்து ஆக்ரா விற்குப் புறப்பட்டார். இதிலே எல்லோரும் புளகாங்கிதம் அடைந்துவிட்டனர்.

ஆனால் தன் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் இந்தியா வந்த கிளின்ரன் அதற்கு முன் ஏறத்தாழ நூறு நாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறார். அவ்வளவு முக்கியத்துவம் இந்தியாவிற்கு!

அவரது குழுவினருக்கு அளித்திருந்த தகவலறிக்கையில், இந்தியாவில் கடும் ஏழ்மை நிலவுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்ததாம்.

"அதென்ன அப்படிச்சொல்லிவிட்டார்கள்? எங்கள் நாட்டில் கம்ப்யூட்டர்களில்லையா, பணக்காரர்களில்லையா, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில்லையா, பார்ட்டிகளில்லையா?

அமெரிக்கத் தூதரும் அவரது மனைவியுமே, தலைநகர் புதுடில்லியில், அப்படிப் பட்ட விருந்துகளில் கலந்துகொண்டிருக்கிறார்களே, இப்படியெல்லாம் எங்களை இழிவு படுத்தலாமா...?" புலம்பிவிட்டார், போங்கள் ஒரு பத்திரிகையாளர்.

இவர்களில் எவருக்கும் ஏதாவது தன்மானமில்லை. உலகைக் கொள்ளையடித்துக் கொண்டு, சோவியத் யூனியன் நொறுங்கிய பிறகு, தனியொரு சட்டாம்பிள்ளையாகி, எல்லோரையும் ஆட்டிப்படைத்து, சுரண்ட விரும்பும், ஏகாதிபத்தியவாதிகளுக்கு, மாற்றி மாற்றி வெண்சாமரம் வீசுவோருக்கு, அமெரிக்காக்காரன் என்ன சொல்லுகிறான் என்பதில்தான் கவலை. நாட்டை பீடிக்கும் வறுமையைப்பற்றியோ, கல்வி அறிவின்மை பற்றியோ அல்லது மற்ற பல அநீதிகளைப் பற்றியோ அக்கறையில்லை.

தமிழ் நாட்டின் தலைநகராம் சென்னையில் பார்த்தீர்களானால் அமெரிக்க தூதுவரகத்திற்கு முன்னால் அனுமார் வால் போன்ற நீளமான க்யூ. வெயிலிலும், மழையிலும், பனியிலும், எந்நேரமும், சூரியன் உதிப்பதற்கு முன் அங்கே ஆட்களைப் பார்க்கலாம். சிலர் பிளாட்பாரத்திலேயே தூங்கியும் விடுவார்கள். வசதியான அல்லது நடுத்தர வர்க்க வீட்டுப் பிள்ளைகளானாலும், விசாவுக்காக அப்படியொரு போராட்டம்.

ஒரு பெரிய புரட்சிகர அமைப்பின் முன்னணி உறுப்பினர், மக்களாட்சி என்று பேசினாலே திருத்தல்வாதிகள் என்று ஏளனம் செய்பவர். மனைவி ஒரு கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்த பிறகு, அவருக்கு அமெரிக்காவில் வேலை கிடைக்காதா என்று ஆலாய்ப் பறக்கிறார் அந்தப் புரட்சியாளர். கண்ராவி!

இப்படியொரு சூழலில், கிளின்ரனே இங்கு வருகிறாரென்றால், எப்படியாவது பிழைத்தால் போதும் என்று நினைக்கும் ஜீவன்கள், ஏன் விழா எடுக்கமாட்டார்கள்?

கானகன்

ஆனாலும் எல்லோருமே வாய்பிளந்து நிற்கவில்லை. இடதுசாரிக் கட்சிகள் கிளின்ரனின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது நாடாளுமன்ற உரையினைப் புறக்கணித்தனர்.

இதர சில அமைப்புக்களும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தின.

விந்தையிலும் விந்தை, தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும், 'ஈழத்தமிழர்களைக் கொன்று குவிக்கும் சிங்கள அரசிற்கு இராணுவ உதவியளிக்கும் கிளின்ரனே, திரும்பிப்போ!' என முழங்கி சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இடதுசாரிக் கொள்கைகளை என்றோ குழிதோண்டிப் புதைத்துவிட்ட இவர்களுக்கு திடீரென்று அமெரிக்காமீது என்ன கோபம்? ■

## அலசுவது - இராஜதந்திரி

# 'சமாதானப் பேரணிகள் சுய கௌரவங்களை அடைமானம் வைக்கலாகாது!'

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பது பற்றிய பேச்சுக்கள் மீளவும் வெளிவர ஆரம்பித்துள்ளதையடுத்து யாழ்ப்பாணத்தில் சமாதானத்தை வலியுறுத்தும் பேரணியொன்று நடத்தப்பட்டிருந்தது.

ஒரு மாதத்துக்கு முன்னர் கிழக்கில் மட்டக்களப்பிலும் அங்குள்ள மக்களால் சமாதானத்தை வலியுறுத்தி சமாதானப் பேரணியொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இனப்பிரச்சனைத் தீர்வு குறித்து மத்தியஸ்த நடவடிக்கைகளில் நோர்வே காட்டும் ஆர்வம்; ஜனாதிபதி சந்திரிக்காவும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் சமரசப் பேச்சுக்கள் சம்பந்தமாக சாதகமான முறையில் தமது நிலைப்பாடுகளை வெளியிட்டுள்ளமை, மற்றும் ஆளுங் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணி, எதிர்க் கட்சி ஆகியன ஒருமித்துப் பிரச்சனைகளை அணுக

சீரழிக்கப்பட்டுள்ளன.

அண்மைக் காலங்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பல்வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அந்த ஆய்வுகளில் விதவைகள், அநாதைகள், அகதிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளமையும், உளரீதியான பாதிப்புக்குள்ளானோர், போஷாக்கின்மை, போதியளவு மருத்துவ வசதிகளின்மை என்பவற்றால் பாதிக்கப்பட்டோரின் தொகை அதிகரித்திருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே தமது நியாயமான அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து சுய கௌரவத்துடன் வாழவே விரும்பிய வடக்கு-கிழக்கு மக்களின் நிலை, இன்று உயிர் வாழும் உரிமையையும் இழந்து சராசரி மானிடர்கள் என்ற தரத்திலிருந்தும் கீழிறங்கும் பரிதாபகரமான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டதாகவே இருக்கின்றது.

இதனையே தமிழீழ விடுதலைப் புலிகள்

முக்கிய காரணமாக அமைந்திருந்தென்றே குறிப்பிட முடியும்.

இந்நிலையில் இனப்பிரச்சனை அரசியல் ரீதியாகவே தீர்க்கப்படவேண்டுமென உணரப்பட்ட நிலையில், அரசியல் கோதாவைக் காத்திரமாக்கும் விதத்தில் இராணுவ அழுத்தங்களை நீக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

வடக்கு-கிழக்கில் நடத்தப்பட்ட சமாதானப் பேரணிகள்கூட இதனையே வலியுறுத்துபவையாகவும் இருக்கின்றன.

ஒவ்வொரு தடவையும் அரசியல் தீர்வு, சமாதான நடவடிக்கைகள் என்று பேசப்படும்போதெல்லாம் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நிறையவே எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகியதையடுத்து இந்தியா வடக்கு-கிழக்கில் அமைதியை ஏற்படுத்தப்போவதாகக் கூறிச் செயலில் இறங்கியது.

போர் நிறுத்தம், சமாதான-சக வாழ்வு போன்ற கோஷங்கள் அப்போது மிகவும் வலுவடைந்தேயிருந்தன. ஆயினும் சந்திரிக்கா அரசு பதவிக்கு வந்ததும் ஆரம்பித்த சமரச முயற்சிகூட தோல்வியையே தழுவியதுடன் மோசமான பிரச்சனைகளுக்கும் முகங்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களுக்கு ஏற்படலாயிற்று.

இனப்பிரச்சனை ஒரு கெடுபிடி யுத்தமாக உருமாறிய காலத்திலிருந்து சமாதான அணுகு முறைகள் பற்றிய பேச்சுக்கள் குறித்து வடக்கு-கிழக்கு மக்கள் நம்பிக்கை வெளியிட்டு இறுதியில் ஏமாற்றத்தையே அடைகின்ற போதிலும், அரசியல் தீர்வு தொடர்பாகவும் சமாதான சக வாழ்வு குறித்தும் அவர்கள் தொடர்ந்து மிகுந்த நம்பிக்கை

இம் முயற்சியில் புதிய அம்சங்களாக நோர்வேயின் மத்தியஸ்தமும், எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடனான ஒன்றிணைந்த அணுகுமுறையும் காணப்படுகின்றன.

ஆயினும் சிங்கள-பௌத்த பேரினவாதிகள் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுவதை தொடர்ந்தும் எதிர்த்தே வருகின்றனர்.

இராணுவ ரீதியான அணுகுமுறைகளே தொடர வேண்டுமென்பதையே பேரினவாதிகள் வலியுறுத்துவோராகவும் இருக்கின்றனர்.

எனவே சமாதானம் மீதான நம்பிக்கையை வடக்கு-கிழக்கு மக்கள் நிச்சயம் கொண்டிருக்கவே வேண்டும். ஆயினும் அந்த நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில் மேற்கொள்ளபடுகின்ற சமாதானப் பேரணிகள் போன்ற நடவடிக்கைகளை பலவீனத்தின் வெளிப்பாடாக தென்னிலங்கையின் அரசியல் சக்திகள் கருதிக் கொள்வதற்கு இடந்தரலாகாது.

இன்று நேற்றல்ல; இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் வடக்கு-கிழக்கு மக்கள் சுய கௌரவத்துடன் கூடிய சமாதான-சகவாழ்வுக்காகவே குரல் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் பிரிட்டிஷார் இலங்கையை விட்டகன்றதும், ஆட்சியுரிமையைப் பெற்றுக் கொண்ட தென்னிலங்கையின் அரசியல் சக்திகள் தமிழ் மக்களின் சமாதான சகவாழ்வு மீதான விருப்பத்துக்கு எதிர்மாறாகவே நடந்து வந்தன.

இதன் காரணமாக வடக்கு-கிழக்கைத் தாயகமாகக்கொண்ட தமிழ் மக்கள் தமது தனித்துவத்தைப் பேணி சுயகௌரவத்துடன் வாழ்வதற்கான போராட்டத்திற்கு ஏராளமான உயிர்த்தியாகங்களைச் செய்திருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இந்த உயர்வான உயிர்த்தியாகங்கள் ஒரு போதும் வீண்போகலாகாது. இந்நிலையில் இனப்பிரச்சனைத் தீர்வு என்பது, வடக்கு-கிழக்குத் தமிழர்கள் தமது சுயாதிக்கத்தை நிலைநாட்டிய நிலையிலேயே-இலங்கையின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களுடன் சமாதானமாக வாழ்வதை உறுதி செய்வதாக அமைய வேண்டும்.

இது தவிர்ந்த எந்தவொரு தீர்வும் அரைவேக்காடானதாகவும், பிரச்சனைகளை மேலும் தொடரச் செய்வதாகவுமே அமையும்.

எனவே யுத்தக் கெடுபிடிகளை அகற்றி, சமாதான-சகவாழ்வுக்காகப் போடப்படும் வடக்கு-கிழக்கு மக்களின் கோஷங்கள் அவர்களது அரசியல் எதிர்பார்ப்புக்களையும் பிரதிபலிப்பதாகவே அமைய வேண்டும்.

ஏனெனில் தென்னிலங்கையில்கூட சமாதானத்துக்கான கோஷங்கள் என்ற பேரணிகள் நடத்தப் படுகின்றன. அக்கோஷங்களில் வெறுமனே யுத்த நிறுத்தம் சகோதரத்துவம் என்ற கோஷங்களே வெளிவருகின்றன.

ஆனால் அரசியல் உரிமைகளை வென்றெடுக்காத நிலையில் வடக்கு-கிழக்கு பிரதேச மக்கள் மத்தியில் இருந்து வெளிப்படுகின்ற சமாதானத்துக்கான குரல் என்பது அவர்களது அரசியல் உரிமைகள் சார்ந்த தனித்துவத்தையும், சுயகௌரவத்தையும் எவ்விதத்திலும் அடைமானம் வைத்துவிடாது ஒலிக்க வேண்டியதே இன்றியமையாததாகின்றது.




முன்வந்துள்ளமை போன்ற காரணங்களினாலேயே சமரச நடவடிக்கைகள், சமாதானம் என்பவை குறித்து வடக்கு-கிழக்கு மக்கள் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்துள்ளனர். இதன் வெளிப்பாடாகவே அவர்கள் பேரணிகளையும் ஒழுங்கு செய்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் இனப்பிரச்சனை இருந்து வருகின்றது. ஆயினும் கடந்த சுமார் 25 வருடகாலத்திலேயே இப்பிரச்சனை பூதாகரமான நிலையை எட்டியுள்ளதுடன் பெரும் அழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சனை காரணமாக இடம்பெற்றுவரும் உள்நாட்டு யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் வாழ்க்கை சின்னாபின்னப்படுத்தப்பட்டு, சிதறடிக்கப்பட்டுள்ளது.

எனவே இனப்பிரச்சனை என்பது வெறுமனே ஓர் அரசியல் சர்ச்சையாக மட்டும் இருக்கவில்லை. பாரியளவில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டு எண்ணிலடங்காத மனிதாபிமானப் பிரச்சனைகளையும் உள்ளடக்கியதாகவே இனப்பிரச்சனை காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பேரணிகள், ஊர்வலங்கள் என்பவை புதிதானவையல்ல. கடந்த பல வருடங்களாகவே வடக்கு-கிழக்குப் பிரதேச மக்கள் தம்மீதான அடக்கு முறைகள், வன்முறைகளைக் கண்டித்தும், அரசியல் தீர்வு, சமாதானம் என்பவற்றை வலியுறுத்தியும் பேரணிகளை நடத்தி வந்திருந்தனர்.

அத்துடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களைக்கூட பேரணிகளின் இறுதியில் அரசாங்கத்துக்கும், ஏனைய முக்கிய நிறுவனங்களுக்கும் கையளித்தே வந்தனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை நாளாந்த வாழ்க்கை வெகுவாகவே பாதிக்கப்பட்டிருப்பதுடன் அப் பிரதேசங்களின் அரசியல், சமூக, பொருளாதாரத்துறைகள் அனைத்துமே

இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம்கூட அண்மையில் லண்டனில் இருந்து வெளிவருகின்ற 'தமிழ் கார்டியன்' பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியிலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதன் மூலமாகவே இலங்கையின் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணமுடியுமென்பதை அனைத்து அரசியல் தரப்புக்களும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்நிலையில் பேச்சுவார்த்தைகளில் மீளவும் பங்கெடுப்பதில் சாதகமான அறிகுறிகளை வெளிப்படுத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகள், வடக்கு-கிழக்கில் நிலவுகின்ற கெடுபிடிகள், அழுத்தங்களை நீக்கும்படியும், யுத்த நிறுத்தத்துக்கான சூழல் உருவாக்கப்படவேண்டுமென்பதையுமே எதிர்பார்க்கின்றார்கள். இதனையே திரு.அன்ரன் பாலசிங்கத்தின் தமிழ் கார்டியன் பேட்டி மூலமாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது.

தொடர்ச்சியாகவே யுத்த அநர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இராணுவ, பொருளாதார ரீதியான அழுத்தங்கள் நிச்சயம் அகற்றப்படவே வேண்டும்.

எனவே இதற்கான முன்முயற்சிகளை அரச தரப்பினர் முன்னெடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேசமயம், மறுபுறத்தே ஓர் அரசியல்- இராணுவ சக்தியாக விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள்கூட யுத்தச் சூழலை விலக்குவதற்குத் தமது ஒத்தாசைகளை வழங்கவேண்டியது அவசியமானதாகின்றது.

இதன் மூலமே ஒரு பரந்துபட்ட யுத்த நிறுத்தத்துடன் கூடிய- கெடுபிடியற்ற ஒரு சூழலை உருவாக்கிக் கொள்ள முடியும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சமரசப் பேச்சுக்கள் தோல்வி கண்டமைக்கும் ஆரோக்கியமான முறையில் யுத்த நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையும் ஒரு

இந்நிலையில் இலங்கைக்கு அமைதிப்படை என்று வந்த இந்திய இராணுவம் ஒரு பூரண சமாதானப் படையாக இருக்குமென்றே வடக்கு-கிழக்கு மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாகவே அனைத்தும் நடந்திருந்தது. வடக்கு-கிழக்கு மக்கள் அனுபவித்த அற்ப, சொற்பமான அமைதிகூட உருக்குலைக்கப்பட்டிருந்தது.

எனவே இந்திய-இலங்கை ஒப்பந்தம் சமாதானத்தைக் கொண்டுவரும் என எதிர்பார்த்த மக்களுக்கு ஏமாற்றமே கிடைத்திருந்தது.

இதன் பின்னர் ஜனாதிபதி பிரேமதாஸா அரசுடன் சமரச முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. அப்போதுகூட மக்கள் நிறையவே எதிர்பார்த்தனர். ஆனால் அம் முயற்சிகூட பொய்த்து விட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட கால ஆட்சியில் பெருமளவில் இன்னல்களை அனுபவித்த வடக்கு-கிழக்கு மக்கள் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் தமக்கு ஒரு விடிவு ஏற்படுமென்றே கருதினர்.

1994ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிக்கா ஜனாதிபதியாகத் தெரிவானபோது இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக அவரிடம் வடக்கு-கிழக்கு மக்கள் நிறையவே எதிர்பார்த்தனர்.

கொண்டவர்களாக இருந்து வருகின்றார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகவே வடக்கு-கிழக்கில் இடம் பெற்ற சமாதானப் பேரணிகள் அமைந்திருந்தன.

இப்பேரணிகளில் எழுப்பப்பட்ட கோஷங்கள் மக்கள் படும் துன்பதுயரங்களை வெளிக் காட்டுபவையாக அமைந்திருந்தன.

இந்நிலையில் எது எப்படியிருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு மக்கள் தாம் சுய கௌரவத்துடன், தமது அரசியல் உரிமைகளைப் பெற்று அமைதியாக வாழவேண்டுமென்பதையே கிழக்கிலும், பின்னர் வடக்கிலும் இடம்பெற்ற சமாதானப் பேரணிகள் வலியுறுத்துபவையாக விளங்கியிருந்தன.

இருந்தபோதிலும் இது போன்ற சமாதானப் பேரணிகளில் குதிக்கும் மக்கள் கடந்த கால அனுபவங்களையும் கருத்தில் கொள்ள வேண்டுயதே அவசியமானதாகின்றது.

ஏனெனில் கடந்த காலங்களில் சமாதான அணுகுமுறைகள் குறித்து மிகுந்த எதிர்பார்ப்புக்களை வெளியிட்டு இறுதியில் ஏமாற்றத்தையே தழுவ வேண்டியிருந்தது.

தற்போது சந்திரிக்கா அரசியல் இரண்டாவது தடவையாக இனப்பிரச்சனைத் தீர்வுக்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**அமெரிக்காவிலும்** எங்களைப்போல இப்ப குடும்ப அரசியல் வரப்பாக்குது. சில காலத்துக்கு முன்னர் ஜோர்ஜ் புஷ் ஜனாதிபதியாக இருந்தவர். இத்தடவை தேர்தலில் அவரது மகன் டபிள்யு புஷ் போட்டி போடுகிறார். அவர் வென்றால் அமெரிக்காவில் முதல் முறையாக தகப்பனுக்குப் பின் மகன் ஜனாதிபதியாக வந்து சாதனை படைக்கப் படும். ஏதோ குடும்ப அரசியல் அமெரிக்காவையும் குழப்பாமல் இருந்தால் சரி.

**யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை** வெளிநாட்டு இராஜதந்திரிகளே முக்கிய விருந்தினர்கள். கொழும்பிலிருக்கிற அமைச்சர் பெரு மக்கள் வடக்குப் பக்கம் தலை வைச்சும் படுக்கிறதில்லை. ஏன் வீண் வம்பென்று அவர்கள் அங்குபோவதில்லை. வில்லங்கத்தை ஏன் விலைக்கு வாங்க வேண்டுமென்று யாழ்ப்பாணத்தாரும் அவையளைக் கூப்பிடுவதில்லை. இதனால் வெளிநாட்டுக்காரர்க்கு தான் அடிக்கல் நாட்டினாலென்ன, திறந்து வைத்தாலென்ன மாலை மரியாதையெல்லாம் நடக்குது.

**பொரளைப் பகுதியில்** தாக்குதல் நடத்திய ஆயுத பாணிகள் சண்டை பிடித்துக் கொண்டிருந்த போது குறுக்கே பொதுசனங்களை வரவேண்டாமென்று அடிக்கடி கூறிக் கொண்டிருந்தவையாம். சேர்பன்டைன் தொடர்மாடியில் இறுதியாகச் சண்டைபிடித்தபோது அங்கிருந்தவர்களை வெளியே தலைகாட்ட வேண்டாமென்றும் சொன்னவையாம். இதனால் தான் சேதம் வெகுவாகக்குறைந்ததாகவும் பேசிக் கொள்கிறார்கள். தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் வாகனம் ஒன்றின் முன்பாகப் பாய்ந்து விரைந்து போகும்படி சொல்லிக் கொண்டே தன்னை வெடிக்க வைத்தாராம். எது எப்படியிருந்தாலும் அழிவுகள் அவலங்களை நியாயப்படுத்த முடியாது. யாராக இருந்தாலும் அநியாயமாகவும் அவஸ்த்தைப்பட்டும் சாகக் கூடாது இது தான் நான் சொல்லுவது!

**எல்லாவீட்டையும் போனவர்** எங்கட வீட்டை மட்டும் வரவில்லை என்கிற மாதிரித்தான் கிளின்ரன் ஐயா இந்தியா வந்தது பற்றி நம்ம நாட்டுக்காரர் கவலைப்படுகினம். புத்தமதம் தளைத்தோங்குது, படிச்சமனுஷர் நிறைய இருக்கினம், ஒரு உல்லாசபுரி என்றெல்லாம் பேசினாலென்ன வெளிநாட்டு தலைவர்கள் வேறு விதமாகத்தான் நினைக்கினம். சில வேளை சண்டையில்லாமல் சமாதானமாக இருந்திருந்தால் சொர்க்கலோகம் என்று எப்பவோ கிளின்ரன் ஐயா வந்திருக்கலாம். சில சமயம் மோனிக்காவும் அவரோட வந்திருப்பா.

**குமார் ஒரு துணிச்சலான** அரசியல்வாதியாக இருந்து மறைந்தவர். நிதியங்களை ஆரம்பித்தோ என்.ஜி.ஒக்களை நடத்தியோ அவர் எவரையும் ஏமாற்றவில்லை. தனித்து நின்று அரசியல் நடத்தியபோது ஒரு வரும் அவரோட நிற்கவில்லை. இப்ப அவர் இல்லை என்றவுடன் அவர் பெயரில் புதுக்கட்சி தொடங்கவும், நிதியம் ஆரம்பிக்கவும் சில விசிலடிச்சான் குஞ்சுகள் ஆலோசனை கூறுகினமாம்.

**பனையாலவிழுந்தவனை மாடேறி** மிதிச்ச மாதிரி ஜெர்மனியிலிருந்து திருப்பி அனுப்பட்டவர்கள் நடத்தப் படுகினம். விமானநிலையத்திலேயே சி.ஐ.டி. விசாரணையென்று அங்கிருந்து வந்ததும் கைது செய்யப்பட்டிருக்கினம். எங்கிருந்தாலும் தொல்லை என்று தான் தமிழர் பாடு இருக்குது.

**இராணுவத்திலிருந்து** இரு மேஜர் ஜெனரல்கள் உட்பட ஏழு உயரதிகாரிகள் கட்டாய ஓய்வெடுக்குமாறு தண்டிக்கப்பட்டிருக்கினம். எதற்கு இத்தண்டனை என்றால் சிரிப்புத் தான் வருகுது. வன்னியில ஓயாத அலைகள் என்று புலிகள் வந்த போது சண்டை பிடிக்காமல் என்ர ஐயோ என்று கத்திக் கொண்டு ஓடிவந்தது தான் அவை செய்த குற்றம்.

**கிழக்கிலங்கையைச் சேர்ந்த** பொன்னான 'பிரதிநிதி' ஒருவர் கல்முனை வீதியிலுள்ள கிராமொன்றுக்குள் திடீரென்று இறங்கினாராம். நியமனக்கடிதமொன்றை வீடுதேடிக் கொடுப்பற்கே அவர் போனார். விலாசகாரரைக் கண்டு கடிதத்தையும் ஒப்படைத்தார். ஊரவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை இச்செயல் ஏற்படுத்தியது. இவரைப் போல எல்லோரும் இருந்தால் எங்களுக்கு என்ன குறை. ஆயிரத்தில் ஒருவர் என்றனராம். அவர் புறப்பட்டபின் நியமனப்பெற்ற பொடியன்-சொன்ராம் "இக்கடிதத்தின் பெறுமதி முப்பதாயிரம்" என்று கிராமத்தவர்கள் வாயடைத்துப் போனார்களாம். எப்படி.

## உண்மைத் தொடர்

### அதிர் இடி 103

**கடந்தவாரம்**

**ஆர்ச். பிஷப் மீதும், ஏனைய ஆயர்கள் மீதும் குற்றம் சுமத்தும் அறிக்கைகள் படிக்கப்பட்டன. குறிப்பிட்ட இடத்திலிருந்து அருகிலுள்ள சர்வதேச மாநாட்டு மண்டபத்துக்கு அனைவரையும் செல்லுமாறு ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது. அவ்வாறு அவர்கள் போனதும், ஆர்ச் பிஷப்பும் ஒபோத் ஒ·.பும்பி மற்றும் ஒரியமா ஆகிய இரு அமைச்சர்களும் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு வெவ்வேறு வாகனங்களுள் திணிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.**

**மண்டபத்தினுள் இருந்தவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது தெரியாது. இருப்பினும் வெளிப்புறமாக நின்றிருந்த வாகனச் சாரதிகளும், அமைச்சர்களின் மெய்காப்பாளர்களும் இ ந்தச் சம்பவங்களைப் பார்த்தனர்.**

**இம்மூவரும் அரசு ஆய்வுமையத்தில் வைத்து கொலை செய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் மூவரும் ஒரு வாகன விபத்தில் சிக்கி மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.**

இனி...

# இடி அமீன்



இரு அமைச்சர்களும் ஆர்ச் பிஷப்பும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட இடம், முலாகோ மருத்துவமனையில் இருந்து ஒரு மைலுக்கும் குறைந்த தூரத்திலேயே இருக்கிறது. ஆனால் நைல் ஹொட்டலில் இருந்து நகருக்குள் பிரவேசித்த அமைச்சர்களும் ஏனைய பிரமுகர்களும் விபத்து நடந்ததாகக் கூறப்பட்ட அதே பாதையினூடாகவே சென்றனர். இவர்கள் எவரேனும் அந்தக் குறிப்பிட்ட இடத்தில் விபத்து நடைபெற்ற தற்கான அறிகுறிகள் எதனையும் காண வில்லை.

அமைச்சர் சியம்பா முலாகோ மருத்துவமனைக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு மூவர்களினதும் சடலங்கள் கொண்டு வரப்பட்டுள்ளனவா? என்று விசாரித்தார். அவ்வாறு எத்தகைய சடலமும் அங்கு கொண்டு வரப்படவில்லை என்று மருத்துவமனை அதிகாரிகள் அமைச்சரிடம் கூறினார்கள்.



மருத்துவமனையிலிருந்து சுமார் ஒரு மைலுக்குள் விபத்து நடைபெற்று இருந்தால் பிரேதங்கள் எப்போதோ மருத்துவமனை சவச்சாலைக்குக் கொண்டு வந்திருக்கப்படும். அவ்வாறு அதுகாலவரை நடைபெறாதமையினால் அமைச்சர் சியம்பாவின் எண்ணம் ஊர்ஜிதமாகிவிட்டது.

பகல் பதினொன்று முப்பது அளவில் அமைச்சர் சியம்பா, பிரேதங்கள் பற்றி அவருக்கு தகவல் தந்த உதவி ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு, சடலங்கள் பற்றி எதுவிதமான தகவலும் வரவில்லையே என்றார். அதற்கு, உப ஜனாதிபதி, "கவலைப்பட வேண்டாம்! பிரேதங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று ஜனாதிபதியே கூறினார்!" என்றார்.

அமைச்சர் சியம்பாவுக்கு உண்மை விளங்கிவிட்டது. தனது எதிரிகளின் பிரேதங்களுக்கு இடி அமீன் எவ்வாறு இறுதி மரியாதையையும் அஞ்சலியையும் செலுத்துவான் என்பது தெரிந்ததே. இதனால் அமைச்சர் ஆச்சரியப்பட வில்லை.

அடுத்தநாள் அதிகாலை தனது இல்லத்தில் தூங்கிக் கொண்டிருந்த அமைச்சர் சியம்பாவை தொலைபேசி அழைத்தது. மருத்துவமனை அதிகாரிகள் மூவருடைய பிரேதங்களும் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு விட்டதாக அறிவித்தார்கள்.

அதிகாலை 4 மணியளவில் மருத்துவமனைக்குள் பிரவேசித்த இராணுவ வண்டியொன்றிலிருந்து மூன்று பிரேதங்கள் சவச்சாலைக்கு அருகாமையில் உள்ள பாதையில் வீசியெறியப்பட்டுக் கிடந்த

**தருவது அழகன்**

தாக அமைச்சருக்குக் கூறப்பட்டது. அவரும் உடனடியாக மருத்துவமனை சென்றார்.

ஆர்ச் பிஷப் முதல் நாளன்று நைல் ஹொட்டலில் காணப்பட்ட-அவருக்குரிய அங்கியுடன் பிரேதமாகக் காணப்பட்டார். அங்கியில் ஆங்காங்கே இரத்தக் கறை படிந்திருந்ததை அமைச்சர் அவதானித்தார். அமைச்சர்கள் இருவரினது சடலங்களும் கூட முதல் நாள் காணப்பட்ட உடைகளிலேயே காணப்பட்டன. பிரேதங்களை சவச்சாலையில் வைத்துவிட்டு அங்கு வேறு எவரும் செல்லாமல் கதவுகளை பூட்டி விடும்படி மருத்துவமனை அதிகாரிகளுக்கு அமைச்சர் கட்டளை இட்டார்.

அமைச்சர் சியம்பா சவச்சாலையை விட்டு வெளியேறுவதற்கு முன்னர், மூவரினது சடலங்களையும் மேலோட்டமாக அவதானித்தார். ஆர்ச் பிஷப்பினுடைய வாயினுள் கைத்துப்பாக்கியை நுழைத்து சுடப்பட்டுள்ளது தெளிவாகத் தெரிந்தது. ஏனைய குண்டுகள் மார்பைப் பிளந்திருந்தன. அமைச்சர்களினுடைய மார்பிலேயே பல குண்டுகள் துளைத்திருந்தன.

மிக அருகிலேயே நின்றவாறு இவர்கள் மூவரும் சுடப்பட்டுள்ளனர் என்பதனால் இந்தக் கைங்கரியத்தை இடி அமீனே செய்திருப்பான் என்பது அமைச்சருக்கு நிச்சயமாக தெரிந்துவிட்டது.

அடுத்த நாட்காலை உகண்டா வானொலியும் உத்தியோகப் பூர்வமான 'வொயிஸ் அப் உகண்டா' தினசரியும் ஏககாலத்தில் விபத்துப் பற்றிய செய்தியை வெளியிட்டி ருந்தன.

விபத்து நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்ட அன்றிரவு குறிப்பிடப்பட்ட அந்த இடத்தில் இரு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன என்பதை அருகாமையிலுள்ள தொடர்மாடிவீட்டு உப்பரிகையில் நின்று இருவர் பார்த்திருந்தனர். இந்த விபத்து நடைபெறுவதற்கு முன்னதாகவே அதே இடத்தில் படையினர் சிலர் வந்து நின்றிருந்தனர். எதிரெதிர் திசையில் இருந்து இரு வாகனங்களும் எவ்வாறு மோதிக் கொள்ள வேண்டும் என்பதற்கான ஒத்திகையும் நடைபெற்றதை அவ்விருவரும் தெரு வெளிச்சத்தில் நன்றாகப் பார்த்தனர்.

இரு வாகனங்களும் ஒன்றுடனொன்று 'மெதுவாக' முட்டிய பின்னர், ஒரு வண்டியில் இருந்து மூன்று பொதிகளைச் சுமந்த மூவர், அவற்றை மற்ற வண்டியினுள் கொண்டு போய்ப் போட்டதையும் இவர்கள் பார்த்தனர். பொதிகளைக் கொண்டு வந்த வாகனம் பின்னோக்கிச் சென்று, பின்னர் வேகமாக ஓடி மறைந்து விட்டது.

நள்ளிரவு கடந்து சில மணி நேரத்தின் பின்னர் அங்கு வந்து சேர்ந்த மற்றுமோர் இராணுவ வாகனம் ஒன்றில் வந்த சிலர் அங்கே தரித்து நின்ற வாகனத்திலிருந்த பொதிகள் மூன்றையும், தூக்கி தாங்கள் வந்த வாகனத்தினுள் போட்டுக் கொண்டு முலாகோ மருத்துவ மனையை நோக்கி வேகமாகச் சென்றனர்.

இந்த வண்டியில் வந்தவர்கள் சிலர், தரித்து நின்ற வாகனத்தின் முன் கண்ணாடிகளையும் முன்பகுதிகளையும் இரும்பு ஆயுதங்களினால் அடித்து நொருக்கியதையும் மேற்படி பார்வையாளர்கள் அவதானிக்கத் தவறவில்லை.

அடுத்தநாட்காலையில் வானொலியில் செய்தியைக் கேட்ட போதும், பத்திரிகையில் செய்தியையும் படித்த போதும்தான் நடைபெற்ற சம்பவத்தின் 'உண்மை' அவர்களுக்குப் புரிந்தது.

இத்தகைய சம்பவங்கள் நாட்டில் அவ்வப்போது பரவலாக நடைபெற்று வருவதால் இந்தச் சம்பவம் பற்றிய உண்மையை அவர்கள் எவரிடமும் கூற முற்படவில்லை. ஆனால் பின்னர் அமைச்சர் சியம்பா அவர்களிடம் உண்மையைக் கேட்டு அறிந்து கொண்டார்.

விபத்துக்குள்ளானதாகக் கூறப்பட்ட வண்டியை ஓட்டி வந்த சாரதி மேஜர் மோசஸ் ஒக்கேல்லோ, தான் இவ்விபத்தின் போது பலத்த அடிபட்டு உட்காயங்களுக்கு உள்ளானதாக பாசாங்கு செய்தான். இவனை மருத்துவ பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அமைச்சர் சியம்பாவை அமீன் கேட்டிருந்தான்.

மோசஸ் கைத் தாங்கலாக மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டான். அவன் மீது மருத்துவ பரிசோதனை செய்யும் பொறுப்பு அங்கு பணி புரிந்த ஒரு ரஷ்ய நாட்டு டாக்டரிடம் அளிக்கப்பட்டிருந்தது. அவனுடைய உடலில் எந்த விதமான பாதிப்பையும் அந்த டாக்டரால் கண்டு பிடிக்க முடியவில்லை. என்ன நடந்தது என்று அவனை விசாரித்தபோது, தனக்கு எதுவுமே நினைவிலில்லை என்று கூறி மளுப்பி விட்டான்.

(இடி தொடரும்)

## ஜப்பானியர்களுக்காகத் தயாரான தமிழ்ப் படம்

தமிழ்ப்படங்கள் தமிழ் இரசிகர்களுக்காகத் தயாரிக்கப்படுவது வழக்கம். ஆனால் இப்போது தமிழ் மொழியே தெரியாத ஜப்பானியர்களுக்காகத் தமிழ்ப் படம் ஒன்று தயாரிக்கப்படுவது ஆச்சரியமான விஷயம் தான்.

தமிழ்ப் படங்களுக்கு ஜப்பானியர்களுக்கிடையே மவுசு ஏற்படக் காரணம் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் என்றால் மிகையாகாது. இவரது 'முத்து' படம் ஜப்பானில் வெளியாகி அங்கு பெரும் மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது.

இதையடுத்துப் பல தமிழ்ப்படங்கள் ஜப்பானில் வெளியாகி அவர்களால் இரசிக்கப்பட்டு வருகின்றன.



'நட்டு' படத்தில் நனாமி – கெட்டி

இந்நிலையில் 'இந்தியாவில் தயாராகி வரும் தமிழ்ப்படங்களைத் தான் திரையிட வேண்டுமா? ஏன் நாமே நேரடித் தமிழ் படங்களைத் தயாரிக்கக் கூடாதா?' என்று சில ஜப்பானியர்கள் நினைத்து, ஒரு தமிழ்ப்படத்தைத் தயாரித்துள்ளனர்.

படத்தின் பெயர் 'நட்டு'. (நடராஜ் என்பதன் சுருக்கம் தான் நட்டு). ஜப்பான் நடிகர் நனாமி கியோயா, கெட்டி என்ற நடிகையும் இதில் அண்ணன் தங்கையாக முதன்மை வேடங்களில் நடித்துள்ளனர்.

இவர்களுடன் 'குடும்பம்' தொலைக்காட்சித் தொடர் புகழ் ரியாஸ் கான், 'கருத்தம்மா' ராஜஸ்ரீ. அஜய் ரத்னம் ஆகியோரும் நடித்துள்ளனர். 35 நிமிடங்கள் ஓடக்கூடிய இப்படம் ஜப்பானிய இரசிகர்களுக்காக மட்டுமே தயாரிக்கப்பட்டது. இருந்தும் அண்மையில் தமிழ் நாட்டில் காண்பிக்கப்பட்டது.

பொதுவாக ஒரு மொழிப்படம் இன்னொரு மொழிக்குப் போகும்போது அதை மொழிமாற்றி (டப் பண்ணி) வெளியிடுவார்கள். ஆனால் ஜப்பானியர்களுக்கு மொழி மாற்றுவது பிடிக்காது. தமிழ் மொழிப் படம் தான் அவர்களுக்குப் பிடிக்கும். படத்தின் அர்த்தம் புரிவதற்காக ஜப்பானிய மொழியில் சப்-டைட்டில் போடப்படும்.

இதில் 'நட்டுவாக நடித்திருக்கும் நனாமியும், அவரது தங்கையாக நடிக்கும் கெட்டியும் ரஜினியின் தீவிர இரசிகர்கள்.

'முத்து' படத்தில் வரும் அரண்மனை ஜப்பானிய இரசிகர்களுக்கு மிகவும் பிடித்துப் போயுள்ளதால் 'நட்டு' படத்தையும் அந்த பங்களாவிலேயே படமாக்கியுள்ளார்கள்.

அண்ணன்-தங்கை பாசத்தை வைத்து காதல், சோகம், நகைச்சுவை, சண்டை எல்லாம் சேர்ந்த மசாலாப்படம் இது.

## இறந்த தாயுடன் வாழ்ந்த மகன்

அமெரிக்காவின் டெனிஸியா மாநிலத்தில் ஒரு 9 வயதுச் சிறுவன் இறந்த தனது தாயாருடன் 5 வாரங்கள் வாழ்ந்திருக்கிறான்.

தாயார் இறந்து போன விஷயத்தைச் சொல்ல அவனுக்குப் பயம்! காரணம் பொலிஸ் தன்னை அநாதை என்று முத்திரை குத்தி அநாதை இல்லத்திற்கு அனுப்பிவிடும் என்று.

ட்ரவிஸ் என்ற அச்சிறுவனின் 30 வயதான தாய் திடீரென உயர் இரத்த அழுத்தம் காரணமாக மயங்கி விழுந்து இறந்து போனார்.

பயந்து போன ட்ராவிஸ் அது பற்றி யாரிடமும் மூச்சு விடவில்லை. வழக்கம் போல் குளித்து, உடுத்திக் கொண்டு பாடசாலைபோய் வந்தான்.

ஃபிரிட்ஜிலிருந்து உணவுப் பொருட்களைச் சாப்பிட்டு உயிர் வாழ்ந்தான். ஐந்து வாரங்கள் இப்படியே வாழ்ந்தான் சிறுவன். தற்செயலாக அவர்களைத் தேடி வந்த உறவினர்கள் விஷயம் அறிந்து போட்ட கூச்சலில் பொலிஸ் வந்தது.

ட்ராவிஸை அவனது பாட்டியிடம் ஒப்படைத்தார்கள். ட்ராவிஸுக்கு அவனது அப்பா பற்றிய விபரம் எதுவும் தெரிய வில்லை.

## இடம் மாறும் சல்மான் ருஷ்டி



'சாத்தானின் வேதங்கள்' என்ற நாவலை எழுதி, மறைந்த ஈரானியத் தலைவர் ஆயத்துல்லா கொமெய்னியினால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர் இந்திய எழுத்தாளர் சல்மான் ருஷ்டி. இதனால் பல வருட காலமாக இங்கிலாந்து நாட்டில் தலைமறைவு வாழ்க்கையை நடத்தி வருகிறார் இவர்.

இலண்டனில் வாழ்ந்து வரும் இவர், தற்போது அமெரிக்காவிற்குப் போகத் தீர்மானித்துள்ளார்.

கொமெய்னி மறைந்தாலும் அவரால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றக் காத்திருப்பவர்களுக்குப் பயந்து மட்டும் இவர் அமெரிக்கா போகத் திட்டமிடவில்லை. இன்னொரு காரணமும் இருக்கிறது.

இரண்டு முறை திருமணம் செய்திருக்கும் சல்மான் ருஷ்டி, மூன்றாவது துணைவியாரையும் தேடி விட்டார். அவரும் இந்தியா தான், பெயர் பத்மா லட்சுமி. ஹொலிவூட் நடிகையான இவர் லொஸ் ஏஞ்சல்ஸில் வசிக்கிறார்.

பத்மா லட்சுமி இங்கிலாந்து செல்ல முடியாது. ருஷ்டி அமெரிக்கா போவதற்குக் காரணம் இதுதான்.

## கொதித்துப்போன பார்வையாளர்கள்

சமீபத்தில் இங்கிலாந்தின் இலண்டன் நகரில் நடைபெற்ற சித்திரக் கண்காட்சியைப் பார்வையிட்ட சிலர் கோபத்தில் கொதித்துப் போய் விட்டார்.


அவர்களது கோபத்திற்குக் காரணம் மறைந்த இளவரசி டயானா.

இரண்டரை வருடங்களுக்கு முன் இறந்து போன இளவரசி டயானாவின் படம் சித்திரக்கண்காட்சியில் இடம் பெற்றிருந்தது.

அதில் டயானா, கன்னிமேரி சிலை வடிவத்தில் சித்திரிக்கப்பட்டிருந்தது. அதேபோல் இங்கிலாந்து அரச குடும்பத்தைச் சேர்ந்த சிலரும், விளையாட்டு வீரர்களும் கூட கடவுள்களின் சிலை வடிவங்களில் சித்திரங்களாக இருந்தன.

இச் சித்திரங்கள் சில மத உணர்வு பெற்றவர்களின் மனதை புண்படுத்துவதாகவும்,மோசமான இரசனையுடன் இருப்பதாகவும் புகார்கள் கிளம்பியுள்ளன.

## கிரிக்கெட் தெரியாத கிரிக்கெட் வீரர் மனைவி



இந்திய கிரிக்கெட் வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக பெங்களூர் சென்றால், அவர்கள் மறக்காமல் சந்தித்து நாலு வார்த்தைகளாவது ஜெயந்தி என்ற தமிழ்ப் பெண்ணிடம் பேசி விட்டுத்தான் வருவார்கள். இதற்குக் காரணம் அவர் கணவர் பெரிய கிரிக்கெட் வீரர் என்பது மட்டுமல்ல, ஜெயந்தியின் கள்ளங்கபடமற்ற நட்பான பேச்சுத்தான்.

பிறப்பால் தமிழரான ஜெயந்தி பிறந்தது வளர்ந்தது எல்லாம் பெங்களூரில் தான். எந்நேரமும் புன்னகை தவழும் இந்தப் பெண்ணின் கணவர் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத்.

வெங்கடேஷ் பிரசாத்தைக் காதலித்துக் கைப்பிடித்துக் கொண்ட ஜெயந்திக்கு கிரிக்கெட் என்றால் என்னவென்றே தெரியாது. திருமணத்தின் பின்னர் தான் கிரிக்கெட்டைப் பற்றித் தெரிந்து கொண்டு கிரிக்கெட் போட்டிகளைப் பார்க்க ஆரம்பித்தார்.

இந்திய கிரிக்கெட் வீரர்களில் கபில்தேவ், டெண்டுல்கர், கும்ப்ளே ஆகியோர் தங்களைவிட வயதில் மூத்த பெண்களையே திருமணம் செய்துள்ளனர். வெங்கடேஷ் பிரசாத்தும் அவர்கள் வழியில்தான்.

பிரசாத்தைவிட ஜெயந்திக்கு 7வயது அதிகம். இதைப்பற்றி ஜெயந்திகூறும்போது, "வயது வித்தியாசம் பற்றி நாங்கள் எந்தக் கட்டத்திலும் நினைத்துப் பார்த்ததே இல்லை. காரணம் எங்கள் இருவரிடையேயும் மனப்பொருத்தம் வலுவாக அமைந்திருக்கிறது" என்கிறார்.


# அசத்தலான 'க்ளிக்'

↓ படத்தைப் பார்க்கும் போது செம்மறி ஆடொன்று உயரத்தில் ஏறி நின்று ஏனைய செம்மறி ஆடுகளுக்கு சொற்பொழிவு நிகழ்த்துவது போன்று நினைக்கத் தோன்றும்.

வெட்டிக் குவித்துக் கிடக்கும் புற்களைக் கண்டதும் செம்மறி ஆடுகள் மும்முரமாக அதைச் சாப்பிடத் தொடங்க, அவற்றில் ஒன்று புற்குவியலின் மேல் ஏறி நின்று சாப்பிடுகிறது. எதேச்சையாக சாப்பிட்டபடி அந்த ஆடு நிமிரும் போது அசத்தலாக அதைக் 'க்ளிக்' செய்து, கமெராவில் அடக்கிக் கொண்டார். ஒரு கெட்டிக்காரப் புகைப்படப்பிடிப்பாளர்.



## தகவல் பெட்டி




# ஓவர் கோட் அணிவகுப்பு

↑ டென்மார்க் நாட்டின் கோபன்ஹோகன் நகரில் 1936ல் துணிக்கடை ஒன்றின் முன்னால் எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது.

தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்கள் அணியும் ஓவர் கோட்டுக்கள் ஒரு மூன்றடுக்கு மாடிக்கு முன்பாக பல அடுக்குகளாகத் தொங்கவிடப்பட்டு புகைப்படம எடுக்கப்பட்டது.

இந்த ஓவர் கோட் அணிவகுப்பு எதற்காக? வித்தியாசமாகப் படம் பிடிப்பதற்காகத்தான்!

# இயந்திர மனிதன்



← சீனாவின் ஜனாதிபதி லீகிங் கை குலுக்குவது புத்திசாலியான ஒரு இயந்திர மனிதனுடன்தான். 'ஹொண்டா' நிறுவன பொறியியலாளர்களின் 11 வருட உழைப்பின் பலன் தான் இந்தப் புத்திசாலி இயந்திர மனிதன். இது ஒரு கார் நிறுவனத்தின் பல கடினமான வேலைகளைச் சுலபமாகச் செய்கிறது.

# வியட்நாமில் வெற்றிவிழா

↓ வியட்நாம், அமெரிக்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த போது, 1975ம் ஆண்டு வியட்நாமின் புவான் மா துவோத் என்ற நகரை வியட்நாம் கொில்லாக்கள் கைப்பற்றினர்.

அமெரிக்க இராணுவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொில்லாப் போரில் ஆயுத தளபாடங்களை இழுக்க யானைகள் பயன்படுத்தப்பட்டன.

அந்நாளை நினைவு கூர புவான் மா துவோத் நகரில் அண்மையில் நடந்த வெற்றிவிழா அணிவகுப்பு இது.



# மனிதர்களுக்காக உருவாக்கப்படும் பன்றிகள்

↓ உலகிலேயே முதன் முறையாக குளோனிங் முறையில் பிறந்த பன்றிக் குட்டிகள் தான் இவை. இந்தக் குட்டிகள் இங்கிலாந்து நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் பன்றிகளின் உடல் பாகங்களை மனிதனுக்குப் பொருத்தும் தொழில்நுட்பத்தில் மிகப் பெரிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மட்டும் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் ஈரல், சிறுநீரகம், இதயங்களுக்காகக் காத்திருக்கின்றனர்.





# இருட்டிலும் 'க்ளிக்'கலாம்

↑ ஜப்பானின் கஸியோ நிறுவனம் கண்டு பிடித்துள்ள சக்தி வாய்ந்த புதுமையான கமெராக்களில் ஒன்றுதான் இந்தக் கமெரா.

இதனால் எந்த விதமான நிலையிலும் துல்லியமான புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம்.

தானியங்கி கமெராவான இதன் மூலம் இருட்டில்கூட 'க்ளிக்'கித் தள்ள லாம். டோக்கியோ நகரில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் இதன் அறிமுக விலை சுமார் 2 இலட்சம் ரூபாய்.

# சினி விசிட்

## மினிசினி

* 'சேது' படத்தின் வெற்றியைத் தொடர்ந்து [illegible]

* [illegible]

* [illegible]

* [illegible]

* [illegible] ஆகிய படங்களில் பார்த்திபனுக்கு ஜோடியாக நடித்தவர் [illegible] மீண்டும் பார்த்திபனுக்கு ஜோடியாகப் புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

* [illegible] வெற்றிப்படத்தை இயக்கிய பாரதி அடுத்து இயக்கிய 'கண்ணுக்குள்' தோல்விப் படமான [illegible] இல்லை. இப்போது பாரதி, ராஜ்ராஜன் கதாநாயகனாக நடிக்கும் புதிய படம் ஒன்றிற்கு கதை எழுதுகிறார்.

* ராஜகுமாரன் இயக்கத்தில் 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தில் பிரசாந்த் தேவயானி ஜோடியாக நடித்து வருகிறார்கள். இதில் இன்னொரு நாயகியாக சிம்ரனை நடிக்க வைக்கவுள்ளார்கள்.

* காதல் மன்னன், அமர்க்களம் போன்ற படங்களுக்கு இசையமைத்தவர் பரத்வாஜ். இவர் இப்போது 'அமெரிக்கன் ட்ரீம்' என்ற ஆங்கிலப் படத்திற்கு இசை அமைத்து வருகிறார்.

## பார்த்திபன்–மீனா

படம்:

உன்னருகே நானிருந்தால்.

## முகப்பில்



ஐஸ்வர்யா ராய்


## பார்வதியாக அழகி

அந்தக் காலத்தில் ஒரு கலக்கு கலக்கிய படம் 'தேவதாஸ்' தமிழிலும் தெலுங்கிலும் நாகேஸ்வரராவ்-சாவித்திரி நடித்தார்கள். இந்தியில் 'தேவதாஸாக' திலீப்குமார் நடித்தார். கறுப்பு-வெள்ளையில் வந்து கலக்கிய தேவதாஸ் இந்தியில் மறுபடி தயாராகி கலரில் வந்து கலக்கப் போகிறது.

தேவதாஸாக ஷாருக்கானும், பார்வதியாக முன்னாள் அழகி ஐஸ்வர்யா ராயும் நடிக்க உள்ளார்கள். இதில் முக்கிய வேடத்தில் மாதுரி தீட்சித்தும் நடிக்கிறார்.

## மாற்றம்

பார்த்திபன் கதாநாயகனாக நடிக்க 'பைசா கோபுரம்' என்ற படத்தை 'விஐபி' படத்தை இயக்கிய ஸ்டீ சபாபதி இயக்குவதாக இருந்தது. இப்போது அந்தப் படத்தை பார்த்திபனே இயக்கப்போகிறார்.



## கோவில் பட்டி வீரலட்சுமி

'சிவலப் பேரி பாண்டி' போன்று 'கோவில் பட்டி வீரலட்சுமி' என்ற உண்மைச் சம்பவம் இந்திய வார இதழ் ஒன்றில் தொடராக வந்தது. இது இப்போது படமாகப் போகிறது.

'சிவலப்பேரி பாண்டி', 'உதவும் கரங்கள்' ஆகிய படங்களில் நடித்த நெப்போலியன், ரமேஷ் கதாநாயகனாக இப்படத்தில் நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக இரண்டாவது இந்திய அழகியாகத் தெரிவு செய்யப்பட்ட சங்கீதா மேனன் நடிக்கிறார். அலெக்ஸ் முக்கிய வேடத்தில் நடிக்கிறார். மேலும் பல முன்னணி நட்சத்திரங்கள் இதில் இடம் பெறுகின்றனர்.

பல படங்களுக்குக் கதை வசனம் எழுதியவரும் 'அமரன்' போன்ற படங்களை இயக்கியவருமான கே.ராஜேஸ்வர் திரைக்கதை வசனம் எழுதி இப்படத்தை இயக்குகிறார்.

ஆதித்யன் இசையமைக்கும் இப்படத்தில் பாடல்களை வைரமுத்து எழுதுகிறார்.

## 'சிம்மாசனம்' படப்பி[...]

இப்ராஹிம் ராவுத்தர் தயாரிக்க விஜயகாந்த் நடிக்கும் 'சிம்மாசனம்' படத்தின் [illegible] ஆரம்பமாகியது.

தெருக்கூத்து திரை அதிரவைக்கும் [illegible] பாரம்பரியமிக்க பாத்துக்கிட்டே [illegible] காந்த் ஆடிப்பாடும் காட்சி கோவில் [illegible] ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் [illegible]

இக்காட்சியில் பல நடிக-நடிகைகள் [illegible] டனர். இதையடுத்து விஜயகாந்த் [illegible] மோதும் காட்சிகளும் படம் பிடிக்கப்[illegible]

ராதாரவி, செந்தில், ராஜன் பி.தேவ், அனுமோகன், குஷ்பு, மந்த்ரா, மனோரமா, ஷாமிலி, பாத்திமா பாபு போன்றோர் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இப்படத்தை இயக்குகிறார் ஏவ்வரன் என்ற புதியவர்.



## காதோடு சொல்லுகிறோம்

பிரமாண்ட வெற்றிப்படங்களை இயக்கும் அந்த தானெழுந்து இயக்குநர் மீது வருமான வரித் துறையினர் கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டு உன்னிப்பாய்க் கவனித்து வருகிறார்களாம். இதனால் அந்த இயக்குநர் பணப் பரிமாற்றங்களை காரில் வைத்தே செய்து வருகிறாராம்.

இடுப்பில் மடிப்பு இருக்கும் அந்த அம்சமான நடிகைக்கு இப்போது கைவசம் படங்கள் இல்லையாம். நடிகை பலமுறையும் முயன்றும் வாய்ப்புகள் வரவில்லையாம். இப்போது நடிகை வெளிநாடுகளில் கலைச் சேவை செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறாராம்.

தேச பக்தராகக் காட்டிக் கொள்ளும் ஆக்சன் நடிகர் நடித்து கடைசியாக வெளிவந்த படம் படுதோல்வியாம். படத்தின் தோல்விக்குக் காரணம் நடிகர், இயக்குநரது வேலையில் அடிக்கடி மூக்கை நுழைத்துக் கதையை மாற்றியதால்தானாம்.

ஜீன்ஸ் நடிகரின் 'ஆசைப்படுகிறேன்' என்று பெருள்படும் படத்தில் அறிமுகமாகும் கன்னட இறக்குமதியான நடிகை படத்தின் இயக்குநரின் அன்புக்குப் பாத்திரமாகி விட்டாராம்.

இறைவனைக் காணக் கூடிய சிரிப்பின் பெயரில் படத்தைத் தயாரித்தவர் அதன் இயக்குநர். அதில் நடித்த நடனப்புயலுக்கு சம்பளத்தில் ஐந்து லகரம் தயாரிப்பாளரான இயக்குநர் பிறகு தருவதாகக் கூறினாராம். ஆனால் '5 லகரத்தைத் தந்தால்தான் படத்தைத் திரையிட அனுமதிப்பேன்' என்று கறாராகப் பேசி பணத்தை வாங்கினாராம்.



பிரபு-அல்போன்ஸா
படம்: திருப்பதி ஏழுமலை வெங்கடேசா

நடத்தி[...]
'கவிப்பேர[...]
தேவாவுக்கு [...]
இந்த விழா[...]
திரையுலகப் பி[...]

## காதலுக்கு [...]

பின் காதலுக்கு [...]
'காதலே நிம்மதி' [...]
அவற்றில் சில
இப்போது [...]
ஒழிக' என்று [...]
படத்தின் பெயர் [...]
பனின் இத்தப்[...]



கார்த்திக்-ரோஜா
படம் சந்தித்தவேளை

## சங்கீதாவின் குழந்தையைக் கொல்ல முயற்சி!

அம்மன் பக்தையான காயத்ரிக்கும் பிரபுவுக்கும் பிறக்கும் குழந்தைக்கு பல இலட்சக்கணக்கான சொத்துக்களை எழுதி வைக்கிறார் காயத்ரியின் தந்தை.

காயத்ரிக்குக் குழந்தையும் பிறக்கிறது. சொத்துக்களைக் கைப்பற்றுவதற்காக காயத்ரியின் மாமனாரும் மாமியாரும் குழந்தையைக் கொல்ல முயற்சி செய்கின்றனர்.

அப்போது மாமியாரின் கை விளங்காமல் போய்விடுகிறது. மாமனாரின் வேட்டி தானாகத் தீப்பிடித்துக் கொள்கிறது. இதனால் திகில் அடையும் அவர்களுக்கு பிறகுதான் தெரிகிறது இவற்றுக்கெல்லாம் காரணம் குழந்தையின் கழுத்தில் இருக்கும் தாயத்து என்று.

உடனே தாயத்தைக் கழற்றி எறிவதற்காக அதைத்தொட, 'ஷொக்' அடித்து இருவரும் மயங்கி விழுகின்றனர்.

இப்படியொரு காட்சி 'கண்திறந்து பாரம்மா' படத்திற்காகப் படமாக்கப் பட்டது. காயத்ரியாக சங்கீதாவும் பிரபுவாக ரஞ்சித்தும், மாமனாராக பாபுமோகனும் மாமியாராக வைவிஜயாவும் நடித்தனர்.

இவர்களுடன் வாத விக்ரம், 'மகாநதி' சங்கர், 'சாபனின்' பாலு, இந்துமாஸ்டர் மகேந்திரன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இப்படத்தை இயக்குகிறார் செல்வா எல்.சி.

## லைலா ஓ லைலா

'கள்ளழகர்' படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார் லைலா. படம் படுதோல்வி. இரண்டாவதாக 'காமராச' படத்தில் நாயகியானார். படம் பாதியிலேயே நிறுத்தப்பட்டு விட்டது.

'முதல்வன்' படத்தில் இரண்டாவது நாயகி என்று சொல்லி ஓரிரு காட்சிகளில் மட்டும் தலை காட்ட வைத்து விட்டார்கள்.

இப்போது 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக பிரசாந்துடன் நடிக்க வைத்திருக்கிறார்கள். இந்தப் படத்திலாவது லைலாவுக்கு அதிர்ஷ்டம் கைகொடுக்குமா?

## உதவும் கரம்

'ராசி', 'காதல் மன்னன்' தோல்வியடைந்ததால் நஷ்டப்பட்ட அப்படங்களின் தயாரிப்பாளர்களுக்கு 'வாலி', 'அமர்க்களம்' ஆகிய படங்களில் சம்பளம் வாங்காது நடித்துக் கொடுத்தார் அஜித்குமார்.

இப்போது- 'பிரேம புஸ்தகம்' என்ற தெலுங்குப் படத்தில் தன்னை அறிமுகப்படுத்திய பிரபல தயாரிப்பாளர் பூர்ணசந்திராவுக்கு சம்பளம் வாங்காது நடித்துக் கொடுக்கவுள்ளார் அஜித்குமார்.

## அர்ஜுனின் அடுத்த படம்

அர்ஜுனின் 'முதல்வன்' பெரும் வெற்றிக்கு திருஷ்டி பரிகாரமாக அமைந்தது 'சுதந்திரம்'. இதை யடுத்து இவர் புதிதாக ஒப்புக்கொண்டிருக்கும் படம் 'வானவில்'.

'குருபார்வை' படத்தைத் தயாரித்த மனோஜ்குமாரின் குரு ஃபிலிம்ஸ் இப்படத்தைத் தயாரிக்கிறது.

அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக அபிராமி என்னும் புதுமுகம் அறிமுகமாகிறார். பிரகாஷ்ராஜ் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

லட்சுமி, மணிவண்ணன், அலெக்ஸ், சந்தானபாரதி, ராக்கி ஆகியோரும் நடிக்கின்றனர்.

கார்த்திக்ராஜா ஒளிப்பதிவு செய்ய வைரமுத்துவின் பாடல்களுக்கு தேவா இசையமைக்கிறார்.

படத்தைத் தயாரிப்பதுடன் கதை, திரைக்கதை அமைத்து இயக்கிறார் மனோஜ்குமார்.

வருகின்ற மே மாதம் படத்தை வெளியிடுவதற்காக இப்படத்தின் படப் பிடிப்புக்கள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.



ராகுல்-பாவனா
படம் ஜெயம்

## ...ப்பிடிப்பு ஆரம்பம்

...முதன்முறையாக 3 வேடங்களில் ...பாடல் காட்சியுடன்

...பாட்டு சொர் ... என்று விஜய ... ஒன்றில் ...ப்பட்டது.

## ஒன்றரை நாளில்

'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படத்தில் இடம் பெறும் ஒரு பாடல் காட்சியை ஒன்றரைநாளில் படமாக்கியுள்ளார் அதன் இயக்குநர் ராஜீவ் மேனன்.

## விக்ரமனின் நேர்முகத் தேர்வு

'பூவே உனக்காக', 'சூர்யவம்சம்', 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்', 'வானத்தைப் போல', எனத் தொடர்ந்து வெற்றிப்படங்களை இயக்கி வரும் விக்ரமனிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிய பலர் வருகின்றனர்.

உதவி இயக்குநராகச் சேரவரும் அனைவரையும் ஒன்று திரட்டி, நேர்முகத் தேர்வின் மூலம் ஒரு சிலரை மட்டும் சேர்த்துக் கொள்கிறார் விக்ரமன்.

வெற்றிப்படங்களைக் கொடுப்பது மட்டுமன்றி, உதவி இயக்குநர்களுக்குத் தயாரிப்பாளர்களிடமிருந்து நல்ல ஊதியமும் பெற்றுக் கொடுக்கிறார் விக்ரமன்.

## பாசில் இயக்கத்தில் விக்ரம்?

ஸ்ரீதரின் 'தந்துவிட்டேன் என்னை', எஸ்.பி.முத்துராமனின் 'காவல்கீதம்', பி.சி.ஸ்ரீராமின் 'மீரா' என பெரிய பெரிய இயக்குநர்களின் படங்களில் நடித்திருந்தும் பெரிய திருப்புமுனை கிடைக்காத விக்ரமிற்கு புதிய இயக்குநர் பாலாவின் 'சேது' மூலம் பெரும் புகழ் கிடைத்துள்ளது. அது மட்டுமல்லாது பல படவாய்ப்புக்களும் வந்துள்ளன.

பிரபல இயக்குநர் பாசில் இயக்கத்தில் விக்ரம் நடிக்கவிருப்பதாக ஒரு செய்தி உலவுகிறது. 'கண்ணுக்குள் நிலவு' படத்தின் தோல்விக்குப் பின் சில காலம் தமிழ்ப்படங்களை இயக்குவதைத் தள்ளிப்போட்ட பாசில் முடிவை மாற்றி விட்டாரா?



பாலகிருஷ்ணா-அஞ்சலா சவேரி
படம் சண்முகபாண்டியன்

## இசைப் பேரரசு பட்டம்

குறுகிய காலத்திற்குள் 300 படங்களுக்கு இசையமைத்து விட்டார் தேனிசைத் தென்றல் தேவா. இவர் இசையமைத்திருக்கும் 300வது படம் 'மௌனம் பேசதடி'. விரைவில் இதன் படப்பிடிப்புக்கள் தொடங்கவுள்ளன.

இதையொட்டி தேவாவுக்கு 'இசைப்பேரரசு' என்ற பட்டம் அண்மையில் வழங்கப்பட்டது.

...'கரங்கள்' என்ற சமூகசேவை அமைப்பு அண்மையில் ...விழாவில் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதியால் ...பட்டம் பெற்ற கவிஞர் வைரமுத்து இசையமைப்பாளர் ...'இசைப்பேரரசு' பட்டத்தை வழங்கினார்.

...ஆர்.பார்த்திபன், திருமதி சீதா பார்த்திபன் உட்பட பல ...பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

## ...க்கு அவமரியாதை?

'காதல் கோட்டை', 'காதலுக்கு மரியாதை' போன்ற படங்களின் மாபெரும் வெற்றிக்குப் ...மரியாதை செய்யும் தலைப்புக்களில் பல படங்கள் வெளியாகின. ...'காலமெல்லாம் காதல் வாழ்க' 'காதல் கவிதை' என்பவை ...

...பார்த்திபன் தயாரித்து இயக்கி நடிக்கும் புதிய படத்திற்கு 'காதல் ...பெயரிட்டுள்ளார். காதலுக்கு அவமரியாதை செய்வது போன்று ...இருக்கிறதா? எதையும் வித்தியாசமாகச் செய்து வரும் பார்த்தி... படம் வரும் வரை பொறுத்திருந்து பாருங்கள்.

திரையுலக மறுபக்கம் (142)

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

## போதையின் பிடியில் சிக்கிய நடிகை

குழந்தை நட்சத்திரமாக நடிக்க ஆரம்பித்து கதாநாயகியானவர் இந்த நடிகை.

மூன்றெழுத்துப் பெயரைக் கொண்டிருந்தாலும் இன்னொரு இலக்கத்துடன் தொடர்புடைய பெயருடையவர்.

இவர் கதாநாயகியாக அறிமுகமான படம் வெற்றி பெற்றிருந்தாலும் அதன் பிறகு இவருக்கு எதிர்பார்த்தபடி பட வாய்ப்புக்கள் வரவில்லை. சில படங்களில் தங்கை வேடங்களே கிடைத்தன. கிடைத்தவரை இலாபம் என்று அவற்றிலும் நடித்தார்.

இவர் குழந்தை நட்சத்திரமாக நடித்துக் கொண்டிருந்தபோது வில்லன் வேடங்களில் நடித்தவரைச் சில வருடங்களுக்கு முன் இரகசியமாகத் திருமணம் செய்தார்.

மூவேந்தர்களில் கடைசிப் பெயர்கொண்ட சூப்பர் நடிகரின் படத்தில் வில்லனாக நடித்திருக்கும் அந்த நடிகர், கன்னடப்படங்களில் நாயகனாக நடித்து வருகிறார். இவர் நடித்த சில கன்னடப் படங்கள் தமிழிலும் மொழிமாற்றப்பட்டுள்ளன.

ஏற்கனவே இரண்டு மனைவிகளுடன் வாழ்க்கை நடத்தி வந்த நடிகருக்கு மூன்றாவதாக வாழ்க்கைப்பட்டார் நடிகை.

'ஆசை அறுபது நாள், மோகம் முப்பது' நாள் என்பது அந்த நடிகருக்கு இந்த நடிகை விஷயத்தில் வந்து விட்டது.

தினமும் அடியும் உதையும் தான் நடிகைக்கு வாழ்க்கையாகி விட்டது.

நடிகைக்குக் குழந்தையும் பிறந்தது. நடிகரின் இம்சைகள் நாளுக்கு நாள் கூடியதே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை.

இறுதியில் நடிகரை விட்டுப் பிரிந்து நடிகை தனியாக வாழ ஆரம்பித்தார். வாழ்க்கையை ஓட்டப் பணம் வேண்டுமே என்று நடிகை மறுபடி துண்டு துக்கடா வேடங்களில் எல்லாம் நடிக்க ஆரம்பித்தார்.

ஓரிரு படங்களில் நகைச்சுவை வேடங்களிலும் நடித்தார்.

பட வாய்ப்புக்களும் பெரிதாகக் கிடைக்கவில்லை. விரக்தியடைந்த நடிகை மதுவை நாடினார். மதுவினால் மனக்கவலைகளை மறக்கலாம் என்று நடிகை மெல்ல மெல்ல போதைக்கு அடிமையானார்.

அவரை நாடி வருபவர்களும் அவருக்கு போதையேற்றி தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

இப்போது போதையின் பிடியில் சிக்கிச் சீரழிகிறார் இந்த நடிகை.



ரசிகா

# கொழும்பில் கம்பர் விழா
## கம்பர் கழகம் ஏற்பாடு

கொழும்பு மாநகரில் வழமைபோல் இம்முறையும் கொழும்புக் கம்பன் கழகம் கம்பர் விழாவினைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஏப்ரல் 20ம் திகதி வியாழக்கிழமை விழா ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும்.

தமிழ் நாட்டிலிருந்து அறிஞர்கள் பலர் இவ்விழாவில் கலந்து சிறப்பிப்பார்கள். நம் நாட்டு அறிஞர்களும் பங்குபற்றுவார்கள். தொடக்க விழா வியாழன் மாலை ஊர் வலத்துடன் ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமை முதல் தினசரி காலை 9 மணி முதல் இரவு 8.30 மணிவரை இரு பகுதிகளாக நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளில் பட்டிமண்டபம், கவியரங்கம், கருத்தரங்கம், வழக்காடு மன்றம், இளைஞர் அரங்கம், கலைதெரிய ரங்கம், அறிஞர் கௌரவிப்பு ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறவிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.




### பறக்கும் பத்து

பசி வந்தால்
பத்தும் பறந்து
போகும் என்று
சொல்லிக் கேள்விப்
பட்டிருக்கிறோம்.
இவைதான் அந்தப்
பறக்கும் பத்து:

1. மானம் 2. குலம்
3. கல்வி 4. வன்மை
5. தரம் 6. அறிவுடமை
7. தானம் 8. காமம்
9. முயற்சி
10. தாளாண்மை.

### சிறந்தவை

சிறந்த உறவு - அன்பு
சிறந்த மருந்து - சிரிப்பு
சிறந்த ஆசிரியர் - அனுபவம்
சிறந்த புத்தகம் - வாழ்க்கை
சிறந்த படிப்பு - பொறுமை
சிறந்த அணிகலன் - புன்னகை.

### முதுமொழி

ஒரு பெண்ணையோ,
ஒரு பேருந்தையோ பின்
தொடர்ந்து ஓட வேண்டாம்.
அடுத்து இன்னொன்று
கிடைக்கும்.

-இத்தாலி-

## எதிர்காலம்



மட்பாண்டம் செய்யும் ஒரு சர்தார்ஜியிடம் ஒரு கழுதை இருந்தது. இந்தக் கழுதையை மற்றொரு கழுதை சந்தித்தது.

புதிய கழுதை சொன்னது:

"உன்னைப் பார்த்தால் பாவமாக இருக்கிறது. அன்றாடம் நீ மட்பாண்டங்களைச் சுமந்து சந்தைக்குச் செல்கிறாய். என்னைப்பார் என் எஜமான் என்னை நன்றாக வைத்திருக்கிறார். பேசாமல் நீயும் என் எஜமானிடமே வேலைக்கு வந்துவிடு."


"நான் மிகவும் கஷ்டப்படுகிறேன் தான். இருந்தாலும் நான் இந்த சர்தார்ஜியை விட்டு வரமாட்டேன்.

இந்த சர்தார்ஜி சற்றுக் கோபக்காரன். கோபத்தில் தன் மகளைத் திட்டும்போது, 'உன்னை எந்தக் கழுதைக்காவது கட்டிக் கொடுத்து விடுகிறேன் பார்' என்பான்.

எனவே, இங்கு எனக்கு நல்ல எதிர்காலத்திற்கு வாய்ப்பு இருக்கிறது," என்றது முதல் கழுதை.

-குஷ்வந்த் சிங்-

## புதிராகிறது தானே



## நில்-கவனி-முன்னேறு
### 5 கட்டளைகள்



★ சிறு வயதிலிருந்தே சேமிக்கும் பழக்கத்தை கைகொள்ளுங்கள்.

★ சொந்தமாகத் தொழில் ஆரம்பித்தீர்கள் என்றால், ஆடம்பர வாழ்க்கையைத் தொடங்காமல், உங்களுக்கு ஊதியமாக மிகச் சொற்பமான பணத்தை எடுத்துக்கொண்டு, மிச்ச வருவாய் முழுவதையும் மீண்டும் முலதனமாகப் போடுங்கள்.

★ ஆரம்பத்தில் சொந்தமாகத் தொழிலில் இறங்கும்போது தோல்விகளைச் சந்திக்க வேண்டி வரும். அதைக் கண்டு துவண்டு விடாதீர்கள்.

★ 'மாடு மாதிரி உழைப்பது' என்று சொல்வார்களே அப்படி உழையுங்கள். எதைச் செய்தாலும் உங்கள் தொழிலுக்கு உதவியாக இருக்கிறதா என்று பாருங்கள்.

★ எப்போதும் மனைவி, குழந்தை, என்று குடும்பத்தைக் கட்டிக் கொண்டே இருக்காதீர்கள்.

வருங்காலத்தில் நீங்கள் வெற்றிகரமான தொழிலதிபர்களாக 'த மேக்கிங் ஏ மில்லியனேர்' என்ற புத்தகம் இந்த 5 கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்படி கூறுகின்றது.

## புலம் பெயர்ந்தோர்

வயல் தனை விட்டு
பிடுங்கிய நாற்றாய்
வாழ்ந்த வீட்டையும்
வாழ வைத்த
வளமான மண்ணையும்
விட்டு வெளியேறி
வாடிப்போனது
எம் இதயம்!
••
வெயிலில் காய்ந்து
வியர்வை தனைச்சிந்தி
வளமாய் வாழ்ந்த
எம்மினம்,
குளிர்தனில் குதிக்கால்
குறண்டும் போதும்
குண்டடியிலும் பார்க்க
குளிரும்? குறண்டலும்
கோரமல்ல;
அழுகின்ற பிள்ளைக்கு
ஆறுதலுக்கு இனிப்பாய்
தன்னைத்தானே
தேற்றுகின்றது!
••
இதயத்தில்
ஏராளம் சுமைகள், சோகங்கள்
சொல்ல முடியவில்லை.
வேதனையின் விளிம்பில்
விளக்கின் முன் விட்டில்களாய்
விடை தெரியா வினாக்களாய்
விடியலுக்காய்
விழித்திருப்போர்!

நவிண்டிலூர்
அருமைத்துரை
பரமேஸ்வரன், இலண்டன்.

## ஊனமான சில..... உண்மைகள்

உண்மைகள்
உன்னுள் மட்டும் ஊனமாகவில்லை!
என்னிடத்திலும்தான்!

உன் மௌனத்தின்
முகவரியை.... மனதிற்குள்
தொலைத்துவிட்டு
மண்ணோடு தேடுகிறேன்
உன்னோடு வாழ்வதற்கு...!

நீ நிலவோடு நின்றாலும்
என் நெஞ்சோடு வாழ்கிறாய்.
என்றே ஒரு நிமிடம்
நீ என்னுள் கருத்தரித்து
இதயத்தை உதைத்தாய்
வலி தெரியவில்லை!

வாழ்வதற்கு ஒரு வாழ்க்கை வரம்கேட்டு
வந்ததடி ஓர் கடிதம்.....
விழியிருந்தும் அழமுடியாத வலியடி
வாழ்க்கை ஆயிரம் அர்த்தங்களின்
அத்திவாரம்!
ஆனாலும், அர்த்தமில்லா அதிஷ்டசாலி
நான்!

அன்று– நீ நிறையவே அழுதாயாம்
ஆனால்...
காரணமும் புரியவில்லையாம்.
கண்ணீரும் தெரியவில்லையாம்!
ஏன்? மீண்டும் ஒரு
மௌன நாடகம்!

கே.ஏ. ஜெயராஜ், ஜெனோவா–
இத்தாலி.

## மனம்

மனம் ஒரு
குரங்குதான்–அது
எங்கெங்கோ
தாவித்திரிகின்றது.
••
சில சமயங்களில்
குழந்தையைப்
போன்று
அடம் பிடிக்கிறது.
••
மறக்க
நினைப்பவற்றை
மறக்கமுடியாது
தத்தளிக்கின்றது.
••
அளவில்லாத
சந்தோஷத்தில்
ஆர்ப்பரிக்கின்றது.
••
தாங்க முடியாத
துக்கத்தினால்
துவண்டு
போகின்றது.
••
அடைய
முடியாதவற்றை
எண்ணி
ஏங்குகின்றது.
••
இருப்பதைக்
கொண்டு
திருப்தியடைய
மறுக்கின்றது.
••
இருப்பினும்
மனமென்பது
எதுவென்று
வரையறுக்க
முடியாதிருக்கின்றது!

எஸ். தேவகி,
வவுனியா.

## தர்மம்

நண்பா,
ஆத்மீகத் திருவிளையாடலில்
நீயும் நானும் தோற்றுப்
போனோமா?
இல்லை....
தோற்கவே மாட்டோமா?
என்றும்
பாசக் கண்ணீர்
நம்மை நனைத்தாலும்,
பிரிவுக் கண்ணீர்
நனைக்கவே கூடாது!
நண்பா,
பிரிவுக் கண்ணீர்
நனைக்கவே கூடாது!
●▫
துப்பாக்கி வேட்டுக்கள்
நம் இளைய இதயங்களை
துளைத்தாலும் பரவாயில்லை!
அத்துவாரத்தினூடாகவே நாம்
தர்மத்தைக் காணலாமல்லவா?
ஏன்?
அது நம் மனங்களுக்குகூட
பாலங்கள் அல்லவா?
●▫
ஒன்று மட்டும்
ஞாபகத்தில் வேண்டும் நண்பா!
'நீ விழித்தால்தான்
உனக்கு விடியலென்பதை'

அக்கரைப்பற்று–அக்பர் ஷபீக்.

## தீர்ப்பு

உண்மையைச் சொன்னால்
எங்கள் ஊரில் உள்ள
அப்பாவி ஆள் என்றால்
அரவிந்தன் அண்ணாதான்!
▫▫
வயிற்றுப் பிணிபோக்க
வெயில், மழையும் பாராது,
வேலைவெட்டி செய்வதால்
வறண்டே போய்விட்டான்!
▫▫
விறகு கொண்டு வந்தபோது
விழுந்து காயப்பட்டு
மேனியெங்கும் தழும்புகள்!
குடிசையை வெடி குண்டுகள்
குடி (ஏரி)த்து விட்டதனால்
அடையாள அட்டையும்
அதற்குள் மாண்டுபோனது.
▫▫



ஊர் றவுண்டப்பில்–அவன்
உள்ளாகிவிட்டபோது–உள
உருவத்தைப் பார்த்தே
தீர்ப்பு வழங்கப்பட்டது
'பயங்கர வாதி'யென்று.

பாலமுனை, வாஹிட்.

## தேன் கிண்ணம்



## எப்போது வரும்!

பட்டுச்சேலை கட்டி
பாடித்திரிந்தவள்
கட்டத் துணியின்றி
கதி கலங்கி நின்றாள்–
அகதி முகாமில்!
★★
அள்ளிக் கொடுத்த தன் கையாள்
கிள்ளித் தரும்படி
கெஞ்சிக் கேட்கிறாள்–
வஞ்சியவள் பிச்சை!
★★
நெய்த உடைகள்
மலிந்த காலத்திலே
மானம் மறைக்க துணியில்லை;
இலையினால் மறைக்க
நினைத்தாள்
இலையுள்ள மரங்கலெல்லாம்
இருப்பிடங்களாகிப் போகின
எம்மவருக்கு!
★★
கண் கலங்கி
கண்ணீர் விட்டாள்
எப்போ வரும்
பழைய வாழ்வு?

இரா. விஜயலெட்சுமி,
பொத்துவில்–03.

## பேனா நண்பர்கள்



பெயர்:
எஃப்.றிஸ்கா பானு.
வயது: 23
முகவரி: HOUSE NO.17
STREET NO.02, BLOCK NO-07
SABA AL-SAUM, KUWAIT.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: எஸ்.அப்துல் கபூர்.
வயது: 22
முகவரி: AL-SUWAIKET
P.O. BOX-4228
AL-KHOBAR-31952, K.S.A.
பொழுது போக்கு:
வழமையானவை..

## இந்தவாரம் உங்கள் பலன்
### 02.04.2000 முதல் 08.04.2000வரை
ஜோதிடர் 'கானா'

**மேடம் :**
எடுத்தவிடயம் சித்திபெறும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். பலநாள் நோய்துன்ப நிவர்த்தி பெறும். கல்வி, தொழில் முயற்சிகள் ஊக்கம் பெறும். திருமணத் தடைகள் விலகும், அச்சுவினிக் காரப் பெண்களுக்கு திருமணமுயற்சிகள் பலனளிக்கும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 02, 07.

**இடபம் :**
நோய்துன்பமாற்றம் பெறும். தூர தேசப்பயணத்துக்கு இடமுண்டு. மனைவியுடன் சச்சரவு ஏற்படலாம். பிரச்சனைகள் தலையெடுக்கும், பணவிடயம் தடைப்படும். ரோகிணி நட்சத்திரர் நன்மைகளை பெறமாட்டார்கள். நிதானமாக இருக்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : சாம்பல்வர்ணம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 04, 06.

**மிதுனம் :**
பொதுசனமதிப்பும் பெண்களால் மகிழ்ச்சியும் ஏற்படும். எதிர்பார்த்த வெற்றிகிட்டும். தொழில் நிலை சிறப்படையும் கடன்பிரச்சனைகள் குறைவடையும். பணவசதிகள் பெருகும். பரீட்சையில் வெற்றி கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 04, 08.

**கடகம் :**
தடைதாமதங்களுடன் கருமச் செயற்படும் மருத்துவ மனையுடன் செலவும் பெரியோர்களின் ஆதரவும் கிடைக்காது. திருமணத் தடை ஏற்படும். குழந்தைகளின் கல்வி பாதிப் படையும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள் : 02, 08.

**சிம்மம் :**
பிரிந்த காதலர்கள் ஒன்று கூடுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கும். பண, பொன்பொருள் சேர்க்கைக்கு இடமுண்டு. மக நட்சத்திரர் மனச்சந்தோஷம் அடைவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 03, 05.

**கன்னி :**
பணமோசடிக்கு இடமுண்டு. தேவையற்ற சிக்கல்களும் எடுத்த கருமம் தடைப்படும் பிறரால் துன்பமும் ஏற்படும். கல்வி முயற்சிகள் தாமதப் படும். உத்தர நட்சத்திரப் பெண்களுக்கு, பிரச்சனைகள் வரும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 02, 07.

**துலாம் :**
எண்ணிய விடயங்கள் நிறைவேறும். கணவரால் மகிழ்ச்சி ஏற்படும். ஸ்தல யாத்திரையும், பெரியோர்களின் ஆசிர்வாதமும் ஏற்படும். சுவாதிப்பெண்களுக்கு கணவரால் உதவிகள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 05, 06.

**விருட்சிகம் :**
நோய்துன்ப மாற்றமும் சாதகமான பலவிடயங்களில் கை கூடும். பண செலவுகளும் பொருள் விரயமும் ஏற்படும், பிள்ளைகளின் தூர இடத்து செய்திகள் கிடைக்கும். பணச் செலவை கேட்டைக் காரர்கள் அசதாரணமாக பார்க்க வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 03, 06.

**தனுசு :**
வெளியிடப்பயணத்துக்கு இடமுண்டு. கல்வி சம்பந்தபட்ட வாய்ப்புக்கள் கிட்டும். திருமணத்தடைகள் விலகும் உறவினர்களால் உதவிகள் கிட்டும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : பிங்வர்ணம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 05, 06.

**மகரம் :**
மனச்சஞ்சலம் ஏற்படும். நண்பர்களால் தொல்லை ஏற்படும். தொழில், பணக்குறைவடையும், பிள்ளைகளுக்கு சிக்கல்கள் வந்து போகும், திருவோணக்காரர் கவனம் செலுத்த வேண்டும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 06, 08.

**கும்பம் :**
பணச்செலவு அதிகரிக்கும். குடும்பத்தில் அமளிதுமளிகள் ஏற்படலாம். எடுத்த விடயங்கள் நாட்படுதல். பெண்களுக்கு, நோய்துன்பம் கூடும். பிள்ளைகளால் பணவரவு. வார இறுதியில் ஸ்தலயாத்திரைக்கும் இடமுண்டு. சதயப்பெண்களுக்கு நோய்துன்பம் வரலாம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 04, 08.

**மீனம் :**
அரச உதவி, ஆலயதரிசனம், கல்வியில் ஊக்கமுயற்ச்சியும் ஏற்படும். புதிய செய்திகளால் மன மகிழ்வுண்டாகும், பதவி உயர்வு கிட்டும், உத்திரட்டாதி பெண்களுக்கு ஊக்கமான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 03, 05.

# லேடீஸ் ஸ்பெஷல்

## நீங்களும் அழகியாக......



● லிப்ஸ்டிக்கை உதட்டின் மீது பூசிக்கொண்ட பிறகு ஒரு துண்டு ஐஸ் கட்டியை உதட்டின் மேல் தேய்த்தால் லிப்ஸ்டிக் நீண்ட நேரம் கலையாமல் இருக்கும்.

● எண்ணெய்ப் பசையுள்ள சருமம் உள்ளவர்கள் பப்பாளிச் சாற்றுடன் எலுமிச்சம் பழச்சாறு கொஞ்சம் கலந்து முகத்தில் தடவி அரைமணி கழித்துக் கழுவி விட்டால் சருமம் 'பளிச்' சென்றாகி விடும்.

● ஒரு மேசைக்கரண்டி ஒலிவ் எண்ணையுடன் 2 மேசைக்கரண்டி பாலாடையைச் சேர்த்துக் கலந்து முகத்தில் தேய்த்து 10 நிமிடங்கள் ஊறிய பின் துடைத்து விட்டால், உலர்ந்த சருமம் 'பள பள' என்றாகிவிடும்.

● மென்மையான துணியைப் பன்னீரில் நனைத்துக் கண்கள் மீது சிறிது நேரம் வைத்துக் கொண்டிருந்தால் கண்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறும். ஒரு மேசைக் கரண்டி ஒலிவ் எண்ணெயுடன் கொஞ்சம் மேசையுப்பு கலந்து கை, கால்களின் மீது தடவி, சிறிது நேரம் கழித்து இளம் சூடான நீரை விட்டுக் கழுவினால் கை, கால்கள் மிருதுவாகும்.

● கை சொரசொரப்பாக இருந்தால் இரவு படுக்கப் போகும் முன் ஒரு சில துளி கிளிசரினையும், சில துளி லெமன் ஒயிலையும் சேர்த்துக் கை மீது தடவி வந்தால் கை 'வழு வழு' என்றாகும்.

● ஒரு மேசைக்கரண்டி சமையல் சோடாவுடன் சிறிது சூடான வெந்நீர் கலந்து கால் விரல்களுக்கிடையே தடவி வந்தால் நீர்ச்சிரங்கு குணமாகும். வெதுவெப்பான நீரில் கொஞ்சம் உப்பைப்போட்டு அதில் கால்களை தினமும் 10 நிமிடங்கள் வைத்து வந்தால் பாதம் மிருதுவாகும். வெடிப்புகள் இருந்தால் மறையும்.

● சதுர முகம் கொண்ட பெண்களுக்கு ஒரு கம்பீரம் தனியாக இருக்கும். அவர்கள் கழுத்துப் புறத்தில் நிறைய கூந்தல் சுருள் சுருளாக இருக்கும்படி செய்து கொண்டால் முகம் சதுரமாகத் தெரியாது.

## சளி வராமல் இருக்க...

சிலருக்குத் தலைக்குக் குளித்தால் சளி பிடிக்கிறது. 'சைனஸ்' பிரச்சனை வருகிறது. இதைத் தவிர்க்க ஒரு யோசனை:

தலைக்குக் குளிக்கும்போது முதலில் உடலுக்குத் தண்ணீர் வார்த்துக் கொள்ளுங் கள். பின் தலையில் நீர் வார்க்கும்போது, உங்கள் வாய் நிரம்ப தண்ணீர் வைத்துக் கொள்ளுங்கள்.

வாயில் தண்ணீரை வைத்துக் கொண்டு தலையில் தண்ணீர் ஊற்றிக் குளித்தால் சளியே பிடிக்காது.

ஆறுகளில் குளிக்கும்போது, ஆற்று நீரை ஒரு விழுங்கு வாயில் வைத்துக் கொண்டு, நீரில் மூழ்கி எழுந்து விடவும்; சளி பிடிக்காது.

## சூப்பர் சமையல் டிப்ஸ்



❂ பண்டிகை தினங்களில் எக்கச்சக்கமாகச் சாப்பிட்டு வயிறு உப்புசமாக இருக்கிறதா? மோரில் சிறிதளவு தண்ணீர் விட்டு உப்பு, பெருங்காயத்தூள், சிறிது சீனி போட்டுக் கலக்கி ஒரு டம்பளர் குடியுங்கள். கொஞ்சம் நேரத்தில் வயிறு உப்புசம் சரியாகிவிடும்.

❂ இஞ்சியைச் சின்னச் சின்னத் துண்டுகளாக அரிந்து ஒரு கப் கோதுமை ம்ாவை ஒரு கரண்டி அரிசி மாவுடன் போட்டு 3,4 பச்சை மிளகாய், கொஞ்சம் உப்பு போட்டு பிசைந்து பிசறி பக்கோடா செய்து பாருங்கள். சூப்பராக இருக்கும்.

❂ துவரம் பருப்பு, கடலைப் பருப்பு சம அளவு எடுத்துப் பொன்னிறமாக வறுத்து அத்தோடு தேவையான புளி, உப்பு வைத்து அரைத்தால் பருப்புத் துவையல் நல்ல ருசியாக இருக்கும்.

❂ உளுந்தை ஊறவைத்து, அரைத்து, எடுத்து கோதுமை மாவுடன் கலந்து தோசை வார்த்தால் கோதுமைத் தோசை சுவையாக இருக்கும்.

❂ மிளகு, மிளகாய், துவரம் பருப்பு, சீரகம் ஆகியவற்றை வறுத்து, அரைத்து, மோரில் கலந்து கடுகு தாளித்து, கறிவேப்பிலை போட்டு மோர்க் குழம்பு செய்து பாருங்கள் பிரமாதமாக இருக்கும்.

❂ ஹொட் பேக்கில் சூடான சாப்பாடுகளை மூடி வைக்கும் போது சூட்டினால் உண்டாகும் நீராவியால் உணவுப் பொருட்கள் வீணாகி விடும். ஹொட்பாக்கில் சூடான சாப்பாடுகளை வைத்தவுடன் உலர்ந்த துணியால் மூடி வைத்துவிட்டால் இந்தப் பிரச்சனை வராது.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HI

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

தொழில்:.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 08-04-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது

**32** புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

## கண்களை மூடிய பூனைகள்

'பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போனது என்றாகி விடுமா?' கிளின்ரனுக்கும் மோனிக்காவுக்கும் இவ்வாசகம் மிகவும் பொருந்தும்.

வெள்ளை மாளிகை எப்போதும் பரபரப்பு நிறைந்த இடம். இரகசிய ஒற்றர்கள் சாதாரண உடைகளில் சுற்றித் திரிவர். இது தவிர அந்தப் பெரிய மாளிகையில் அந்நாட்டின் அரசியலோடு மட்டுமல்லாமல், உலக நாடுகளனைத் தினதும் நிலைமைகளைக் கண்காணிக்கும் எத்தனையோ அதிகாரிகளும் ஊழியர்களும் பம்பரம் போல் சுழன்று வருவார்கள்.

பதற்றமும் பரபரப்பும் இரவு பகல் 24 மணி நேரமும் வெள்ளை மாளிகையில் நிறைந்திருக்கும்.

ஜனாதிபதி கிளின்ரனைப் பொறுத்தவரையில், அவரை யார் அணுகுகிறார்கள், எவரிடம் அவர் உரையாடுகிறார், அவருடைய அலுவலகத்துக்குள் யார் பிரவேசிக்கிறார்கள், எவ்வளவு நேரம் அங்கு தங்கியிருக்கிறார்கள் என்பவற்றையெல்லாம் எந்தெந்த மூலையிலிருந்தோ இரகசியக் கண்கள் பார்த்துக் கணக்கெடுத்துக் கொண்டே இருக்கும்.



கிளின்ரனை அவருடைய அலுவலகத்துக்குள் சென்று, மோனிக்கா சில மணி நேரம் இருந்து, திரும்புவதை இதே கழுகுக் கண்கள் நோட்டமிட்ட வண்ணமே இருந்துள்ளன. வெள்ளை மாளிகையில் பணி புரிகின்ற ஊழியர்கள் பலரும், மோனிக்காவின் நடமாட்டங்களை அவதானித்து வந்துள்ளனர். குறிப்பாக அங்கு பணிபுரிகின்ற பெண்களில் பலர் மோனிக்கா கிளின்ரனிடம் அடிக்கடி போய் வருவதை சந்தேகக்கண் கொண்டுதான் பார்த்து வந்துள்ளனர்.

கிளின்ரனிடம் மோனிக்கா-அவர்களுடைய நெருக்கம் தொடங்கிய அந்தக் காலத்தில்-தன்மீது சந்தேகமேற்படாதவாறு, சுற்றியிருப்பவர்களை அவதானித்துவிட்டுத் தான் போய் வருவாள். காலஞ் செல்லச் செல்ல அவளுடைய அத்தகைய முன் ஜாக்கிரதை குறைந்து போய் விட்டது.

### பரவிய வதந்திகள்

இதன் பயனாக 'நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக' கதைகள் பரவலாயின. வெரு சீக்கிரத்தில் கிளின்ரன் - மோனிக்கா உறவு பற்றிய வதந்திகள் வெள்ளை மாளிகை முழுவதும் பரவலாயிற்று. சில உயரதிகாரிகளுக்கும் இது தெரிந்துவிட்டது.

மோனிக்காவின் சித்தி தெப்ராவிடம்கூட இந்த வதந்தி காதிலேறி விட்டது.

"வெள்ளை மாளிகை ஒரு பயங்கரக்குகை ஒருவரையொருவர் பிடித்து விழுங்கும் பொறாமைப் போய்கள் நிறைந்த இடமாகிவிட்டது. கிளின்ரனை நெருங்கி, அவருடன் பழக வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு தோற்றுப்போய் விடுகிறார்கள். எங்கள் பெண் மோனிக்கா எவருடனும் நெருக்கமாக பழகுவாள். அவளுடன் ஒரு முறை பேசிப் பழகியவர்கள் அவளுடைய நட்பை விரும்பவே செய்வார்கள். இதே நிலையில் தான் மோனிக்கா கிளின்ரனுடன் நெருங்கிப் பழகுவது. இது மற்றவர்களுக்குப் பொறாமையாக இருக்கிறது!" என்று தன்னிடம் மோனிக்காவைப் பற்றி கூறியவர்களிடம் சொல்லுவாள் தெப்ரா.

கிளின்ரன், தான் பெருந் தவறுவிட்டு விட்டதாகவும் தன்னுடைய குடும்பத்துக்கு தொடர்ந்து துரோகம் செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் கூறி, மோனிக்காவின் உறவை துண்டித்துவிடப்போவதாக மோனிக்காவிடம் சொல்லியிருந்தாரல்லவா? ஆனால் இவ்வாறு கூறி ஆறு வாரங்களின் பின்னர், மார்ச் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, ஒவல் அலுவலகத்தின் பின் புறத்தில் உள்ள அந்தரங்க அறையில் கிளின்ரனும் மோனிக்காவும் தங்களுடைய காதல் உறவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொண்டனர். மதிய உணவு வேளையில் சில கோப்புகளைத் தூக்கிக் கொண்டு மீண்டும் மோனிக்கா அங்கு சென்றாள். கோப்புகளுக்கிடையில் அவ்ருக்காக அவள் வாங்கிய கழுத்தப்பட்டியை மறைத்து வைத்திருந்தாள். அங்கிருந்த சோபாவில் இருவரும் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவளுடைய மடியில் ஆவணங்களை வைத்திருந்தாள். மோனிக்காவை இருந்த படியே வாரி அணைத்து முத்தமிட்டார். அப்போது ஆவணங்களெல்லாம் தரையில் விழுந்தன.

கிளின்ரனே, கீழே கிடந்த ஆவணங்களைப் பொறுக்கி எடுத்தார். "சொறி" என்றும் சொன்னார். அவற்றை எடுக்கும் போது கழுத்துப்பட்டியும் அவருடைய கைக்கு வந்தது. அத்துடன் பல நிழற்படங்களும் கிடந்தன. பொறுக்கி எடுத்தார். கழுத்துப் பட்டியைக் கையில் எடுத்து, "இது எனக்கா?" என்று கேட்டார்.

மோனிக்காவுக்குப் பொய்க் கோபம் ஏற்பட்டது. "வேறு யாருக்காக நான் இதனைத் தெரிவு செய்யப்போகிறேன்?" என்றாள் சற்றுக் கடு கடுப்பாக.

"சொறி சொறி சொறி" என்று மூன்று முறைகூறிவிட்டு, நிழற்படங்களை எடுத்து- "யார்....? எல்லாமே குழந்தைகளின் படங்



களாகவே இருக்கின்றன.. ஒஹோ... எல்லாமே கிடோதானா..?" என்றார்.

மீண்டும் அவர்கள் அருகருகே அமர்ந்ததும் படங்களுக்கு விளக்கம் கேட்டார். 2 வயதாக மோனிக்கா இருந்தபோது எடுத்தபடத்தை எடுத்து முத்தம் கொடுத்து "நல்ல அழகாக இருக்கிறாயே!" என்றார்.

கொகாகோலா பருகினார்கள். இடையில் பல நிமிடங்கள் காதல் களியாட்டங்களில் இருவரும் ஈடுபட்டனர். கிளின்ரனுடைய தனிப்பட்ட பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் ஓர் அலுமாரியைத் திறந்த மோனிக்கா, அதற்குள்ளிருந்த-கிளின்ரன் விரும்பிப் புகைக்கும் சுருட்டொன்றை எடுத்தாள். தனது வாயில் வைத்து நன்றாகச் சுவைத்தாள். பின்னர் அதனைப் பற்றவைத்து ஒரு தடவை புகையை உள் இழுத்து விட்டு கிளின்ரனின் வாயில் வைத்து விட்டாள். இதனால் தான் முழுமையாக கிளின்ரனின் காதலியாகி விட்டதாக உறுதியுடன் நினைத்தாள்.

### திடமான நம்பிக்கை

கிளின்ரனை எப்போதாவது பிரிய வேண்டி வருமே; இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கவோ பேசவோ முடியாத சந்தர்ப்பம் ஏற்படுமே என்றெல்லாம் மோனிக்காவால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. கிளின்ரன் அவளுடனான உறவை வெட்டிவிடப் போவதாகக் கூறிய பின்னரும் அவளால் அவர் பிரிவை எண்ணிப் பார்க்க முயற்சிக்கக்கூட முடியவில்லை. கிளின்ரன் என்றென்றும் தன்னுடையவராகவே இருப்பார். அவர் தன்னை விட்டுப் பிரியமாட்டார்! என்ற நம்பிக்கை அவளுடைய உள்ளத்தின் அடித்தளத்தில் வேரூன்றி விட்டது.

மோனிக்காவின் இத்தகைய எண்ணம் வேரூன்றுவதற்கு கிளின்ரனும் தூபம் போட்ட வண்ணமே இருந்தார். மோனிக்கா அவருக்குக் கொடுத்த கழுத்துப்பட்டிகளை அவர் அடிக்கடி அணிந்து கொண்டு அவளுக்குக் காட்சி கொடுப்பார். சில வேளைகளில் மோனிக்கா மனம் தளர்ந்து போகும் நிலையில் இருந்தாலும் கிளின்ரன் அவள் கொடுத்த கழுத்துப் பட்டியுடன் காட்சி கொடுத்தாரென்றால், மனத் தளர்வு நீங்கி மீண்டும் உற்சாகமாகி விடுவாள்.

வெள்ளை மாளிகையில் பணி புரியும் எவருடைய பிறந்த நாள் விழாவானாலும்-மோனிக்காவுக்கு தகுந்த முறையில் அழைப்பு விடுக்கப்படாவிட்டாலும் அவள் அங்கு போய் விடுவாள். இதனாலும் பல பெண் ஊழியர்கள் அவளைப் புறங்கூறத் தலைப்பட்டனர். மோனிக்கா அலுவலகத்துக்கு அணிந்து வரும் உடைகளைப் பற்றியும் பலரும் விமர்சனம் செய்வார்கள். இவற்றையும் அவள் பொருட்படுத்துவதில்லை.

மொத்தத்தில் வெள்ளை மாளிகையில் மோனிக்காவுக்கு-வேறு எந்தப் பெண்ணுக்கும் ஏற்படாத குற்றச் சாட்டுகள் வெறும் வாய் மொழி மூலமாகத் திரண்டன.

மோனிக்காவின் நடமாட்டங்களைக் கணக்கிட்டே கிளின்ரன் தனது இல்லத்திலிருந்து ஒவல் அலுவலகத்துக்கோ அல்லது வேறு வெளியிட வைபவங்களுக்கோ போகப் போகும் சரியான நேரத்தை ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அந்தரங்க ஒற்றர் படையினர் நிர்ணயித்து விடுவார்கள்.

கிளின்ரன் இல்லத்திலிருந்து வெளியேறப் போகும் நேரத்துக்குச் சில நிமிடங்களுக்கு முன்னதாக மோனிக்கா தனது அலுவலகத்தின் வெளியே வந்து நடைபோடுவாள். இவ்வேளையில் அவருடைய தரிசனம் அவளுக்குக் கிடைத்துவிடும். ஆகவே மோனிக்காவின் தலையைக் கண்டதும் ஒற்றர் படைப் பிரிவினர், 'ஜனாதிபதி வரப்போகிறார்' என்று உசாராகிவிடுவார்கள்.

ஒவல் அலுவலகத்திலிருந்து வெள்ளை மாளிகையின் பல அலுவலகங்களுடனும் தொடர்பு கொள்ளத் தனியான உள்ளகத் தொலைபேசி அமைப்பு உண்டு. ஜனாதிபதி தொடர்பு கொள்கிறார் என்றால், அடுத்த தொலை பேசியுடன் உள்ள இணைப்பு- 'POTUS' என்ற எழுத்துக்களைப் பளிச்சிடும். இந்தத் தொலைபேசி மூலம் கிளின்ரன் மோனிக்காவுடன் பேசும்போது 'POTUS' என்ற சிறிய ஒளி எழுத்துக்கள் பிரகாசமாக எரிவதை, அதே அலுவலகத்தில் பணிபுரியும் பலரும் அவதானித்து வைத்திருந்தனர்.

பல ஆண்டுகள் வெள்ளை மாளிகையில் பணிபுரிந்து ஒய்வுபெறும் பாற் கிரி,*,பின் என்பவருக்கு பிரியாவிடை வைபவம் ஏற்பாடாகி இருந்தது. அன்றைய தினம் மோனிக்காவின் மேசை தொலைபேசியில் கிளின்ரன் அழைப்பதற்கான வெளிச்சம் எரிந்தது.

"பிரியாவிடை விருந்துக்குப் போகிறாயா?" என்று கேட்டார், அவ்வாறு போய்த் திரும்பியதும் தன்னைவந்து பார்க்கும்படி மோனிக்காவிடம் கிளின்ரன் கூறினார். இதற்கு மோனிக்கா, "சரி நான் வருகிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள்: விருந்தின் போது, நீங்கள் என் பக்கம் பார்க்கவோ சமிக்ஞை செய்யவோ வேண்டாம்!" என்றாள்.

இதனைக் கேட்ட கிளின்ரன் காரணம் என்ன என்று புரியாமல் திகைத்தார். காரணத்தையும் கேட்டார்.

"உங்களை மாலை சந்திக்கும்போது கூறுகிறேன்," என்று சொல்லி விட்டு தொலைபேசியை வைத்துவிட்டாள்.

(வருவாள்)

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**நிந்தவூர் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | கே. சபினா, 434, மேர்ஸா ஒழுங்கை, நிந்தவூர்-16. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பாப்பா முரசு சிறுகதை

# காசியும் ராசியும்

முன்னொரு காலத்தில் சிவகவி என்றொரு மகான் இருந்தார். அவரிடம் இரண்டு மாணவர்கள் கல்வி பயின்றனர். அவர்களில் ஒருவன் பெயர் காசி. மற்றொருவன் பெயர் ராசி.

காசியும், ராசியும் நண்பர்கள். ஆனால், நேர் எதிர் குணம் கொண்டவர்கள்.

காசி சற்று பொறாமை குணம் கொண்டவன். தனக்கு நற்பெயர் கிடைக்க வேண்டுமென்பதற்காக அடுத்தவரைப் பற்றிப் புறங்கூறுவது அவனுக்கு மிகவும் பிடிக்கும். பிறர் மத்தியில் தன்னை எப்பொழுதுமே உயர்ந்தவனாகக் காட்டிக் கொள்வான். அதில் அவனுக்குப் பேரானந்தம்.



ஆனால் ராசி அப்படிப்பட்டவன் அல்ல. அவன் மனதில் எந்தப் பொறாமைக் குணமும் கிடையாது. தனக்கு நற்பெயர் வேண்டுமென்று அவன் ஒரு நாளும் நினைத்தது கிடையாது. பிறரைப் பற்றிக் குறை கூறுவது, பிறர் மத்தியில் தன்னை உயர்த்திக் காட்டிக் கொள்வது போன்ற எந்ததீய குணங்களும் அவனிடம் கிடையாது.

நன்றாகப் படிப்பான். எந்த வேலையையும் முகம் சுளிக்காமல் செய்வான். அனைவருக்கும் மரியாதை கொடுத்து இன்முகத்துடன் பழகுவான். எப்பொழுதும் இயல்புடனேயே இருப்பான்.

எப்படியோ இரு வேறு குணங்கள் கொண்ட இவர்கள் இருவரும் நண்பர்களாக இருந்தனர்.

ஒரு தினத்தில் இருவருக்கும் திடீரென்று கருத்து வேற்றுமை ஏற்பட, காசி அதை மிகவும் பெரிதுபடுத்தி, ராசியுடன் பேசுவதை நிறுத்திக் கொண்டான்.

ஒரு நாள்-

விடிந்தது கூடத் தெரியாமல் மிகவும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் ராசி.

ஆனால், காசி, அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து மிகவும் சுறுசுறுப்புடன் காலைக் கடன்கள் அத்தனையையும் முடித்து விட்டான். இறை வணக்கத்தையும் முடித்திருந்தான்.

அவை அனைத்தையும் முடிக்க வேண்டிய ராசி உறக்கம் ஒன்றையே சுகமானதாக எண்ணி உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும். காசிக்கு ஒரு பழி வாங்கும் உணர்வு ஏற்பட்டது.

உடனே அவன் மகான் சிவகவியிடம் சென்றான். "குருவே! காலை வணக்கம்!"என்றான்.

"உனக்கும் எனது காலை வணக்கம்!" என்றார் சிவகவி.

"ஐயா! என்னைப் பார்த்தீர்களா? அதிகாலை நான்கு மணிக்கே எழுந்து, குளிரைப் பொருட்படுத்தாமல் குளிர்ந்த நீரால் நீராடி, பூஜை அனைத்தையும் முடித்துவிட்டு வந்திருக்கிறேன்!"

"நல்லது காசி!"

"ஆனால், ராசி இன்னும் இழுத்துப் போர்த்தியபடி நித்திரையில் இருக்கிறான். சரியான தூங்கு மூஞ்சு. சரியான சோம்பேறி. அவனால் என்ன செய்ய முடியும்?"

"இதைச் சொல்வதற்கு என்னிடம் வந்தாயா?"

"ஆம் ஐயா!"

"இதைச்சொல்வதற்கு பதில் நீ ஒன்றைச் செய்திருக்கலாம்!"

"என்ன?"

"நீயும் ராசியைப் போல இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கியிருக்கலாம்!"

"ஐயா!" என்று சொல்லி திடுக்கிட்டான் காசி.

"ஆமாம்! நீ அவனைப் பற்றிக் குறை கூறியதன் மூலம், நீ இன்று செய்த நற்செயல்கள் அனைத்தும் அடிபட்டுப் போய் விட்டன. இந்த இழப்பிற்கு, நீ அவனைப் போல தூங்கியே இருக்கலாம்.


சுகத்திற்கு சுகம். ஓய்வுக்கு ஓய்வு. உள்ளமும் பொறாமை என்ற அழுக்காகி இருக்காது. இப்போது நான்கு மணிக்கு எழுந்து குளித்த நீ தூய்மையானவன் அல்ல.

உள்ளத் தூய்மையோடு உறங்கிக் கொண்டிருக்கிறானே ராசி அவன்தான் தூய்மையானவன். நல்லொழுக்கம் நிறைந்தவன்!" என்றார் சிவகவி.

காசி அப்படியே அசைவற்று நின்றான்.


மகான் சிவகவியின் சொற்கள் ஈட்டி முனைகளாக அவனைத் துளைத்திருந்தன.

ஒவ்வொரு சொல்லுமே நெற்றியடி. உள்ளத் தூய்மையைக் கற்றுக் கொண்ட காசி, அந்த வினாடியே ராசியின் மேல் கொண்ட பகை உணர்ச்சியை விட்டொழித்தான்.






# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **08.04.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **338**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


## வர்ணம் தீட்டும் போட்டி இல: 336

**பரிசுக்குரியவர்:**
எ.ஃப். லரீபா ஸவாஹிர்,
அஸ்ஹர் தேசிய பாடசாலை, அக்குறணை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ரி.போல் தேவசஞ்சன், சாஹிரா கல்லூரி, மாத்தளை. | எஸ். ஜீவானந்தன், த.ம.வித்தியாலயம், தலவாக்கெலை. |
| எம்.பிரியதர்ஷினி, த.ம.கல்லூரி, பண்டாரவளை. | சிவலிங்கம் லயனி, இறம்பைக்குளம் மகளிர் ம.வி.வவுனியா. |
| முஷம்மில் முஹம்மது ஹிஸாம், விபுலானந்தா கல்லூரி, திருகோணமலை. | ச.சுகந்தினி, நாவலடி நாமகள் வித்தியாலயம், மட்டக்களப்பு. |
| ஷர்மினா கிரிதரன், சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை,கொழும்பு-06. | என். கிருபாஷினி, குயின்ஸ்டவுன், த.வி. ஆலி-எல. |
| ஆர். ஷர்மிளா அநூஷிகா, புனித மரியாள் கல்லூரி, அவிஸ்ஸாவலை. | என். நிபான், அநு/நேகம முஸ்லிம் மகா வித்., நேகம்பஹ. |

# பூடியின் விசேட அம்சம்



படத்தில் எலியைப் போன்று காணப்படும் இந்தப் பிராணியின் பெயர் பூடி. இது கங்காரு இனத்தைச் சேர்ந்தது. இந்தப் பிராணியில் காணப்படும் விசேட அம்சம் என்ன தெரியுமா?

இதனுடைய நீண்ட வால் தான்.

இந்தப் பூடி கூடு கட்டி அதில் வாழும். இது கூடு கட்டும் விதமே அலாதியானது தான்.

இது கூடு அமைப்பதற்குத் தேவையான வைக்கோல், நீண்ட புற்கள், சிறுகுச்சிகளைப் பொறுக்கி அழகாகச் சேர்க்கும். இவை ஒரு பெரிய கட்டாகச் சேர்ந்ததும், திரும்பி உட்கார்ந்து தன் நீண்ட வாலையே கயிறு போலப் பயன்படுத்தி இந்தக் கட்டைத் தூக்கிக் கொண்டு தாவிக் குதித்தபடி செல்லும்.

இந்தப் பூடி மேற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள இரண்டு குட்டிக் குட்டித்தீவுகளில் தான் வசிக்கின்றது.

# செய்து பாருங்கள்

__பலூன் பொம்மை__

**__தேவையானவை:__**

கடதாசி மட்டை, பெரிய பலூன் ஒன்று, ஒரே நிறமான இரண்டு பலூன்கள், ஒட்டுவதற்குப் பசை, ஸ்கெட்ச் பேனா, செலோ டேப்.

**__செய்முறை:__**

1. பெரிய பலூனை ஊதி அதை முடிச்சுப் போடவும்.
2. கடதாசி மட்டையின் நடுவில் துளை போட்டு, அதற்குள் பலூனைச் செருகி, அட்டையுடன் பசையால் ஒட்டி விடுங்கள். செலோ டேப்பால் ஒட்டினால் கழன்று போகாது.
3. ஸ்கெட்ச் பேனாவால் உங்களுக்கு விரும்பிய பொம்மையின் தலையை வரைந்து கொள்ளுங்கள்.
4. சிறிய பலூன்களை ஊதாமல், பெரிய பலூனின் இரண்டு பக்கத்திலும் காதுகள் போல, செலோ டேப்பால் ஒட்டிவிடவும்.

இப்போது இந்த பலூன் பொம்மையை எப்படி வேண்டுமானாலும் அடிக்கலாம், தட்டலாம். ஆனாலும் அது சரியாக மறுபடி தன் பழைய இடத்திற்கு அழகாக வந்து நிற்கும்.





# திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 20

விவேக் புன்னகைத்தான்.

"மிஸ்டர் விநோத்.... நீங்க ஒரு விஷயத்தைப் புரிஞ்சுக்கணும். கொலையாளிகள் எப்பேர்ப்பட்ட புத்திசாலிகளாயிருந்தாலும், சட்டத்தை மீறிச் செயல்படும்போது அவங்களையும் அறியாமலேயே சில தப்புக்களைப் பண்ணிருவாங்க. அவங்க பண்ற அந்தத்தப்புகள்தான் எங்களை மாதிரியான போலீஸ் ஆட்களுக்கு ப்ளஸ் பாயிண்ட்ஸ்! கொலையாளிகள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற இருபத்திநாலுமணி நேரம் டைம் கொடுத்திருக்காங்க, இந்த அவகாசம் முடியறதுக்குள்ளே அந்தக் கொலையாளிகளைக் கண்டுபிடுச்சு சட்டத்துக்கு முன்னாடி நிறுத்தணும்."

"நிறுத்த முடியுமா சார்...?"


"நான் இன்வெஸ்டிகேஷனையே இப்பத்தான் ஸ்டார்ட் பண்ணியிருக்கேன். இதுவரைக்கும் கேஸுக்கு உபயோகப்படற மாதிரி எந்த ஹோல்டிங்கும் கிடைக்கலை..."

"இதுதான் ஸார் ஃபாதரோட ரூம்."

ஓர் அறைக்கு முன்பாய் நின்ற விநோத், வெளிப்பக்கமாய்த் தாழிடப்பட்டிருந்த கதவைத் தாழ்ப்பாள் நீக்கித் திறந்து விட்டான்.

விவேக் உள்ளே நுழைந்தான்.

சற்றே பெரிதான அறை. வலது பக்கச் சுவர்களை அடைத்துக் கொண்டிருந்த கண்ணாடி பீரோக்கள், நிறைய புத்தகங்களைக் கர்ப்பம் தாங்கியிருந்தன. சுவர் போட்டோக்களில், ஆச்சார்யா வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்களிடம் கை குலுக்கி சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.



விவேக் அறையின் மையப் பகுதிக்குப்போய் நின்று, அறையை நிதானமான பார்வையால் கழுவிவிட்டு, மேஜையை நோக்கிப் போனான்.

இழுப்பறைகளைத் திறந்து பார்த்துவிட்டு, முதல் கண்ணாடி பீரோவுக்கு வந்தான். ஒரு மாஜி கிரிக்கெட் வீரர் எழுதிய 'மை சன்னி டேஸ்' புத்தகம் தடிமனாய்த் தெரிந்தது.

விவேக் அதை எடுக்க, விநோத் சொன்னான்,

"அப்பாவுக்கு ரொம்பவும் பிடித்த புத்தகம் இது. அடிக்கடி எடுத்து படிச்சிட்டிருப்பார்."

விவேக் புத்தகத்தின் முதல் பக்கத்தைப் புரட்டினான். 'டெடிகேட்டட் ஆல் மை ஃபார்மர் கிரிக்கெட்டியர்ஸ்.'

அடுத்த பக்கம், புத்தகம் எழுதிய கிரிக்கெட் வீரர் மொச்சை மொச்சையாய் தன் பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டிருந்தார்.

விவேக் தொடர்ந்து சில பக்கங்களைப் புரட்டிவிட்டு புத்தகத்தை செல்ஃப்புக்குள் வைக்க முயன்ற விநாடி,

புத்தகத்தின் உள் பக்கத்திலிருந்து.

ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ வழுக்கியபடி வெளியே வந்து விழுந்தது.

விவேக் குனிந்து அந்த போட்டோவை எடுத்தான். போட்டோவில் ஒரு இளம் பெண் காமிராவை முறைத்துப் பார்த்திருந்தாள். வெளிநாட்டுப் பெண்.

பொன்னிறமுடி கழுத்துக்கு இரண்டு புறமும் புரண்டிருந்தது. கோபால்ட் ப்ளூ நிற கண்களில் ஒரு காக்டெயில் பார்ட்டி நடந்து கொண்டிருந்தது.

விவேக் அந்த போட்டோவை விநோத்திடம் காட்டிக் கேட்டான்.

"யார் இந்தப் பெண்?" விநோத் அவஸ்தையாய் எச்சில் விழுங்கிவிட்டு தலையாட்டினான்.

"தெரியலையே....?"

"பொய் சொல்றீங்க விநோத்...."

"நிஜமாகவே எனக்குத் தெரியாது ஸார்..."

"பொய் சொல்லலைன்னா உங்களுக்கு ஏன் முகம் வேர்க்குது... குரல் நடுங்குது...?"

"அப்பா படிக்கிற புத்தகத்துல இப்படியொரு போட்டோவைப் பார்த்ததும் எனக்கு ஷாக்காயிருச்சு ஸார்..... அதான்...."

"அப்படின்னா... இந்த போட்டோவில் இருக்கிற பெண் யார்ன்னு உங்களுக்குத் தெரியாது....?"

"தெரியாது ஸார்...."

"உங்க மதர்க்குத் தெரியுமா?"

விவேக் கேட்டுக் கொண்டிருக்கும் போதே-பின்னால் நடைச் சத்தம்.

விவேக்கும் விநோத்தும் திரும்பிப் பார்த்தார்கள்.

சுஷ்மாதேவி, தன் மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு இறுகிய முகத்தோடு நின்றிருந்தாள்.

விவேக், சுஷ்மா தேவியைப் பார்வையில் வாங்கியதும், மெதுவாய் நடந்து வந்து அவளுக்குப் பக்கத்தில் நின்றான். கையில் இருந்த போட்டோவைக் காட்டிக் கேட்டான்,

"மேடம்...! இந்த போட்டோவில் இருக்கிற பெண் யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா?"

சுஷ்மாதேவி தன் கண்களை மலர்த்தி, சலனமில்லாத ஒரு பார்வையால் அந்த போட்டோவை நனைத்தாள். சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு தலையசைத்தாள்.

"தெரியும்...."

"யார்...?"

"அவ பேர் ஜ்யோதி.... ஒரு மாடலிங் கேர்ள்.... பம்பாய்க்காரி...."

"உங்க கணவர்க்கும் ஜ்யோதிக்கும் என்ன தொடர்பு.....?"

சுஷ்மாதேவியின் உதடுகளில் ஒரு சோகப புன்னகை உற்பத்தியாயிற்று..... "அவங்க ரெண்டு பேர்க்கும் மத்தியில் இருந்தது இருக்கக்கூடாத ஒரு உறவு....!"

"புரியலை...."

"இல்லீகல் காண்டக்ட்...."

சுஷ்மாதேவி சொல்லி முடிக்க, விநோத் முகம் சிவந்து கோபமாய் பக்கத்தில் வந்தான்.

"அம்மா...! என்ன அது புதுக்கதை?"

"புதுக்கதை இல்லடா.... உனக்குத் தெரியாத பழைய கதை இது....."

"என் கிட்ட இதுவரைக்கும் நீ சொல்லவேயில்லையே?"

"சொல்லியிருந்தா நீ என்ன பண்ணியிருப்பே....?"

விநோத் திகைக்க, சுஷ்மா தேவி தொடர்ந்தாள்: "டேய் விநோத்....! உங்கப்பாவுக்கும் ஜ்யோதிங்கிற இந்த மாடலிங் கேர்ள்க்கும் உள்ள இலை மறைவு காய்மறைவு உறவு எனக்கு மட்டும்தான் தெரியும். இந்த விஷயத்துல நான் கோபப்பட்டு, உணர்ச்சிவசப்பட்டு உங்கப்பாகூட நான் சண்டை போட்டிருந்தேன்னா... விஷயம் எப்பவோ வெளியே வந்திருக்கும்.... நம்ம குடும்ப மானமும் கப்பலேறியிருக்கும்....."

விநோத் ஏதோ பேச முயல, விவேக் அவனைக் கையமர்த்தி விட்டு சுஷ்மாதேவியிடம் திரும்பினான்.

"மேடம்.... இந்த ஜ்யோதி இப்போது பம்பாயில் இருக்கிறாளா இல்லை.... மெட்ராஸில் இருக்கிறாளா?"

"எனக்குத் தெரியாது. அவளுக்கு இங்கேயும் ஒரு வீடு இருக்கு. பம்பாயிலும் இருக்கு. இங்கே இருக்கிற வீட்டை அவளுக்கு வாங்கிக் கொடுத்ததே என் கணவர்தான்."

"மெட்ராஸ்ல வீடு எங்கே....?"

"அடையார் மகாராணி காலனியில் முதல் குறுக்குத் தெரு. வீட்டு நெம்பர் தெரியாது...."

"ஃபோன் இருக்கா?"

"இருக்கு. ஆனா எனக்கு நம்பர் தெரியாது...."

"உங்க கணவர்க்கு இப்படி ஒரு விரும்பத்தகாத உறவு இருக்கிற விஷயம் தெரிஞ்சும் உங்களால எப்படி அமைதியா இருக்க முடிஞ்சுது....?"

சுஷ்மாதேவி புன்னகைத்தாள். "நான் அமைதியா இருக்கிற மாதிரி காட்டிக்கிட்டாலும் என் மனசுக்குள்ளே ஒரு புயல் வீசிக்கிட்டேதான் இருந்தது..... குடும்பத்தோட மானம் மரியாதை வெளியே போயிடக்கூடாதேங்கிறதுக்காகவே என்னோட உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திகிட்டேன்...."

"அவங்களுக்குள்ளே இந்த உறவு எத்தனை நாட்களா இருக்கு...?"

"கடந்த ஒரு வருஷ காலமாத்தான் எனக்குத் தெரியும்...."

"உங்களுக்குத் தெரியும்ங்கிற விஷயம் உங்க கணவர்க்குத் தெரியுமா....?"

"தெரியும்...."

"அதைப்பத்தி உங்ககிட்ட எப்பவாவது பேசியிருக்காரா.....?"

"ஒரே ஒரு தடவை பேசியிருக்கார். அதுவும் ரெண்டே வார்த்தை. 'ஸாரி சுஷ்மா.... ஜ்யோதியை என்னால் தவிர்க்க முடியாது'...."

"அந்த ஜ்யோதிக்கிட்ட நீங்க ஏதாவது பேசியிருக்கீங்களா.....?"

"இல்லை.... கிரிக்கெட் சம்பந்தப்பட்ட விழாக்களில் பார்க்கிறதோடு சரி...."

"ஜ்யோதி வீட்டில இந்தத் தொடர்பு சம்பந்தமா, ஏதாவது பிரச்சனை வந்ததா?"

"எனக்குத் தெரியாது...."

"ஜ்யோதி வீட்ல யார் யார் இருக்காங்கன்னு சொல்ல முடியுமா....?"

"அவளுக்கு அம்மா அப்பா கிடையாது. ஒரே ஒரு அண்ணன் மட்டும் தான்னு.... கேள்விப்பட்டேன். மத்த விபரம் ஏதுவும் தெரியாது."

விவேக் தன் ஆட்காட்டி விரலை உயர்த்தினான்: "இதோ பாருங்க மேடம்.... உங்க கணவர் ஆச்சார்யா கொலை செய்யப்பட்டதுக்கான பின்னணி சதி, அவர் கூடவே இருக்கிற ஒரு நபர் மூலமாகத்தான் உருவாக்கப்பட்டிருக்கு. அவரோட செல்ஃபோன்க் குள்ளே பட்டன் டைனமைட்டை ஃபிக்ஸ் பண்ணினது வெளிநபராக இருக்க முடியாது.... கிரிக்கெட்டை வெறுக்கிற ஒரு தீவிரவாத கும்பல்தான் உங்க கணவரோட கொலைக்கும், கிரிக்கெட் வீரர் பங்கஜ்ஜின் கொலைக்கும் காரணம்ன்னு பொதுவாக ஒரு கருத்து இருக்கு. ஆனா அந்தகருத்துல எனக்கு உடன்பாடு கிடையாது...."

விநோத் குறுக்கிட்டுக் கேட்டான்.

"அப்பாவும் பங்கஜ்ஜும் கொலை செய்யப்பட்டது தீவிரவாதிகளோட வேலை கிடையாதுனனு சொல்றீங்களா?"

"ஷ்யூர்..."

"எப்படி...?"

"கிரிக்கெட்டை வெறுக்கும் தீவிர வாதிகளுக்கு உண்மையிலேயே கிரிக்கெட் வீரர்களைக் கொல்லணுங்கிற வெறி இருந்திருந்தா, அவங்களை ஒட்டுமொத்தமா தீர்த்துக் கட்டறதுக்கு எத்தனையோ வழிகள் இருக்கு... அதே போல் உங்க ஃபாதர் ஆச்சர்யாவைக் கொலை பண்ணணும்ன்னு அவங்க நினைச்சிருந்தா, எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவர் தனியாய் இருக்கும் போது அதை நிறைவேற்றியிருக்கலாம்.

இங்கிலாந்தில் கிரிக்கெட் விளையாடிட்டு நம்ம கிரிக்கெட் வீரர்கள் மெட்ராஸ் ஏர்போர்ட்டுக்கு வரும் போது, ஏர்போட்ல வெச்சே பர்ப்பஸா இந்தக் கொலையைப் பண்ணியிருப்பாங்க. தீவிரவாதிகள் பெயரில்

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

தனிப்பட்ட ஒரு நபர், இல்லேன்னா ஒரு குழு இந்தக் கொலைகளைப் பண்ணியிருக்கணும். இது ஒரு பர்சனல் வென்ஜஸ் மடர். இதுக்குப் பின்னாடி எந்த தீவிரவாதியும் கிடையாது..."

விநோத் வியர்த்த முகத்தோடு கேட்டான்: "ஸார்...! என்னோட ஃபாதர் கொலை செய்யப்பட்டதற்கும், பங்கஜ் கொலை செய்யப்பட்டதற்கும் காரணம் என்னவாக இருக்கும்ன்னு நினைக்கிறீங்க....?"

விவேக் புன்னகைத்தான்:

(தொடர்ந்து வரும்)


---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# தர்மயுத்தம் 30

கூடியிருந்த பொதுமக்கள் ஆரவாரம் செய்து கைதட்டி அவரது பேச்சை இரசித்தனர்; வரவேற்றனர். இறுதியாக இந்த நாட்டின் விடுதலைக்காகப் பாடு பட்ட தியாகிகளை நினைவு கூர்ந்தார். செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. இந்த நாட்டுக்காக செய்த சேவைகள், தியகங்கள், இந்த மண்ணை சுதந்திர பூமியாகப் பார்க்கவேண்டும் என்பதற்காக வ.உ.சி. யும் அவரது குடும்பமும் ஏற்றுக் கொண்ட இழப்புகள் பற்றியெல்லாம் அவர் உணர்ச்சிபூர்வமாகச் சொன்னபோது பல கண்கள் கலங்கின.

★★



பேசி முடித்துவிட்டு கீழே இறங்கியதும் பலரும் பாரட்ட, பாராட்டுகளை ஏற்றுக் கொண்டே கூட்டத்தினரை விட்டு சற்று விலகிச் சென்று, அந்த விழாவை நடத்திய பொறுப்பாளர்கள் சிலரிடம் பேசிக் கொண்டு இருந்தார்.

நேரம் ஆக ஆக அவரது குரலில் கோபம் கொப்பளித்து தெரிந்தது. விழா பொறுப்பாளர்கள். அவரை சமாதானப்படுத்த முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

எனக்கு என்ன விபரம் என்று தெரியவில்லை. ஆனாலும், அவர் கோபப்படுவதும், இவர்கள் கெஞ்சுவதும் மாத்திரம் தெரிந்தது. எனக்கு என்ன விஷயம் என்பதை தெரிந்து கொள்ளவும் ஆசை. சம்பந்தமில்லாத விஷயத்தில் தலையிடுவதற்கும் பயம்.

சம்பந்தப்பட்ட நண்பர் ஒருவரை தனியே அழைத்து விசாரித்தேன். அவர், "ஒண்ணுமில்லே சார்... பணத் தகராறு...." என்றார்.

எனக்குப் புரியவில்லை. "அவருக்கு கொடுக்க வேண்டிய பணத்திலே 300 ரூபா குறையுது. அதனாலே வாங்க மாட்டேங்கறார்."

நான் குழம்பிப் போய் அவரையே பார்த்துக் கொண்டு இருந்தேன். "அவர் கூட்டத்துக்கு பேச வந்தால் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுப்பது வழக்கம். இன்னிக்கு நிகழ்ச்சிக்கு எதிர்பாராம கொஞ்சம் அதிகம் செலவாயிடுச்சு. அதனால குறைச்சுக் கொடுத்தா, வாங்க மாட்டேங்கறாரு..."

எனக்குப் புரிந்துவிட்டது. அது சம்பளத் தகராறு.... ஊதிய பிரச்சனை. அவரது மேடை முழக்கத்திற்குரிய கூலி கிடைக்கவில்லையே என்ற குமுறல்.

இந்த நாட்டின் விடுதலைக்காக எத்தனை பெரியவர்கள் எவ்வளவு பெரிய இழப்புகளுக்கெல்லாம் ஆளாகியிருக்கிறார்கள் என்பதை நமக்கெல்லாம் நினைவூட்டினாரே... அதற்கான சம்பளம் கேட்கிறார்!

சுயநலத்தை சுட்டுப் பொசுக்க நமக்கு கற்றுக் கொடுத்தவர், தன் சுய நலத்தை விட்டுக் கொடுக்க மனம் வராமல் வாதாடிக் கொண்டு இருந்தார்.

சற்று முன்னர் வரை அவர் பேசிய கருத்துக்களினால் நிறைந்திருந்த என் நெஞ்சம் இப்போது காலியாகிப் போய்விட்டது.

மனிதச் சந்தையில் மனச்சாட்சிகள் கூட விற்பனைக்கு வந்துவிட்டன!

மேடையேறி உபதேசிப்பது வாழ்க்கையின் உபரி வருமானத்துக்குரிய தொழிலாகிவிட்டது.

காசுக்கு கருத்து விற்பவர்களைப் பார்த்த பிறகு, எனக்கு பேச்சுக்களின் மீது இருந்த மரியாதை போய்விட்டது.

வாழ்க்கைக்கு வேறு வருமானம் இல்லாதவர்கள் இந்த மாதிரி நடந்து கொண்டால் அதில் தவறு இருப்பதாக எனக்குப் படவில்லை.

ஆனால், 'தொண்டு' என்ற பெயரில் துண்டு விரிக்க வேண்டுமா?

நன்றாகப் பேசுபவர்களைவிட, நன்றாக எழுதுபவர்களை விட, நன்றாக வாழ்பவரை நாம் எப்போது நாடப் போகிறோம்?

'விஞ்ஞானம் வெகுவாக முன்னேறிவிட்டது' என்று விளம்பரப்படுத்திக் கொள்கிறோம். தொலை தொடர்புச் சாதனங்கள் பெருகிவிட்டன.

உலகின் ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலைக்கு நினைத்த மாத்திரத்தில் தொடர்பு கொள்ள முடிகிறது.

ஆஸ்திரேலியாவில் நடக்கின்ற கிரிக்கெட் மாட்சை இங்கிருந்தபடியே பார்த்து ரசிக்க முடிகிறது.

இத்தனை விந்தைகளைப் படைத்து விட்ட விஞ்ஞான உலகம், மனிதனின் மனதிற்கும் நாக்கிற்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்தக் கூடாதா?

மனம் நினைப்பதைத் தான் நாக்கு பேசவேண்டும்.

இதற்கொரு கருவி வேண்டும். எதிரில் இருக்கும் மனிதனை இனம் கண்டு கொள்ள முடியாத நாம், இயற்கையை எதிர்த்துப் போராடி, எப்படி வெற்றி கொள்ளப் போகிறோம்.

○☆

## வாழ்வைத் திருடும் வஞ்சகர்கள்



'தங்கக்கோப்பை' படப்பிடிப்பின் போது....

நான் இயக்கிய படங்களில் ஒன்று, 'தங்கக்கோப்பை'. பிரபல கதாசிரியரும், தயாரிப்பாளருமான கலைஞானம் தயாரித்த படம் அது.

'The Cramp' என்ற ஆங்கிலத்திரைப் படத்தின் வீடியோவை எனக்கு போட்டுக் காட்டி, 'இதைத் தழுவித் தான் நாம் படம் எடுக்கப் போகிறோம்' என்று சொல்லப் பட்டது எனக்கு.

அது ஒரு குத்துச்சண்டை வீரனின் வாழ்வை மையமாகக் கொண்ட கதை. குத்துச் சண்டையில் சாம்பியனாக திகழ வேண்டும் என்ற வெறியோடு அதே சிந்தனையில் வாழ்ந்து கொண்டிருக்கிற கதாநாயகனுக்கும், அவனது மனைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, விவாகரத்து பெற்றுக் கொண்டு அவன் வாழ்விலிருந்து விலகிப் போய்விடு கிறாள் மனைவி.

தாய், தகப்பனுக்குள் ஏற்பட்ட இந்தப் பிரிவை பற்றி எதுவும் தெரியாத நிலையிலேயே தகப்பனோடே தங்கிவிடுகிறான் அவர்கள் இருவரது மகன்.

7, 8 வயது சிறுவனான அந்தப் பையன் தாய்மை பாசத்துக்கு ஏங்குவதற்குப் பதிலாக, தாயை பற்றிய சிந்தனையே இல்லாமல் தந்தையை சாம்பியனாக பார்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு வளர்கிறான்.

(அனுபவங்கள் தொடரும்)

# வீரன் தான் பிரீன்

26

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்—
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

தான் பிரீன் தான் நின்ற தெரு கரோலனுடைய வீட்டுக்கும் டிராம்கொண்டரா பாலத் திற்குமிடையேயுள்ளது என்று கண்டான். அவ்வழியே, சென்றால் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்த பட்டாளத்தாருடைய கையில் சிக்கும்படி நேரும் என்பதை உணர்ந்து, வலது பக்கமாய்த் திரும்பிச் சென்றான். சிறிது தூரத்தில் செயின்ட் பட்ரிக் கலாசாலையிருந்தது. அதன் முன்புறத்தில் சுமார் 18 அடி உயரமுள்ள பெரிய சுவர் உண்டு. அவன் அந்தச் சுவரைத் தாண்டிவிட்டால், சிப்பாய்களின் வலையில் அகப்படாமல் தப்பி விடலாமென்று ஆவலுடன் எண்ணமிட்டான்.

ஆனால் பிறர் உதவியில்லாமல் அந்தச் சுவரை எப்படித் தாண்டுவது? அவன் கால்களில் பூட்ஸுகளும் இல்லை. வலது கால் பெருவிரலோ குண்டுபட்டு ஒடிந்து வேதனை கொடுத்து வந்தது. அவற்றோடு உடம்பு முழுவதும் குண்டு பட்ட புண்கள்! ஆனால், உயிருக்காகப் போராடுகிற ஒரு மனிதனுக்கு எங்கிருந்தோ தைரியமும் வலிமையும் வந்து விடும்!

எப்படியோ அவன் ஒரே மூச்சில் அச்சுவரிலேறி அப்பால் குதித்துவிட்டான். அது பெரிய விந்தைதான். தான் பிரீன் பிற்காலத்தில் பட்ரிக் கலாசாலைப் பக்கம் செல்லும்பொழுது எல்லாம் அந்தப் பெரிய சுவரைத் தான் தாண்டியது உண்மைதானா, என்று ஆச்சரியப்படுவது வழக்கம். கலாசாலைக்குள்ளே சென்றதும், அவனுக்குக் கொஞ்சம் மன அமைதி ஏற்பட்டது. ஆயினும் அந்த இடமும் கரோலனுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே இருந்ததால் சிப்பாய்கள் எந்த நேரத்திலும் அங்கு வந்து விடக் கூடும் என்பதையறிந்து அவன் மெதுவாகச் சந்தடி செய்யாமல் ஊர்ந்து சென்றான்.

அவன் நடந்து செல்லும்பொழுது இடையே டோல்கா நதி குறுக்கிட்டது. தங்குவதற்கு அப்பக்கத்தில் வேறு இடமில்லாததால், அவன் ஆற்றைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. எப்படியும் பட்டாளத்தார் நின்ற இடத்திலிருந்து வெகுதூரம் தள்ளிச் சென்று விட வேண்டியிருந்தது. வீதி மார்க்கமாய்ச் சென்றால், ஆற்றைத் தாண்டப் பாலம் இருக்கும். ஆனால் வீதியில் பட்டாளத்தாரும் இருப்பார்கள் அல்லவா? எவ்வளவு குளிராயிருந்தாலும் நதியில்விழுந்து நீந்தி அக்கரை செல்லவேண்டுமென்று தான் பிரீன் துணிந்தான். ஆற்றில் குதித்துவிட்டான்.

நீந்துகையில் கால்களில் குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்த துவாரங்களில் ஒரு பக்கமாய்த் தண்ணீர் புகுந்து மறுபக்கத்தால் வெளியே சென்றது. அத்தனைக் கொடுந் துன்பத்திலும் அவனுக்குத் தண்ணீருடைய தண்மை அதிகமாய்த் தெரியவில்லை. இத்தகைய சந்தர்ப்பத்தில் நெருப்புச் சுடாது நீரும் குளிராது. இயற்கை உணர்ச்சியே அற்றுப் போய்விடுமல்லவா! மனதிலே ஒரு பெரும் உணர்ச்சி குடிகொண்டிருக்கும் பொழுது, அற்பமான துன்பங்களும் இன்பங்களும் ஒருவனைப் பாதிக்கமாட்டா. எனவே கைகளையும் கால்களையும் அடித்துக் கொண்டு தான் பிரீன் எப்படியோ அக்கரை சேர்ந்தான்.



ஆற்றின் மறுகரையில் சமீபத்தில் சில வீடுகளிருந்தன. அவையிருந்த இடம் மரங்களடர்ந்த 'பொட்டானிக் அவினியூ' என்று அவன் தெரிந்து கொண்டான். அவன் நின்றது வீடுகளின் பின்புறத்தில். மேற்கொண்டு அவனால் நடக்கமுடியவில்லை. அவனுடைய உடம்பிலிருந்து இரத்தம் வழிந்த வண்ணமாயிருந்தது. மேற்கொண்டு வெளியே தங்கினால் வெறுங் களைப்கினாலேயே இறந்து விழநேரும். ஆதலால் ஏதாவது ஒரு வீட்டிற்குச் சென்று இளைப்பாற வேண்டுமென்று அவன் விரும்பினான்.

யாதொரு யோசனையுமில்லாமல், அவன் திடீரென்று சென்று ஒரு வீட்டின் கொல்லைக் கதவைத் தட்டினான். அன்றிரவு அவன் எந்த வீட்டைத் தட்டியிருந்தாலும், அவன்பாடு அன்றோடு தீர்ந்து போயிருக்கும். எந்தத் தெய்வமோ வழிகாட்டியது என்று சொல்லும்படியாக, அவன் அந்த வீட்டின் கதவைத் தட்டினான் அந்நேரத்தில் (காலை 3 அல்லது 4 மணிக்கு) தலைவிரி கோலமாய், உடம்பெல்லாம் இரத்தம் பெருகி, உடையெல்லாம் நனைந்து, அவன் நின்றுகொண்டிருந்த நிலையை யார் கண்டாலும் திடுக்கிட்டுப் போயிருப்பார்.

ஒரு முறை தட்டியதில் ஒருவரும் ஏனென்று கேளாததால், அவன் மீண்டும் தட்டினான். ஒரு மனிதர் வந்து கதவைத் திறந்து எதிரே நின்றுகொண்டிருந்த உருவத்தைக் கண்டார். தான் பிரீன் மெய்மறந்த நிலையில், வாய் குழறிக்கொண்டே, தனக்குத் தங்க இடம் வேண்டுமென்று வேண்டினான். அவ்வீட்டுக்காரர் அவனை யாரென்றும் எவ்வாறு காயமுற்றான் என்றும் கேட்கவில்லை. 'உள்ளே வாருங்கள்! எங்களால் என்ன உதவி செய்ய முடியுமோ அதைச் செய்யக் காத்திருக்கிறோம்!' என்று வரவேற்று உள்ளே அழைத்தார்.

அவரும் அவர் மனைவியும் தான் பிரீனைப் படுக்கையில் படுக்க வைத்து, உடனே அருகே வசித்துக்கொண்டிருந்த லாங் என்ற தாதிப் பெண்ணை அழைத்து வந்தனர். அவர்கள் அவனுடைய புண்களுக்கு மருந்திட்டு, உற்சாகமளிக்கும் பானமொன்றையும் குடிக்கக் கொடுத்தனர். அந்தப் பானம் தாதிப் பெண்ணால் வெளியிலிருந்து வாங்கிக் கொண்டுவரப்பட்டது.

தான் பிரீனை ஆதரித்து வீடு கொடுத்து உதவிய கனவான் பிரெம் ஹோம்ஸ் என்பவர். அவருக்குப் புரட்சியில் அபிமானமில்லாததோடு ஆங்கிலேயரிடமே அனுதாபமுண்டு. ஆயினும் அவரும் அவர் பத்தினியும் தான் பிரீனைத் தங்கள் சொந்தப் பிள்ளையைப் போலும், சகோதரனைப்போலும் பாவித்துச் சிகிச்சை செய்து வந்தனர்.

தான் பிரீன் தனக்குக் காயங்கள் எப்படியேற்பட்டன என்பதைச் சொல்லாமலிருப்பினும், அவர்கள் வேண்டிய உபசாரம் செய்து அவன் உயிரைக் காப்பாற்றினர்.

நன்றாக விடிந்த பிறகுதான் தான் பிரீன் அவர்களிடம் தான் யாரென்பதைக் கூறினான். ஹோம்ஸ் அவனை தேற்றி நன்றாகக் குணமடையும் வரை தாங்கள் பாதுகாப்பதாயும், பின்னால் வேறு பந்தோபஸ்தான இடத்திற்கு அனுப்பி, வேண்டிய உதவி செய்வதாயும் வாக்களித்தனர்.

மறுநாள் தோழர்கள் தான் பிரீனை ஒரு காரில் வைத்து, மோட்டார் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். வழியில், சார்லஸ் தெருவில் டிரீஸி அவனைக் கண்டு உயிர்தப்பிவந்த விபரத்தைச் சொன்னான்.

வைத்தியசாலையில் டாக்டர்கள் தான் பிரீனுக்கு மிகுந்த அன்புடன் சிகிச்சை செய்து வந்தனர். ஆனால் அங்கு அடிக்கடி பட்டாளத்தாருடைய சோதனை நடந்து வந்தது. இப்படி அக்டோபர் மாதம் 14ம் திகதி வெடிகுண்டினால் காயமடைந்த ஒரு பையனைத்தேடி ஒரு சோதனை நடந்தது.

தான் பிரீன் மோட்டார் ஆஸ்பத்திரியில் படுத்துக்கொண்டிருக்கும்பொழுது. அவனுடைய உயிர்த் தோழன் ஸீன் டிரீஸி சிறிது கூடச் சோம்பியிருக்கவில்லை. ஆஸ்பத்திரியில் கிடந்த தன்னுடைய நண்பனுக்கு எவ்வித ஆபத்தும் நேராமலிருக்க வேண்டுமென்று அவன் கண்ணில் எண்ணெய்யூற்றிக் கொண்டு கவனித்து வந்தான்.

பீலர்களோ, பட்டாளத்தார்களோ ஆஸ்பத்திரிப்பக்கம் சென்றால். உடனே சென்று அவர்களை எதிர்த்து போராட வேண்டும் என்பது அவன் தீர்மானம். அக்டோபர் 14ம் திகதி வியாழக்கிழமை மாலையில் அவன் எதிர்பார்த்திருந்த சோதனை நடந்தது. அவன் அதை முன் கூட்டியே அறிந்து உடனே வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முற்பட்டான்.

அவன் நேராகத் தொண்டர்களுடைய தலைமைக் காரியாலயத்திற்குச் சென்று தன்னுடன் ஓர் உதவிப்படை அனுப்பவேண்டும் என்று கேட்டான். அவர்கள் வேண்டுகோளுக்கு இசைந்தனர். டிரீஸி பல நண்பர்களை அழைத்துக் கொண்டு மற்றும் சில முக்கியஸ்தவர்களையும் கூப்பிடுவற்காக வெளிப்பட்டான். தான் பிரீனைக் காக்க வேண்டுமென்ற ஆவலினால் அவன் தன்னை அறவே மறந்து விட்டான். டப்ளின் நகரத் தெருக்களில் பகலில் தாராளமாய் நடந்து சென்றான். ஒற்றர்களோ தொண்டர்களில் எவன் தெருவில் வருவான் என்று வேட்டை நாய் போல் காத்துக்கொண்டிருந்தனர். அவன் அவர்களைக் கவனிக்கவேயில்லை. அவசரமாக நடந்து கொண்டிருந் தான்.

அவன் சகல ஏற்பாடுகளையும் செய்து விட்டுக் கடைசியாக டால்பட் தெருவிலிருந்த ஒரு ஜவுளிக் கடைக்குச் சென்றான். அங்கு சில முக்கியமான தகவல்கள் கொடுக்கவேண்டியிருந்தது. அந்தக் கடை புரட்சிக்கட்சித் தலைவர்களான டாம் ஹண்டர், பீடர் கிளான்ஸி ஆகிய இருவராலும் நடத்தப்பட்டு வந்தது. அவர்கள் ஜவுளிக்கடை என்று பெயருக்கு வைத்துக்கொண்டிருந்தார்களே தவிர அவ்விடத்தில் தான் குடியரசுப்படை சம்பந்தமான பல வேலைகளும் செய்து வந்தனர்.

சுருங்கச் சொன்னால், அந்தக் கடையே தொண்டர்களுடைய 'சதியாலோசனை மணி மண்டபம்' என்று கூறலாம். பீலர்களும் அதையறியாமலில்லை. அவர்கள் இரகசியமாய் பல நாட்களாக அதைக் கவனித்துக் கொண்டு வந்தனர். எனவே அங்கு செல்லும் தொண்டர்கள் அங்கு அதிக நேரம் தாமதிப்பதில்லை.

டிரீஸி கடைக்குச் சென்ற சமயத்தில் அங்கு டப்ளின் நகரப் புரட்சிப் பட்டாளத்தின் தலைவர்கள் சிலர் ஓர் அவரசக் கூட்டத்தை நடத்திக்கொண்ருந்தனர். அவன் உள்ளே புகுந்து, கதவண்டையில் நின்று சில தகவல்களைப் பேசிக்கொண்டிருந்தான்.

அதற்குள் பட்டாளத்தார் கடைப் பக்கம் நெருங்கி விட்டனர். கடைமுகப்பில் நின்று கொண்டிருந்த டிரீஸியே பகைவரின் வருகையை முதன் முதல் தெரிந்து கொண்டவன். வேறு இரண்டு மூன்று பேர்கள் கடைக்குள்ளிருந்து துணிந்து வெளியே ஓடினார்கள்.

இராணுவ வாகனங்கள் கடை வாசலில் வந்து நின்றன. அச்சமயத்தில் கடைக்குள்ளிருந்து கீழே குதித்து அவனை வழிமறிக்கச் சென்றான். அப்பொழுது ஒரு இராணுவ ஒற்றன் முன்வந்து, 'அவனை விட்டுவிடு' நமக்கு வேண்டியவன் அதோ நிற்கிறான்!' என்று டிரீஸியைச் சுட்டிக்காட்டினான். டிரீஸி அப்பொழுது கடைக்கு வெளியிலிருந்த தன்னுடைய சைக்கிளில் காலை வைத்து ஏறிக்கொண்டிருந்தான். உடனே அந்த ஒற்றன் அவன் மேலே பாய்ந்தான். டிரீஸியா பணிந்து கொடுப்பவன்? இடுப்பிலிருந்த றிவோல்வரை உருவிக்கொண்டு, பகைவனைத் தாக்கலானான். உடம்பு முழுதும் சல்லடைக் கண்ணாகத் துளைக்கப்படும்வரை அவன் பணியமாட்டான் என்பது சிப்பாய்களுக்கு எப்படித் தெரியும்?. ஆனால் அவன் போராட்டத்திற்கு தயாராயில்லாதபொழுது, எதிர்பாராத நிலையில் பகைவர்கள் அவனைச் சூழ்ந்து நின்றனர்.

(பயணம் ...தொடரும்)

**தமிழில் ப.ராமஸ்வாமி**

---

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

51



# அரங்கம் அந்தரங்கம்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

~கண்ணதாசன்~

எங்கள் சரித்திரத்தைக் கேட்கக்கூடிய நிலையில் அவள் இல்லை.

நடந்ததைக்கூறி கமலாவின் தந்தையை ஆற்றவேண்டிய பொறுப்பும் என்னைத்தான் சார்ந்தது. அது கடினமாகவும் இல்லை.

"இந்த இரண்டாவது நிகழ்ச்சி நடந்தது போல், முதல் நிகழ்ச்சியும் நடந்திருக்கக் கூடாதா-ஏன் இனியாவது நடக்கக்கூடாதா?" என்று கலங்கிய கற்பகத்திற்கு, சந்திரசூரியனைப் பற்றிய செய்தி ஓர் உற்சாகமான எண்ணத்தை உண்டாக்கிற்று.

கற்புக் காவலையும் மீறிய ஒரு சபலம்; அதுவும் ஏற்கனவே இருந்தது. இப்போது வழக்கில் இருந்து விடுதலையாகும் மற்றொரு சபலம்.

இதை அதற்குப் பயன்படுத்திக் கொண்டால் என்ன?

அவளுடைய வாழ்க்கையில் நடக்க முடியாத சம்பவம் என்று எதுவுமே இல்லை. எதுவும் நடக்கக் கூடியதே என்று அவள் அநுபவத்தில் உணர்ந்தவள்.

ஒரு புதிய அநுபவம்; அதோடு ஒரு நிம்மதி!

தன் வீட்டிலேயே எவ்வளவு நிகழ்ச்சிகளை அவள் பார்த்திருக்கிறாள்? அப்போதெல்லாம் அந்த நிகழ்ச்சிகளில் தான் ஈடுபடாதது அவளுக்கு ஒரு பெருமையாகவே இருந்தது.

இப்போது அதற்குத் தானும் ஆட்பட்டுச் சிந்திக்கத் தொடங்கினாள்; இதுவும் சுகமாக இருந்தது.

அரைகுறையாகத் திறந்திருந்த கதவைச் சாத்தபோன போது, அங்கே தான் கண்ட லீலைகளெல்லாம் நினைவுக்கு வந்தன.

தன் கணவனிடம் மிகக் குறைவாகவே அவள் பெற்றதுண்டு.

வேர் பூமியிலே வளர்ந்துவிட்டால் விதை நன்றாகப் போடப்பட்டுவிட்டது என்ற அர்த்தம்.

கற்பகம் தன் மனதுக்குள் போட்ட வித்து கனியத் தொடங்கிற்று.

சந்திரசூரியன் பெரிய இடத்துக்கு வரப்போகிறார். அவருக்கு உரிய இடத்தைக் கொடுத்து சுகமாகச் சில நேரங்களையும், விடுதலை பெற்று நிம்மதியில் சில நேரங்களையும் கழிப்பது என்று அவள் முடிவு கட்டினாள்.

அவள் டெலிபோனை நெருங்கினாள்.

சந்திரசூரியன் தனி அறையில் டெலிபோன் மணி அடித்தபோது அவர் என்ன தனியாகவா இருந்தார்?

விஜயா வேதாசலம் மூலம் வந்த புதிய வரவுகளை இரசித்துக் கொண்டிருந்தார்.

பெண்-

உலகத்தின் மாபெரிய இயக்கங்களையும் மேதா விலாசங்களையும் சின்னாபின்னப் படுத்திய விஞ்ஞானக் கருவி; அது இறைவன் கண்டு பிடித்தது. அது விவரிக்க முடியாத மின்சாரம். அந்த மின்சாரத்திற்கு அதன் கண்களே ஜெனரேட்டர். அந்த மின்சாரம் சிலரைச் சுருண்டு விழ வைக்கிறது; சிலரைச் சாகடிக்கிறது.

பெண் விஷயத்தில் யார் யோக்கியன்?

எல்லாம் அநுபவித்து முடிந்து ஓய்ந்த பிற்பாடு, சிலரால் தான் தத்துவம் பேச முடிகிறது. ஆனால் சக்தியற்ற பலரைக்கூட அந்தச் சபலம் விடுவதில்லை.

கோடியில் ஒரு வராக அவதரிக்கும் ஞானிகளே, மனக் கட்டுப்பாட்டினால் பெண் மாயையில் இருந்து விடுபடுகிறார்கள்.

அவர்கள், பெண்களை ரோஜாப் புஷ்பங்களாக, மல்லிகைப் புஷ்பங்களாக, குயில்களாகப் பார்ப்பதில்லை. 'இருபது கிலோ மாமிசம், முப்பது கிலோ எலும்பு, முப்பது லிட்டர் இரத்தம், ஒரு சேலை பின்னக்கூடிய அளவுக்கு நரம்புகள்; இவைதான் பெண், என்று அவர்கள் கணக்கிடுகிறார்கள். அந்த ஞானம் எல்லோருக்கும் வர முடியாது.

இந்த 'எல்லோரும்' என்ற வார்த்தைக்கு சந்திரசூரியன் விதிவிலக்கா என்ன?

ஆணுக்குத்தான் பெண்ணிடம் மயக்கமா?

பெண்களுக்கும் ஆணிடம் ஏற்படும் மயக்கமும் சாதாரணமானதல்ல!

ஒரு ஆடவனை விருப்பத்தோடு பார்க்கும் போது அவர்கள் உடம்பில் ஏற்படும் மாறுதல்களை அவர்களே உணர முடியும்.

தனிமை, இரவை நீண்டதாக்குகிறது; உறவு அதைச் சுருங்க வைக்கிறது.

இரவு விளையாட்டுக்குப் பொழுது லட்சியமல்ல; இன்பமே இதன் நோக்கம். தன்னை மறந்த ஒரு லயம்! சொர்க்கத்தில் பறப்பது போன்ற ஒரு பிரமை!

ஆடவன் விழுவது போல, ஒரு கட்டத்தில் பெண்ணும் மருண்டு விழுகிறாள்.

அதிலும் ஆடவன் அவளுக்கு முழுத் திருப்தி தரக்கூடியவனாக இருந்தால் அவனையே நினைத்துக்கொண்டிருக்கிறாள்.

தாய் குழந்தைக்குப் பால் கொடுக்கும் போதுகூட அவளது கண் சொருகுகிறதே!

காம உணர்வு ஆபாசமானதன்று. ஆனால் அது தடந்தவறிப் போகும்போது மரியாதை கெட்டுப்போகிறது. மரியாதை கெட்ட நிலையில் ஒருவனோ ஒருத்தியோ அனுபவிக்கும் இன்பம், வெறும் சடலம் பெறும் இன்பமே!

**கவியரசு கண்ணதாசன்**

கற்பகத்திற்கு இனிப் புதிதாக ஒன்றும் மரியாதை கெடவில்லை. அவள் உத்தமியாக இருந்தாள் என்றால், ஊர் அதை ஒப்புக் கொள்ளவில்லை. ஊரார் அவளை சந்தேகக் கண்ணோடுதான் பார்த்தார்கள்.

(அந்தரங்கம் வரும்)

# எங்கே நிம்மதி?



## அ.கோகுலதீபன்-கல்முனை

சாய்மனைக் கட்டிலில் அமர்ந்து கொண்டு பஞ்சாங்கம் பார்த்துக் கொண்டிருந்த கணபதியை தபாற்காரனின் சைக்கிள் மணியோசை வீட்டுப் படலைக்கு அழைத்தது. எழும்பிப் போய் கடிதத்தை வாங்கிப் பார்க்கும் போதே கனடாவிலுள்ள தன் மகன் தான் போட்டிருக்கிறான் என்று ஊகித்துக் கொண்டே உடைத்தார். அவர் நினைப்பு வீண் போகவில்லை. கடிதத்தை வாசிக்கும் போதே மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"என்னப்பா சிரிக்கிறயள்....? நம்மட ராஜாவோ கடிதம் போட்டிருக்கான்....? வாசியுங்கோவன்....." என்று கூறிக் கொண்டு பால் டம்ளரை நீட்டினாள் மனைவி மங்கம்மா.

"அவன் என்னத்தடி எழுதிறவன்... வழமை போல.... அங்க நிம்மதியான வாழ்க்க புடிச்சிருக்காம். இங்க இருந்து சாவுக்குப் பயந்து வாழாம அங்கேயே வந்திடுங்கோவன் என்று தான் கிறுக்கியிருக்கான்... இங்க காத்தில்லையா சுவாசிக்க என்ன நிம்மதி...?" தனக்குள்ளே புறுபுறுத்தார். "அவன் சொல்லுறதிலயும் நியாயமிருக்கல்லோ....? இங்க இருந்திட்டு பெருமூச்சு விட்டுக் கொண்டு..." மங்கம்மா சொல்லி முடிப்பதற்கிடையில்; "இங்க.... இந்தப் பேச்செல்லாம் விட்டுப் போட்டு... போய் குடய எடுத்திட்டு வா.... செல்வண்ட கடைப் பக்கம் போயிட்டு வர்றன்." உரத்த குரலில் கத்தினார் மனுசன்.

'இந்த மனுசனுக்கு வெளிநாடெண்டா கொல்லக் கொண்டு போற மாதிரி' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டு அறைக்குள் புகுந்தாள் மங்கம்மா.

சாய்மனைக் கட்டிலில் கிடந்த துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, மூலையில் கிடந்த பழைய செருப்பை காலில் மாட்டியவாறு குடையை வாங்கி விரித்தபடி நடந்தார்.

மகன் வெளிநாடு போறதில அவருக்கு கொஞ்சம் கூட இஷ்டமில்லை. ஆனால் மங்கம்மா தான் 'அவனும் இங்கே தொழில் இல்லாம இருக்கானே... நாட்டிலயும் நிலம வர வர மோசமாகுது' என்று சொல்லி கிடந்த நகையெல்லாம் அடகு வைச்சி, அதுவும் காணாமல் கொஞ்சம் கடனும் வாங்கி மகனைக் கனடா அனுப்பி வைப்பதற்கு உடும்புப்பிடியா நின்றவள். இப்பொழுதும் ஒன்றும் குறைச்சலில்லை. ஹொட்டலொன்றில் வேலை செய்து நிறையக் காசு வீட்டுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறான்.

கணபதி அடிக்கடி கடிதத்தில "சாகிறதெண்டாலும் வாழ்றதெண்டாலும் பொறந்த மண்ணுல தான் நடக்க வேணும்.... நம்மட சொந்தம், சுற்றம், பண்பாடு... இத விட எனக்கு வேறேதும் பெரிசில்ல!" என்று எழுதுவார். இப்படியாக தகப்பனுக்கும் மகனுக்குமிடையில் கருத்துக்கள் கடிதத்தில் மோதிக் கொள்ளும்.

வெளியில் போன மனுசன் கடைக்குப் போனதும் போகாததுமாக, "அடியே மங்கம்மா" என்று பதறியடித்துக் கொண்டு வந்தார்.

"என்னப்பா நடந்தது..." பதட்டத்தோடு மங்கம்மா கேட்க; "என்ன நடந்ததோ.... எல்லாம் உன்னாலதான்டி... க...கனடாவில ஹொட்டலொன்டு எரிஞ்சு பத்து இ●ங்கப் பெடியன்கள் செத்திட்டாங்களாம்.... செ.... செல்வன் தான் சொன்னான்.... நியூசில சொன்னதாம்" ஆத்திரமும், அழுகையுமாக சொன்னார் கணபதி.

"ஐயோ என்ர கடவுளே.... அப்படியொண்ணும் தம்பிக்கு நடக்காது..... என்ர மகனக் கடவுள் காப்பாத்துவான்...." ஒலமிட்டுக் கொண்டு நிலத்தில் விழுந்தாள்.

"நான்.... அப்பவே சொன்னன்... நீ... நீ தான் கேக்கயில்ல...." குடையை நிலத்தில் எறிந்து விட்டு சாய்மனைக்கட்டிலில் சரிந்தார்.

---

# அரச வேலி



## ஷாலினி டோசன்-பத்தனை

"சடசடக்கின்றது வௌவால் கூட்டம். சிலந்தியொன்று தனது வலையை பின்னுவதில் மும்முரமாகயிருக்கிறது. எலிகள் ஜன்னல் ஓரங்களிலும், சுவரோரங்களிலும் தமது ராஜாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்றன. சின்னதாக ஓர் ஒளிக் கீற்று தெரிகிறது. என் முகத்தை தடவிப்பார்க்கிறேன், "ஆ! நானா இப்படி?" முகமெல்லாம், தாடியும் மீசையுமாக நிறைந்து கிடக்கின்றது. கண்களில் ஜீவனில்லை. ஏன்? எல்லாவற்றிற்கும் மேலான எனது தாய் என்னருகிலில்லை. 'அம்மா, அன்று மட்டும் நீ என்னை ஒரு தமிழனாக இந்த ஈழ மண்ணில் ஈன்றெடுத்திருக்காவிட்டால்....!' உள்ளம் குமுறுகிறது. கம்பிகளுக்கு மத்தியில் எனது எதிர்காலம் வீணாகியிருக்குமா? கண்களில் கண்ணீர். உள்ளமும் பின்னோக்கிப் போகின்றன........

வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கு கல்லூரிக்கு சென்று வருவதென்றால் ஒரு மணித்தியாலம் மட்டுமேயாகும். நமது நாட்டில் ஒரு தமிழனாக என்னைப்பார்த்த போது கல்லூரி அருகிலேயே கிடைத்ததை எண்ணி எனது தாய் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள். அன்றாடம் நான் சைக்கிளிலேயே தான் சென்று வருவேன். இடையில் செக்பொயிண்டுகள் அதிகம். எமக்கே உரித்தான அடையாள அட்டை அங்கே பரீட்சிக்கப்படும்.

அன்று காலையும் அப்படித்தான். அன்று சற்று தாமதமாகியதால் விரைவாகப் புறப்பட்டேன். அன்று தமிழ் பரீட்சை வேறு பாரதியார் கவிதைகளை மனப்பாடம் பண்ணியதில், "பயப்படாமல் சென்று வா, அரசு வேலி உன்னைக் காக்கும்!" என்ற கவிதைவரிகள் எனது வாயில் வந்து கொண்டேயிருந்தன.

செக்பொயிண்ட் வந்தது. சட்டைப் பையை தொட்டுப் பார்த்தேன். திக் என்றது. அடையாள அட்டை இல்லை. ஞாபகமறதியாக விஞ்ஞானப் புத்தகத்தை எடுத்து வராததையும், அதனுள் அடையாள அட்டையை வைத்ததும் அப்பொழுது தான் என் ஞாபகத்திற்கு வந்தது. என்ன செய்வதென்று நான் யோசிப்பதற்குள், எனது முறை வந்தது. ஒரு ஆமிக்காரன் என்னை நோக்கி வந்தான். "மல்லி ஐடிண்டி தியனவத"? (தம்பி அடையாள அட்டை இருக்கின்றதா?) என்றான். தூக்கி வாரியது எனக்கு. "அதை இன்று எடுத்து வரவில்லை!" என்று எனக்குத் தெரிந்த அரைகுறை சிங்களத்தில் எவ்வளவு விளக்கியும், அதை அங்கிருந்த யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. என் கோரிக்கைகள் அங்கே சிதைக்கப்பட்டன. பயங்கரவாதி என்ற முத்திரை என்மேல் குத்தப்பட்டது. ஒரு சிறிய காகித சீட்டு எனது விதியை நிர்ணயித்து விட்டது.

மூன்று வருட இந்த சிறை வாழ்க்கையில் எனக்குக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒரே வேதமொழி "பயப்படாமல் சென்று வா! அரசுவேலி உன்னைக் காக்கும்!" என்ற பாரதியாரின் ஒரு கவிதை வரிதான்.

"தம்பி!" என்ற ஜெயிலர் ஐயாவின் குரல் என் சிந்தனையைக் கலைத்தது. "என்ன ஐயா?" என்றேன் நான். "ஊரிலிருந்து உனக்கொரு தந்தி வந்திருக்கின்றது. இந்தாரும்". எனக் கொடுத்தார். அதை வாங்கும் போது கைகளும், நெஞ்சமும் படபடத்தது. "ஐயோ! அம்மா, என்னை விட்டுப் போய் விட்டாயா? இந்த மண்ணில் ஒரு தமிழனாய், நான் பிறந்தது, உனக்கு கடைசியாய் ஒரு கொள்ளியைக் கூட வைக்க முடியாத ஒரு பாவியாய் என்னை ஆக்கி விட்டதே அம்மா!?" கதறினேன்! கத்தினேன்! வௌவால் கூட்டங்களும், சிலந்தி பட்டறைகளும் முகத்தில் வந்து மோதின. இப்பொழுது கண்களைத் திறந்துப் பார்க்கிறேன். உலகமே இருண்டுக் கிடக்கின்றது. எனது உள்மனம் மட்டும் "அரசு வேலி உன்னைக் காக்கும்! அரசு வேலி உன்னைக் காக்கும்!" என உச்சரித்துக் கொண்டேயிருக்கின்றது.

---

# அவனும் அவர்களும்



## சுதா பிரதிசகி – பிரான்ஸ்

அவனின் இதயம் வேகமாக துடித்தது. யார் தன்னை பார்த்துவிடக் கூடாது என இவ்வளவு நேரமும் இறைவனை வேண்டினானோ; அவர்களே அவனுக்கு முன்வரிசையில் இருந்த ஆசனங்களில் வந்து அமர்ந்திருந்தனர். நல்ல வேளையாக அவர்கள் இன்னும் அவனைக் காணவில்லை. 'ஆண்டவா... அவர்கள் இங்கு திரும்பிப் பார்க்க கூடாது' வேண்டியபடி கையில் வைத்திருந்த கணக்கியல் புத்தகத்தை பிரித்து படிப்பது போல் பாவனை செய்து முகத்தை மறைத்தான் "இங்க பார் மச்சான் தியேட்டரிலை வந்து பாடம் படிக்கினம், வீட்டில இடம் இல்லைப் போல!" ஒருவனது கிண்டலான குரல் பின்னாலிருந்து கேட்டது.

கோபம் வந்தாலும் அடக்கிக்கொண்டான் அவன். 'ஏதாவது பேசப்போய் தகராறாகி முன்னால் உள்ளவர்கள் திரும்பிப் பார்த்து என்னை அடையாளங்கண்டு கொண்டால்' நினைக்கவே அவனுக்கு வியர்த்துக் கொட்டியது.

விளக்குகள் அணைக்கப்பட்டு படம் ஆரம்பமாகியது. அவனது அபிமான நடிகரின் படம் அது. 'அப்பாடா' என்றபடி இருக்கையில் சாய்ந்து கொண்டான். கைதட்டல்களும், விசில் ஒலிகளுமாய் தியேட்டரே ஆரவாரமாய் இருந்தது. சிறுது நேரத்தில் எல்லோரும் படத்தில் ஒன்றிப் போய்விட மீண்டும் அமைதி. படத்தில் ஒரு நகைச்சுவை காட்சி, எல்லோரையும் வயிறு குலுங்க சிரிக்க வைத்தபோது அவனும் அடக்கமுடியாமல் சிரித்தான். திடீரென்று இருமத் தொடங்கினான். அடக்கிப்பார்த்தான்; இயலவில்லை. உரத்து இருமியபோது முன்னால் இருந்தவர்களில் ஒருவன் திரும்பிப்பார்த்துவிட்டு திரையை பார்த்தவன்; ஏதோ சந்தேகம் வந்தவனாய் மீண்டும் ஒரு தரம் திரும்பி இவனைப் பார்த்தான். பின்பு அருகில் இருந்த மற்ற இருவரிடமும் ஏதோ மெதுவாக கிசு கிசுத்தான். அவர்களும் உடனே இவன் பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு மற்றவனிடம் மெதுவாக 'அவர்தான்' எனக் கூறியது, அவனது செவியில் விழுந்து விட்டது.

இவ்வளவு நேரமும் இழுத்துப் பிடித்து வைத்திருந்த தைரியம் இருந்த இடம் தெரியவில்லை 'என்னை அடையாளம் கண்டு விட்டனர். இருந்திருந்து இண்டைக்கு வந்தன் படம் பார்க்க, நாளைக்கு பள்ளிக்கூடத்தில என்ர மானம் கப்பல் ஏறப்போகுது. அதிபரிடமும் விஷயம் போய் விடும், பிறகு என்ன; சுகயீன லீவு போட்டுட்டு படம் பார்க்க போனதுக்கு என்ன தண்டனை கிடைக்குதோ?' மனதில் ஏதேதோ நினைத்து புலம்பினான். மேற்கொண்டு படத்தில் அவன் கவனம் பதியவில்லை. 'இவர்களின் முகத்தில் விழிக்காமல் எப்படி தியேட்டரை விட்டு ஓடுவது' என எண்ணியபடி இருந்தபோது. விளக்குகள் பளீரென ஒளிர்ந்தன. திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தான். இடைவேளை விட்டிருந்தது.

முன்னால் இருந்தவர்கள் இவன் பக்கம் திரும்பினார்கள். இவன் அப்போதுதான் அவர்களை கண்டு கொண்டதுபோல் முகத்தில் ஆச்சரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

"அட நீங்களும் வந்திருக்கிறியளே? நான் இவ்வளவு நேரமும் உங்களைக் கவனிக்கேல்லை" அவன் சொன்னதும் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

அவனுக்கோ பயத்தில் வயிறு கலங்கியது. 'வந்திருப்பவர்களில் ஒருவன் அதிபரின் மகன். இவன் மூலம் அதிபருக்கு விசயம் தெரிந்துவிடும். இவனை எப்படி சமாளிப்பது' என அவன் யோசனை செய்யும் போது,

"எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா?" என்று ஒரு குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தான். அதிபரின் மகன் தான் கேட்டான். 'என்ன' என்பது போல பார்த்தான் இவன்.

"ஒண்டுமில்லை... நான் அப்பாவுக்குத் தெரியாமல் படம் பார்க்க வந்திருக்கிறன். தெரிஞ்சா அடிச்சே கொன்றுபோடுவார். அதனால் தயவு செய்து அப்பாட்ட என்னை தியேட்டரிலை பார்த்ததா சொல்லிவிட வேண்டாம் பிளீஸ்." அவன் கேட்டுக் கொண்டதும் மற்ற இருவரும் அதை ஆமோதிப்பது போல தலையாட்டினர்.

இவனுக்கோ சிரிப்பு சிரிப்பாக வந்தது. உரத்து சிரிக்கத் தொடங்கினான். 'இவன் ஏன் இப்படி சிரிக்கிறான்' என்று புரியாமல் பார்த்து விழித்துக் கொண்டிருந்தார்கள் அந்த மூன்றுபேரும்.

---

# தங்கமான புள்ள



## இராசை சாத்வீகராஜா-அக்கரைப்பற்று

கூட்டுறவுச் சங்க பஸ்ஸில் அரைத் தூக்கத்தில் கல்முனையை நோக்கிப் பயணம் செய்யும் போது என்னருகிலிருந்த வயோதிப மாது "சொக்கு ஒழுகுது" எனச் சத்தமிட்டாள். என்ன புதினம்டா என்று எனக்கோர் அங்கலாய்ப்பு. எனது முன் ஆசனத்திலிருந்த பெண்மணி "பேசாதகா மாமி, இந்த வயதில சொக்கால ஒழுகிற புதினமில்லை".

"இல்ல புள்ள என்ட டீ குடிக்கிற சொக்கு ஒழுகு தெண்டுதான் நான் சொன்ன". பஸ்ஸில் ஏறிப் பயணத்தை ஆரம்பித்த நேரந்தொடக்கம் நான் அம்மனுஷியிடம் கதை வைக்கவில்லை. இந்த சம்பாசணையைக் கேட்ட பிற்பாடு சிரிப்பும் வந்தது; அத்துடன் அம்மனுஷியிடம் ஒருவித பரிவும் என்னையறியாமலேயே ஏற்பட்டது. "டீ குடியிங்க கிளி" என்று அவவைத்திருந்த பாத்திரத்தில் எனக்குச் சுடுதண்ணிப் போத்தலிலிருந்து தேனீர் ஊற்றித் தந்தார். "நான் பிரயாணத்தின் போது ஏதும் தின்பதுமில்லை குடிப்பதுமில்லை அம்மா" என்றேன். "செப்பந்தான்" என்றார்.

நான் பிறந்து வளர்ந்தது அக்கரைப் பற்றில். எனது சூழலில் இப்பேற்பட்ட பேச்சுக்களைக் காது குளிரக் கேட்டிருக்கின்றேன். இதை மீண்டும் கேட்க வேண்டுமென்று என் மனதில் ஓராசை. நான் கொழும்பில் பிரயாணம் ஆரம்பிக்க ஒரு மணித்தியாலத்தின் முன்னர் பாசிப் பயறினாலான மூன்று உருண்டைகள் வாங்கி அதில் இரண்டைச் சாப்பிட்ட பின்னர் ஒன்றைச் சுருட்டித் தோடம்பழப் பையில் போட்டு வைத்திருந்தேன். அதை யெடுத்து அம்மனுஷிக்கு உண்ணும்படி கொடுத்தேன். சாப்பிடும்போது "போளை என்ன செப்பமாயிருக்கு" என்று சொல்லிக் கொண்டே வந்தார்.

"அந்தக் காலத்தில ஊட்ட எந்நேரமும் நெய்யில் வறுத்த சீனிமாவும் சீனிப் பாகு காய்ச்சிற அவலும் பானைக்குள்ளிருக்கும். எண்ட புருசனுக்கு போளை, எண்ணைப் பணியாரம் எண்டால் உசிர். இப்ப உள்ள ஆக்களுக்கு கேக்கு, மசுக்கோத்துத்தான் விருப்பம். எனக்கெண்டால் இதுகள்ள விருப்பமில்லை நாசியில களி மண் ஒட்டுறாப் போல ஒட்டுது"

எனக்கு மனுஷியிடம் மேலும் கதை கொடுக்க வேண்டுமென ஆசை. முன்னிருக் கையிலுள்ள 'மருமகள்' "இதுக்கத்தான் இந்த மனுஷியைக் கூட்டிவாறல்ல. அலுப்பில்லாமல் கதைக்கிறதுக்கு நல்லொரு ஆள் கிடைச்சிருக்கார்."

"நான் கதைத்தால் உனக்கென்ன புள்ள?"

"என்ன மாமி மக்கத்துக்குப் போறவங்க வாறபோது, அவங்களைக் கூட்டிப் போகப் புறகும் கொழும்புக்கு வாறதா? நீ வாறெண்டால் நான் வரமாட்டேன்." இச்சம்பாசணை பக்கத்துச் சீற் காரர்களுக்கு ஒருவித முசுபாத்தியை ஏற்படுத்தியது. நானும் கண்ணயர்ந்து விட்டேன்.

அடுத்த நாட்காலை 8 மணியளவில் கொண்ட வெட்டுவான் எனும் இடத்திலுள்ள இராணுவக் காவல் நிலையத்தை அடைந்ததும், நடத்துநர் எல்லோரையும் இறங்கும்படி கூற நாங்கள் எல்லோரும் மூட்டை முடிச்சுகளுடன் கீழிறங்கிச் சோதனைக்குட்பட்டோம். சோதனை முடிந்து ஓடிவந்து பஸ்ஸில் ஏறும்போது மனுஷி பஸ்ஸில் அமர்ந்து கொண்டிருந்தார். "என்னெண்டு மாமி இவ்வளவு கெதியா வந்து ஏறினாய்?" "நான் ஏன் ஏற இறங்க வேண்டும்? செக்கிங் செய்த ஆமிப்பொடியன் எவ்வளவு தங்கமானபுள்ள. என்ட ஐடினைப் பாக்கல்ல; சாமான் சக்கட்டையும் பாக்கல்ல" என்று அந்த 80 வயதைத் தாண்டிய மாது பதிலளித்தார்.

தனக்குத் தானே நிகழ்ந்தாற்றான் நல்லதும் தெரியும் கெட்டதும் தெரியும். எனக்கு இதைக் கேட்டவுடன் கொழும்புக்குப் போகிற வழியில் மகா ஓயாவிலுள்ள சோதனை நிலையத்தில் தமிழனாகப் பிறந்த சகலரும் உள்ளாடையைக் கூடக் கழற்றிப் பார்க்கப்பட்டது. இம்மனுஷிக்கு தெரிய வேண்டியது நியாயமில்லைதானே?



# 'கண்வழியே தப்பவிட்டேன்!'

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

"என்ன கௌசல்யா, கண்களைத் திறந்தபடியே தூங்குகிறாயா? நான் வந்தது தெரியாமல் அப்படி என்ன கனவு?"

அந்திச் சிவப்பாகிவிட்ட முகத்தில் அசடு வழிவதைத் தவிர்க்க முடியாமல், "வா, நீலா, உன்னைத் தான் காணவில்லையே என்று யோசித்துக் கொண்டிருந்தேன்...." என்றாள், இதயத்தின் அச்சத் துடிப்பு இமைகளில் தெரிய.

"அடடா! பாதிக் கண்கள் முடியும் பாதிக்கண்கள் திறந்தும் கிறக்கத்தோடு என்னை நினைத்துக் கொண்டிருந்தாயாக்கும்... ம்...." விஷமத்துடன் சிரித்தாள் நீலா.

"போடி, உனக்குப் பதில் சொல்ல எனக்கேலாது...."

"கனவில் வந்தவர் யாரெனக் கேட்டேன். கதையை ஏன் மாற்றினாய் தோழி?" பாடினாள் நீலா.

கௌசல்யா செல்லக் கோபத்தோடு அவளை அடித்தாள். சிணுங்கினாள்.

நீலா தேற்றினாள். "ஏ... ஏ.... கோபித்துக் கொள்ளாதே. உன் அந்தரங்கத்திற்குள் நான் அத்துமீறி நுழைய மாட்டேன். கனவுகள் அந்தரங்கப் பூக்கள்..... அவரவர் மனத் தோட்டத்திற்கு மட்டும் சொந்தமான அந்தரங்கச் செடிகள் அவை.... நீயே அதை வளர்த்துப் பராமரி! நான் குறுக்கிடமாட்டேன்....."

"அவன் தொந்தரவை தாங்கமுடியவில்லையடி.....!" என்று இழுத்தாள் கௌசல்யா.

"ஏன் எங்காவது ஓடிவிடலாம் என்று வற்புறுத்துகிறாரா?"

"போடீ.... நனவினான் நல்காக்கொடியார் கனவினான் என்னெம்மைப் பீழிப்பது.... நேரில் வரமுடியாவிட்டால் போகட்டும். எதற்காகத் தனித்திருக்கும் நேரமெல்லாம் என்னைத் துன்புறுத்தக் கனவில் வரவேண்டும்?"

"கனவுகள் மனசாட்சியின் குரல் என்கிறார்கள்!"

"ம்..... மனசாட்சியே இல்லாதவர்கள் வந்து கூத்தடிக்கிறார்கள்..... போ... நீயும் உன் குரலும்...!"

"கோபம் வேண்டாம் தோழி. விஞ்ஞானிகள் சொல்வதைச் சொல்கிறேன்...."

"அவர்களுக்கென்ன? நெருப்பில் ஒரு காலையும் பனிக்கட்டியில் ஒரு காலையும் வைத்துக் கொண்டிருந்தால் சராசரி வெப்பநிலை சரியாகத்தானிருக்கும் என்று ஆராய்ச்சி பண்ணி முடிவு சொல்வார்கள். அனுபவித்துப் பார்த்தாலல்லவோ அவதி தெரியும்!"

நீலா சிரித்தாள். "நமது மனத்தை உள்மனம், வெளி மனம் என இரண்டு வகையாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள், அதாவது நனவிள மனமும் கனவு மனமும்! நம்முடைய எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், பயங்கள், சந்தேகங்கள் எல்லாம் உள் மனத்தில் பதிவாகின்றன. இப்படிப் பதிவான நினைவுகளில் சில, முன்பின் தொடர்பில்லாத சிறு பகுதிகளாக வெளிபடுவதைத்தான் கனவு என்கிறார்கள்..... அந்த விஞ்ஞான விளக்கங்கள் ஒருபுறம் இருக்கட்டும். கனவுகள் அழகானவை; கண்களில் பூக்கிற மலர்கள் அவை!"

"ம்...... கனவு இன்பமானதுதான். அதன் முடிவுதான் கொடுமை. நனவெனப் புல்லுங்கால் காணாளாய்க் கண்டது கனவென உணர்ந்துபின் கையற்றுக் கலங்குமே....."

"கை பற்றித் தீயை வலம் வந்து மஞ்சன நீராடி மங்கல நாண் பூட்டுவதையெல்லாம் கனவிலேயே கண்டாள்- ஆண்டாள். நீ எதுவரைக்கும் கண்டாய் என் தோழி!"

"பக்கத்திலே வந்தமர்ந்தான். கூந்தலைக் கோதினான். நெற்றியைத் தொட்டு முத்தமிட்டான். பின் கண்களுக்குள் தன் கண்களெனும் வேலைப் பாய்ச்சியபடி, 'நான் முத்தமிட்ட நெற்றி கூறை பிறையோ, கொலை வாளின் மேற்பரப்போ?' என்று விஷமச் சிரிப்போடு கேட்டான். அந்த முரட்டுக் கரங்களால் என் முகத்தைத் திருப்பி கன்னத்தில் தன் முகத்தைப் பார்க்கிறேன், என்றான். சொல்லியது போதாதென்று அங்கேயும் முத்தமிட்டான் பிறகு.... பிறகு....."

"ம்... பிறகு என்னடி என்ன?"

"தேன் வைத்த செம்பவளச் சிமிழ் என்று தன் இரு விரல்களால் கீழுதட்டை நெரித்துப் பிடித்தான். 'இது போதும் நான் பசியாற' என்றான். முத்தமிட்டு முத்தமிட்டு என் இதழ்களே கரைந்துபோய்விடச் செய்தான், பார்!" என்று சிணுங்கினாள் கௌசல்யா.

"அடடா! அங்கே எதையும் காணோமே..... முழுவதையுமா கரைத்துக் குடித்துவிட்டான்?"

"போடீ கேலி செய்யாதே! இதெல்லாம் நனவிலே எங்கே நடந்தது? கனவில்தான் எல்லாம்....."

"எத்தனை நாளைக்குத்தான் கனவிலேயே காதலித்துக் கொண்டிருப்பது? விரைவாக தேதியைப் பாருங்கள். கனவு எல்லாம் நனவாக வேண்டாமோ?"

"ஏதோ, கனவிலேனும் காணக்கூடியதாய் இருப்பதால் தான் இன்னும் உடலைவிட்டுப் பிரியாதிருக்கிறது உயிர். இல்லாவிட்டால், இந்த உடல் தரும் சித்திரவதையில் உயிர் என்றோ மாண்டு போயிருக்கும் .... நனவினால் நல்காதவரைக் கனவினால் காண்டலின் உண்டென் உயிர் தெரிந்ததா என் அன்புத் தோழி!"

"உனக்குத்தான் அவன் பிரிந்து வேற்றூர் போனதிலிருந்து தூக்கமே வருவதில்லை என்றாயே.... பிறகெப்படிக் கனவு வருகிறது உனக்கு? எல்லாம் உன் ஆசையில் விளையும் கற்பனை நாடகங்களா?"

"கனவா கற்பனையா என்ற பேதத்தைப் பிரித்துப் பார்த்து அறிந்துகொள்ள முடியவில்லையடி, கனவுகளைத் தந்துவிட்டு தூக்கத்தைப் பறித்துப் போய்விட்டான் அந்தக் கொடியவன். உன்னோடு பேசிக் கொண்டிருக்கும் நேரம் தவிர்ந்த மற்ற நேரமெல்லாம் மனதில் அவனே நிறைந்திருப்பதால் தூக்கத்தில் வருகிறானா, விழித்திருக்கும் போதே வருகிறானா என்று வித்தியாசம் தெரியவில்லையடி!"

"என்னடி இது உனக்கு வந்த சோதனை?"

"சோதனையில்லையடி வேதனை, தூக்கமே அற்றிருந்த எனக்கு நேற்றிரவு சற்றுத் தூக்கம் வந்தது. இமை பொருந்தியதுதான் தாமதம், என்னைக் கொல்லும் தன் குறும்புக் கண்களோடு நுழைந்தான் அந்தக் கயவன். தலையணையாய் என் மேனி எங்கும் அழுத்தினான். அவன் மூச்சுக் காற்றுக் கூட என் முகத்தைச் சுட்டதடி. அட! நனவுதான் இது என்று மயங்கி அவனை அணைத்துக்கொள்ள எழுந்தேன். என்ன கொடுமையடி! ஐயகோ! என் மார்போடு பொருந்திய அந்த மாயவனைக் காணவில்லை! குளிர்சாந்தம் பூசிய அந்த மார்பகலம் காணோம்! கள் சொரிந்த அவனிதழ் முத்தத்தைக் காணோம்! சேரத்தான் வந்தான், திரும்பி எங்கே போனான்? கனவில் வந்தவனைக் கை நழுவ விட்டேனே என்று நானடைந்த கவலை கொஞ்சமில்லைத் தோழி! கண்ணுக்குள் நின்றவனைக் கண்திறந்து தப்பவிட்டேனே! இனியந்தக் கனவு மீண்டும் வருமா? கனவினாலாவது என் உயிர் பிழைத்திருக்க வழி காணுவானா.....?

**ஓராற்றால் என் கண்**
**இமை பொருந்த அந்நிலையே**
**கூரார்வேல் மாறன் என்**
**கைப்பற்ற-வாரா**
**நனவென் றெழுந்திருந்தேன்**
**நல்வினையொன் றில்லேன்**
**கனவும் இழந்திருந்த வாறு!**

-முத்தொள்ளாயிரம் 39-

## சிந்தியா பதில்கள்

**✏ சிந்தியா! கேள்விகளை எப்படி செலக்ட் பண்ணுகிறீகள்?**

க.ஞானசுதன், தலவாக்கலை.

என்னிடமுள்ள பதில்களை வைத்துத்தான்!

❖

**✏ மற்றவர்களின் பேச்சை ஒட்டுக்கேட்பவர்களை என்ன செய்யலாம்?**

க.தயாளன், பாரதிபுரம்.

'தங்கமலை ரகசியம்' படத்தில் என்று நினைக்கிறேன். ஒட்டுக் கேட்டு ரி.ஆர்.ராமச்சந்திரனின் காதுகள் கழுதைக்காதுகள் போல பெரியதாக வளர்ந்துவிடும். அதுபோல் நடக்குமென்றால் நல்லது. மற்றவர்கள் எச்சரிக்கையாக இருந்துகொள்ளலாம்.

❖

**✏ சமீபத்தில் இரசித்த ஜோக்?**

வி.பிரியம்வதனி, கொழும்பு 06.

"சமையல் ரொம்ப நல்லா இருக்குன்னு என் கணவர் சொன்னா எனக்குப் பிடிக்காது"

"ஏன் அப்படி?"

"தற்பெருமை பேசறவங்களைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது!"

மேற்படி ஜோக்கை ஆனந்த விகடனில் பார்த்து ஆச்சரியமும் சற்றே வருத்தமும் ஏற்பட்டது.

ஆச்சரியம்-வீட்டில் ஆண் சமையல் செய்வதை எத்தனை ஆயிரம் விதமாக ஜோக் ஆக்கிவிட்டார்கள்!

வருத்தம்-இது ஜோக்காகச் சொல்லப்பட்டுச் சொல்லப்பட்டே ஆண் சமையல் செய்வது இழிவானதாகவும், பெண்ணே அதற்குரியவளாகவும் நிறுவப்பட்டு வருவது.

❖

**✏ இந்தியத் தமிழ் சினிமா நடிகர்கள் யாராவது, போரில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவி வழங்கியுள்ளார்களா?**

சி.துஷ்யந்தன், மண்டூர்.

எத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் முண்டியடித்துக் கியூவில் நின்று, வரும் அத்தனை படங்களையும் பார்த்து நம்முடைய பொதுசனங்கள் தான் அவர்களுக்கு உதவிக் கொண்டிருக்கிறார்கள்.

❖

**✏ உங்கள் பொழுது போக்கு?**

எம்.எம்.இமாம் ஹஸன், ஹெம்மாதகம.

பொழுதை நான் போக்க வேண்டியிருப்பதில்லை, தானாகவே போய்விடுகிறது. பஸ்ஸுக்குக் காத்திருக்கையில், வங்கியில் என்முறைக்குக் காத்திருக்கையில், படமாளிகையில் இடைவேளையின்போது, டொய்லெட்டினுள்.... எல்லாம் பொழுது வீணாய்ப் போகிறதே என்ற கவலை ஏற்படும். இப்போது அங்கெல்லாம் படிப்பதற்கென கையில் புத்தகம் ஒன்றை எடுத்துச் சென்று விடு கிறேன். மற்றப்படி தொலைக்காட்சி, வானொலி எல்லாம் நான் எழுத, பதில் சொல்ல உன்னிப்பாகப் பார்க்க வேண்டியிருப்பதால் அதுவும் வேலையின் ஒரு பகுதியாகிறது. உடற்பயிற்சியை, தூக்கத்தை பொழுதுபோக்காய் சொல்ல முடியாது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பது மூச்சு விடுவது எப்படிப் பொழுதுபோக்காகும்? கொஞ்ச கொஞ்ச நேரம் வீட்டிலுள்ளவர்களுடன், நண்பர்களுடன் பேசிக் கொள்வதைச் சொல்லலாம், மற்றபடி- மூன்று மாதங்களுக்கொருமுறையேனும் புதிய புதிய இடங்களுக்குச் சென்று இரண்டொரு நாள் தங்கிவிட்டு வருவது; ஆற்றங்கரைகளில், மலையடிவாரங்களில், கானகங்களின் நடுவே, வெறுந்தரையில் மல்லாக்காகப் படுத்து வானத்தை ஆராய்ந்தபடி, பூக்களோடு பேசியபடி, அணில்கள் குருவிகளின் பேச்சைக் கேட்டபடி, ஓடும் ரயிலின் ஜன்னலோர இருக்கையில் புதுப்புது இடங்களினூடு தொடர்ந்து பயணம் செய்தபடி, குழந்தைகளோடு விளையாடி கதைகள் சொல்லி, கிணற்றில் கல் போட்டதாக கடிதங்களை எழுதி வெறுத்துப் போயிருக்கும் நண்பர்களுக்கென உட்கார்ந்து கடிதங்களை எழுதி...... இப்படியெல்லாம் பொழுதைக் கழிக்க என்றாவது ஒரு நாள் வரும் என்று..... பொறுங்கள் அடுத்த கேள்விக்குப் போகவேண்டும்.

❖

**✏ புது மில்லேனியத்தின் சிறந்த திரைப்படம் எது?**

பா.லோகிதன், வவுனியா.

சிறந்தபடம் இனித்தான் வரவேண்டும். இரண்டாயிரமாம் ஆண்டின் முதல் திரைப் படம் என்ற பெருமையை 'மிலேனியம் ஸ்டார்ஸ்' என்ற மலையாளத் திரைப்படம் தட்டிச் சென்றிருக்கிறது. ஜெயராம், சுஜா (டான்ஸ் மாஸ்டர் ரகுராமின் மகள்), மனோரமா ஆகியோருடன் பின்னணிப் பாடகர் ஹரிஹரனும் இப்படத்தில் நடித்திருக்கிறார். 1999, டிசம்பர் 31, நள்ளிரவு 12 மணிக்கு சரியாக அந்தப் படத்தை திரையிட்டிருக்கிறார்கள். கேரளாவிலுள்ள வர்க்கலா நகர இரசிகர்கள் திரண்டு, புது மில்லேனியத்தின் முதல் திரைப்படத்தை வரவேற்றுக் கொண்டாடினார்களாம்! ஹூம்.... எங்கள் கொண்டாட்டமெல்லாம் 'முதல் படுகொலையை தமிழன் செய்கிறானா சிங்களவன் செய்கிறானா' என்று பார்ப்பதில் இருக்கிறது.....!

❖



அஜீத்குமார்-ஷாலினி

**✏ நோர்வே அமைச்சரின் வருகையை அனுகூலமாக கருதுகிறீரா?**

க.சேவற்கொடி, நாவலப்பிட்டி.

நாங்கள் கருதுவதில் என்ன ஆகப் போகிறது? எல்லாம் அலரிமாளிகையும் அலம்பில் காடும் விட்ட வழி!

❖

**✏ அஜீத்-ஷாலினி திருமணம் எப்போது?**

க.தயாளன், வவுனியா.

தங்கள் திருமணத்திற்கு வில்லனாக இருப்பவர் பிரசாந்தான் என்கிறார் அஜீத். வேறொன்றுமில்லை. பிரசாந்த் ஷாலினி நடிக்கும் 'பிரியாத வரம் வேண்டும்' படம் இழுத்துச் செல்வதால் கல்யாணமும் தள்ளிப்போகிறதாம். அது முடிந்ததும் 'டும், டும்' தான். அநேகமாக ஏப்ரலில் கல்யாண ஃபோட்டோ பார்க்கலாம்.

❖

**✏ எந்த கிரிக்கெட் அணியும் உலக சம்பியன் ஆனவுடன் தனியான பலம் எப்படி வருகிறது?**

து.கிருஷ்ணகுமாரன், பொகவந்தலாவ.

ஆமாம்! தலை நரைப்பதால் முதுமை வருகிறது; விரல் கடிப்பதால் நகம் வளர்கிறது; வெயில் அடிப்பதால் சூரியன் வருகிறது...... என்ன விளையாடுகிறீர்களா கிருஷ்ணகுமாரன்? பலம் வருவதால் தான் சம்பியன் ஆகிறார்கள்.

❖

**✏ சிந்தியா அவர்களே! ஆண்களைப் போல் ஆடை அணியும் பெண்களைப் பற்றி...?**

எச்.எம்.நிபாஜி, திருகோணமலை.

பெண்களைப் போல் நகை அணியும் ஆண்களைப் போன்றவர்கள்! அது சரி, ஆண்களையே அடித்து வீழ்த்தும் லைலா அலி பற்றி, ஆண்களைப் பயந்தோட வைக்கிற பெண் போராளிகள் பற்றி, இலங்கையில் இந்தியாவில் இங்கிலாந்தில் எல்லாம் ஆண்களைவிட பிரபலமாக ஆட்சி செய்த பெண்களைப் பற்றி கேள்வி கேட்கத்தோன்றவில்லையா?

❖

**✏ நவரச நாயகன் கார்த்திக் நடித்து அடுத்து வெளிவரவுள்ள படம் எது?**

எம்.நவநீதன், திருகோணமலை.

'கண்ணெதிரே தோன்றினாள்' வெற்றிப் படத்தைத் தந்த ரவிச்சந்திரனின் இயக்கத்தில் வரவிருக்கும் 'சந்தித்தவேளை' கார்த்திக்கிற்கு ஜோடி கௌசல்யா.

❖

**✏ எனக்கு மிகவும் பிரியமான பத்திரிகை தினமுரசு, இதை நீங்கள் ஆமோதிக்கிறீர்களா?**

அ.அச்சுதன், சேனையூர்.

இதென்ன கேள்வி! அதிலும் 'சிந்தியா பதில்கள்' தான் மிகவும் பிடித்தது.

❖

**✏ சிந்தியா! மேஜிக் செய்யும் போது, பெண்களை அரையும் குறையுமாகக் காட்டுவதன் மர்மம் புரிகின்றதா?**

எம்.எச்.எம்.இம்தியாஸ், மருதூர்.

ம்...ம்....

❖

**✏ பணம் பத்தும் செய்யும் என்கிறார்களே, உண்மையா?**

வி.அறிவழகன், யாழ்ப்பாணம்.

ஒரு கிராமவாசி தனது நாயுடன் நகரத்திற்குச் சென்றான். அங்கு மது அருந்தும் விடுதியில் (bar) தனக்கு பியருக்கு ஓடர் செய்தான். அவனது நாய் 'ஒரு விஸ்கி' என ஓடர் கொடுத்தது.

"என்ன கொடுமை!" என்றான் மது ஊற்றித் தருபவன்.

"ஆம் இது மிகவும் புத்திசாலியான நாய். நகரத்தைச் சுற்றிக் காண்பிக்க கூட்டி வந்திருக்கிறேன்" என்றான் கிராமவாசி.

"நான் பேப்பர் வாங்க மறந்துவிட்டேன் காசு கொடுத்துவிட்டால், அது போய் கடையில் பேப்பர் வாங்கி வருமா?" என்று கேட்டான் மது ஊற்றுபவன்.

"நிச்சயமாக!" என்று சொல்லி அவனிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு 'டாட்டா' கூறிவிட்டுப் போனது நாய்.

ஒரு மணி நேரமானது. நாய் திரும்பவில்லை.

கிராமவாசி அதனைத் தேடிப் போனான். ஒரு வீட்டின் பின்புறத்தில் அது ஒரு பெண் நாயுடன் சல்லாபமாக இருப்பதைக் கண்டான். அதனிடம் கேட்டான்:

"என்ன மோசம் இது? நீ இதுபோல என்றுமே செய்ததில்லையே....

"ஆம், முன்பு என்னிடம் பணம் இருந்ததில்லையே...." என்றது நாய்.

# மன்னாதி மன்னன்

## தலைவாயில் கதவோரம்

**இராஜகுமாரன்**

பாரத நாட்டின் பண்டைப் பெருமைகளைச் சித்தரிக்கும் பல கதைகள் என்றோ தோன்றியுள்ளன. இவை காலத்தால் அழியாதவை. புராணக் கதைகள், இதிகாசங்கள் தவிர பாரதப் பண்பைப் பறைசாற்றும் பல்லாயிரம் கதைகள் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மக்கள் மனங்களில் உலவி வந்தன.

அச்சுக்கலை அவனியில் பிரவேசிக்கு முன்னர், ஏடும் எழுத்தாணியும் எழுத்துக்களை உருவாக்கி பல கதைகள் பதிவு செய்யப்பட்டன. எழுத்து வடிவங்கள் தோன்றுவதற்கு முன்னர் மக்களின் வாய்மொழி மூலம் மட்டுமே கருத்துக்கள் பரவின. அவ்வாறு வாய்மொழிமூலம் கேட்கப்பட்ட கருத்துக்கள், கேட்போரின் உள்ளத்தில் நிரம்பியிருந்து, பின்னர் வரும் வழித் தோன்றல்களின் காதுகள் மூலம் பரப்பப்பட்டன.

எழுத்து வடிவங்கள் உருவானதும் தொடர்ந்து அச்சுக் கலை வளரத்



தொடங்கியதும் மக்கள் தம் உள்ளத்தில் அமிழ்ந்து கிடந்த கருத்துக்கள் பிரவாகமாகப் பரவ ஆரம்பித்தன. கால வெள்ளத்தால் பல கருத்துக்கள் அழிந்தொழிந்து போனாலும் வேறு பல நிலைத்து, இன்றும் மக்கள் மத்தியில் நிலை பெற்று நிற்கின்றன.

எவரால் எந்தக் காலத்தில் உருவானவை என்று அறுதியிட்டுக் கூறமுடியாத சில அரிய பொக்கிஷங்களைக் கிண்டிக் கிளறி அறிஞர் பெருமக்கள் இன்றும் மக்கள் முன் படைக்கத்தான் செய்கிறார்கள்.

### முன்னோரின் அறிவுத்தாகம்

இற்றைக்கு ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் நூல் நிலையங்களோ புத்தக சாலைகளோ நாட்டில் காண்பது அரிது. ஆனால் படிக்க வேண்டும்-அறிவை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடம் இருக்கவே செய்தது. இந்த ஆர்வத்தைத் தணிக்க பெரும்பாலும் புராணக் கதைப்புத்தகங்கள் உதவின. இராமாயணம், மகாபாரதம் போன்ற நூல்களும் உலாவந்தன. இவற்றால் மட்டும் அப்போதிருந்த அறிவு தாகம் கொண்ட எமது முன்னோர்களின் ஆசையைத் தணிக்க முடியவில்லை.

இக்காலகட்டத்தில் தமிழ் நாட்டிலிருந்து வந்த சிலர் நடமாடும் வாசிகசாலைகளை ஆரம்பித்தனர். இன்று மோட்டார் வாகனங்களிலும் நகரங்கள் கிராமங்களில் நடமாடும் நூல் நிலையங்கள் பவனி வருகின்றன. ஆனால் அன்றையக் காலகட்டத்தில் மோட்டார் வாகனங்கள் கிடைப்பதில்லை. ஆகவே கால் நடை வாசிகசாலைகள்தான் இயங்க ஆரம்பித்தன.

எடை அதிகமான- அதிக பக்கங்களைக் கொண்ட நூல்களை மூடையாகக் கட்டித் தோளில் சுமந்த வண்ணம் ஒரிருவர் தெருக்களில் வலம் வருவார்கள். ஒரு தெருவில் வாரம் ஒரு தடவையாவது இவர்கள் உலா வருவார்கள். வீடு வீடாக ஏறி, அங்கு இவர்களுக்காகவே காவல் காத்துக் கொண்டிருக்கும்-பெரும் பாலும் பெண்மணிகளிடம்-ஒரு பணம் (ஒரு பணம் என்பது அப்போது ஆறு சதம்-இந்தியாவில் ஆறு சதம் கொண்ட ஒரு நாணயத்தை 'அணா' என்பார்கள்-அன்றிருந்த கணக்கில்) பெற்றுக் கொண்டு-தலையணைக்குப் பதிலாக வைத்துத் தூங்கக் கூடிய அளவு மொத்தமான ஒரு புத்தகத்தைக் கொடுத்து விட்டுச்செல்வார்கள். அந்தப் புத்தகத்தின் ஒரு வாரத்துக்கான வாடகை ஆக (அன்றையக் கணக்கில்) ஆறு சதங்கள் மட்டுமே!

### ஜெமின் வாசன் கதை

சென்னையில் பதிப்பித்து எம்மத்தியில் மிகுந்த செல்வாக்குடன் இன்று தவழும் 'ஆனந்த விகடன்' வார இதழின் வரலாறும் (கால்) நடமாடும் வாசிகசாலையுடன் நெருங்கிய தொடர்புடையதுதான், என்பதனால் இக்கதையை அறிந்திருப்பது பொருந்தும்.

ஆனந்த விகடனின் உரிமையாளரும் பிரதம ஆசிரியருமாக இன்றுள்ளவர் எஸ்.பாலசுப்பிரமணியன். இவருடைய தந்தையார்தான் எஸ்.எஸ்.வாசன் என்று பெரும்புகழ் கொண்ட திரையுலகப் பிரமுகர். உழைப்பால் உயர்ந்த இந்த ஏழை, தன் வாழ்வைத் தொடக்கியதே நடமாடும் வாசிகசாலை ஒன்றை நடத்தித்தான்.

சென்னை மாநகரில் தன் தோளில் புத்தகங்களைச் சுமந்து-ஓரணாவுக்கு ஒரு வாரத்துக்கு ஒரு புத்தகம் வாடகைக்குக் கொடுத்து, பொருள் திரட்டித்தான், அப்பணத்தை முதலீடு செய்து ஆனந்த விகடன் என்ற முதல்தரமான வார இதழாகத் துலங்கும் பத்திரிகையை நடத்தினார். இப் பத்திரிகையில் பொது அறிவு போட்டி என்றொரு குறுக்கெழுத்துப் போட்டி அம்சமும், இடம் பெற்றது. வாசகர்களை வெகுவாகக் கவர்ந்த இப்போட்டியில் பங்கு பற்றுவோரிடமிருந்து மிகக் குறைந்த கட்டணமும் வசூலிக்கப்பட்டது.

சரியான விடைகளுக்கு ரொக்கப் பணப்பரிசுகளும் வழங்கப்பட்டன. பத்திரிகை விற்பனை, குறுக்கெழுத்துப் போட்டி ஆகியவற்றுடன் விளம்பரங்களின் மூலமும் ஏராளமான பணம் திரு.வாசனுக்குக் குவிந்தது.

### ஜெமினி ஸ்டூடியோ

இரண்டாவது உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்தில் யுத்தச் செய்திகளை தமிழ் நாட்டு மக்கள் அறிந்து கொள்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் சென்னை மாநகரில் ஒரு திரைப் படக்கலை அரங்கை (ஸ்டூடியோ) அமைத்திருந்தது. யுத்தம் முடிவடைந்ததும் இக் கலையகத்தை திரு.வாசன் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து வாங்கினார்.

இதற்கு 'ஜெமினி ஸ்டூடியோ' என்று பெயரிட்டு தமிழில் மிகப் பிரபலமான படங்களைத் தயாரித்து வெளியிட்டார். மங்கம்மா சபதம், சந்திரலேகா, அபூர்வ சகோதரர்கள், ஔவையார் போன்ற உயர் தரமானதும் வசூலில் பெரும் சாதனைகளை நிலை நாட்டிய படங்களை வாசன் தயாரித்து வெளியிட்டார். இந்தி மொழியிலும் மற்றும் பல இந்திய மொழிகளிலும் படங்களைத் தயாரித்து வெற்றி கண்டார். புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். நடித்த ஒளிவிளக்குப் படமும் ஜெமினி தயாரிப்புத்தான்.

### தொடரும் 'விகடன்'

இன்று ஜெமினித் திரைப்படக் கலைக் கூடம் இல்லை. வர்ணப் படப் பதிவுப் பகுதி மட்டும் இயங்குகிறது. ஜெமினி ஸ்டூடியோ இருந்த இடத்தில் பலமாடிக் கட்டங்கள் பல எழுந்து வானை முட்டுகின்றன.

வாசனின் பின்னர் அவர் உருவாக்கிய கலைக்கூடம் மறைந்தாலும் அழியாப்புகழுடன் ஆனந்த விகடன் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

மன்னாதி மன்னன் கதைக்கும் ஜெமினி வாசனுக்கும் என்ன தொடர்பு என்று வாசகர்கள் முணுமுணுப்பது எமது செவிகளில் கேட்கிறது.

எமது நாட்டில் கால் நடை மூலம் நடமாடும் வாசிகசாலைகளை நடத்தியவர்கள் இன்று மாண்டொழிந்து போயிருப்பார்கள். அவர்களுடைய தொடர்பால் பெற்ற அறிவை ஆதாரமாகக் கொண்டே எமது புதிய தொடரை இப்போது தொடங்குகிறோம். இச்சந்தர்ப்பத்தில் அன்று அத்தகைய அறிவினை ஊட்டுவதற்கு வித்திட்ட அந்த நடமாடும் வாசிகசாலை நடத்துநர்களை நினைந்து நன்றி கூறத் தலைப்பட்டேன். அவ்வளவுதான்!

### தாய் மடியில் கிடந்து கேட்டகதை

எனது தாயார், பெரியதாயார் மற்றும் அவர்கள் இருவரையும் ஈன்றெடுத்த எனது ஆச்சி ஆகிய மூவரும் மேற்படி நடமாடும் வாசிகசாலை நடத்துநர்களிடம் வாடகைக்குப் பெற்று வாசித்த கதைகளில் ஒன்றுதான் 'பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை!' எனது ஆச்சி அல்லது பெரிய தாயாரின் மடியில் சிறுவனாக இருந்த நான் படுத்துக் கிடந்து, மூவரில் ஒருவரால் வாசிக்கப்படும் கதை கேட்பேன்.

மாமன்னன் விக்கிரமாதித்தன் வீரதீரச் செயல்களில் ஈடும் இணையுமற்றவனாக இரண்டாயிரம் ஆண்டு காலம் அரசாண்டதாக இக்கதை கூறுகிறது. விக்கிரமாதித்தனின் சிறிய தாயாரின் மகன் பட்டி என்ற பெயருடையவன். மன்னனுக்கேற்ற மதியூக மந்திரியாகவும் துணைவனாகவும் விளங்கியிருக்கிறான்.

இக்கதையில் இடம் பெறும் சம்பவங்கள் பிரமிப்பூட்டுபவை. இத்தகைய சாகசங்கள் சாத்தியமானவையா என்று வாசிப்பவர்களுக்குப் பிரமிப்பை ஊட்டக்கூடியவை. பல சம்பவங்கள் கற்பனையாகவும் இருக்கலாம்; ஆனால் பலதரப்பட்ட தர்ம நீதிகளையும் புத்திசாலித்தனத்தையும் உட்பொதிந்த இக்கதைகளை யார் எழுதினார்களோ தெரியாது. மிகவும் சுவாரசியமாக இவை புனையப்பட்டுள்ளன.

விக்கிரமாதித்தன் கதையின் மூலம் வடமொழியாகவும் இருந்திருக்கலாம். ஆனால் இதில் இடம்பெறும் பாத்திரங்களினதும் ஊர்களினதும் பெயர்கள் பெரும்பாலும் தென்நாட்டுப் பெயர்களையே ஒத்திருக்கின்றன.

விக்கிரமாதித்தன் மாகாளியின் பக்தன். காளியின் அருள் பெற்றே எக்காரியங்களிலும் ஈடுபடுபவன். தெய்வத்தின் துணையின்றி நாம் எவரும் எக்காரியத்தையும் சாதிக்க முடியாது. ஆகவே அவனருளால் அவன் தாள் வணங்கி, மன்னாதி மன்னன் விக்கிரமாதித்தன் கதையை வாசகர்களாகிய உங்கள் முன் வைக்கிறேன். *(மன்னன் வருவான்...)*

---

## கா.பூ.கந்தசாமிக்கு சளப்பி கந்தர் எழுதுவது

கந்தசாமி அண்ண!

கன காலத்துக்குப் புறகு கடதாசி ஒண்டு போடுவம் எண்டு எண்ணிப் போட்டு எழுதிறன். நீங்களும் காணாமல் போயித்தியள். கனக்க யோசித்துப்போட்டன். நீங்க இல்லாட்டி கலகலப்பு, கிலகிலப்பு இல்ல அண்ண.

சும்மா சொல்லப்படாது-நானெண்டா உங்கள அயத்து மறந்து போகல. வெள்ளாம வெட்டுக் கொத்து தெரியுந்தானே? முதலெல்லாம் காலா கலத்திலதான் மழை பெய்யும். இப்ப எண்டா நினைச்ச நேரமெல்லாம் மழைதான். வெள்ளாம-வெட்டு வயலெல்லாம் சரியா கிரிச கோலபட்டுப் போயித்து. எங்க அண்ண நேரம்? கயிட்ட காலந்தொட்டா பெரிசி, சிறிசி எண்டு பாத்தா வருகுது. நம்மள தொட்ட கயிட்டம் போட்டு ஆட்டா வண்ணம் ஆட்டுது. ஒண்டும் செய்ய காலும் வருகுதில்ல. கையும் வருகுதில்ல.

நம்மட பாலிப் போடி அண்ணய மட்டக்களப்பு டவுணுக்க கண்டாப்ப கதைச்சித்துப் போறாரு. சும்மா சொல்லப்படா அண்ண-கந்தசாமி அண்ணயையும் நினைச்சிக் கதைக்க நாலு பேரு இருக்கானுகள்-அண்டை அகித்தியில.

நீங்களும் அந்தா இந்தா எண்டு இயினைக்க கண்ணில பட கிடக்கவேணும். அங்கால போயித்தியள். இங்கால போயித்தியள் எண்டு என்னையும் போட்டு உசுப்பிப் போட்டானுகள்.

கனகாலங்கண்டு. யாழ்ப்பாணத்துக்கு வந்து பாத்துக்கீத்திற்று போன இனக்கு-கொழும்பு எண்டா இப்ப தூரம் போல கிடக்கு. போடியாரிட்ட சொன்ன நான் அண்ணைக்கு சொன்னாரோ தெரியாது.

ஆருக்கு ஆரிர முகத்த பாக்கிற எண்டு கிடக்கு. உங்களக் காண வேண்டுமெண்டு சோட்டயா கிடக்கன்.

நம்மட பழைய ஆக்களிட கட்டய காணாட்டிலும், சத்தத்த கித்தத்தையாலும் கேக்கிறம். இந்த மண்டூருக்கந்தன்ர விளையாட்டுத்தான் இதெல்லாம்.

அண்ண! நீங்க ஏதும் கடதாசிய நாலு எழுத்தாலும் கீறிப் போடுவயள் எண்டு எண்ணித்து இருந்த நான். முந்தின காலம் போலயா இப்ப?

அண்ண! காலம் கலிகாலமில்லவா இப்ப. ஒருவரிட்டயும், ஒண்டும் கதைக்கவும் ஏலா! கிதைக்கவும் ஏலா. இப்ப வாயப் பொத்தித்து கிடக்க வேணும் போல தெரியுது.

முந்தியெண்டா அண்ண! யாழ்ப்பாணத்துக்கு மூண்டு சதம் சொன்னவார்த்த கேக்கும். ஒரு போசிக்காட்ட வாங்கி "நான் சளப்பி கந்த(ரு) வாறன் யாழ்ப்பாணம். வசிஸ்டாண்டில் நில்லுங்க காத்தித்து எண்டு, எழுதிப்போட்டா போசிக்காட்டுக்கு முதல் நான் இலுவா வசிஸ்டாண்டில நிப்பன்.

இப்ப எண்டாப்ப இரிக்கி அண்ண! வாகரத்தேன் என்ன, உன்னிச்ச தயிர் என்ன, பன்னிச்சங்கேணி நண்டென்ன,




மட்டக்களப்புறால் என்ன, முந்திரிக்கொட்ட என்ன, சுமையோட இலுவா இந்த கந்தர் வந்து போறுவென் யாழ்பாணம். இனி எப்ப அண்ண இந்தக் காலம் வரப்போகுது?

'சளப்பி கந்தரு மட்டக்களப்பில இருந்து வாறாராம் யாழ்ப்பாணம் எண்டா உங்கட கால் இந்தப் பூமா தேவியில நிக்காது இலுவா அண்ண? யாழ்ப்பாணத்தில அண்ண, உங்கட வீட்ட, நாம காத்தான்குடி கற்பன் பாயையும் விரிச்சித்து, கள்ளுப்புளா விலையும் கூடுனா நேரத்த பாத்தமா... நிலமையப் பாத்தமா...' எல்லோமே கெட்டுப் போயித்தண்ண.

நம்மட கொளுக்கட்ட முருகருர கோணன் நேத்து டவுணுக்கு வந்தாப்ப கனக்க காதுக்குள்ள கதைச்சித்துப் போறான்.

'இது இண்டைக்கு, நாளைக்கு முடியிற காரியமில்லப் போலகிடக்கு' எண்டு டேய்-கொள்ளுக்கட்ட கோணா எண்டு கதைக்க வேனும் போல இருந்தது. கோணறும் லேசான கட்ட இல்ல. அவனுக்குத் தெரியாத காடு மில்ல, மேய்க்காத மாடுமில்ல. கம்பொண்ட எடுத்தித்து-மாட்டுப் பட்டிக்குப் பின்னால 'இஞ்சா' எண்டால்-உறுகாமத்துக்குப் போய்த்தான் நிமிருவான்.

பால் பொங்கி வழியுமில்லா அண்ண-கண்டு கட்டிற காலயில. இப்ப எண்டா ஒரு வரும் போறதில்ல. பாக்கிறதுமில்ல. கோண னும், காடு, கரம்ப எண்டு இப்ப போறதும் இல்லையாம். கனக்க எழுதிப் போட்டன். ஊரவனுகள் பட்டமும் வச்சிப் போட்டானுகள். கனக்க கதைக்கிறதாம் எண்டு 'சளப்பி' எண்டு போட்டானுகள். இனக்கு அதால ஒரு கக்கிசமும் இல்ல. எங்க போய் நிக்கானுகள் எண்டு பாப்பம்.



இரத்தினங்கள்

Accredited by National Gem & Jewellery Authority

அருள் ஜுவலர்ஸ் ARUL JEWELLERS





ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்களுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


## மாதிரி



இலண்டன்-மோன்றியலில் உள்ள மலைக்கோவிலில் புனித சூசையப்பர் என்னும் தேவாலயத்தின் மாதிரித்தோற்றம் இது. 5 அடி உயரம், 4 அடி நீளம், 4 அடி அகலம் கொண்ட இம்மாதிரியை தங்கநிற தூசிகள், தீக்குச்சிகள், பல் குத்தும் தூசிகள் மற்றும் சீனர்களின் உணவு உட்கொள்ளப்பயன்படும் குச்சிகளால் உருவாக்கியுள்ளார் யாழ். திராவிடபுலவைச் சேர்ந்த கா.கருணாகரன் என்பவர். ஒரு விபத்தில் நடமாட முடியாது சக்கரநாற்காலி துணையுடனுள்ள இவர் தற்போது கனடாவாசி. பொழுதுபோக்காக இத்தேவாலயத்தைச் செய்தார். ஆனால் இன்று இது ஈழத்துக்கே பெருமை சேர்க்கும் சின்னமாக சூசையப்பர் தேவாலயத்தில் காட்சிப் பொருளாக இடம் பெற்றிருக்கிறது.

திரு கருணாகரன் தற்போது நல்லூர் கந்தன் ஆலயத்தையும் ஈழத்தின் புகழ்மிக்க கட்டடங்களையும் இதே பாணியில் உருவாக்கி வருகிறார். தேவாலயமாதிரியை கனடா நாட்டிலுள்ள பலவின மக்களும் வந்துபார்த்து தமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றனராம். முரசும் தனது பாராட்டுக்களை இக்கலைஞருக்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறது.

---

இன்றைய உலகின் மிகப்பெரிய பணக்காரர் புரூணி சுல்தான் சேர் முடா ஹாசனல் போல்கிஷ் வட்டுலா என்பவரே. தனது மாளிகையில் 1996 ஜூலை 13ம் திகதியன்று ஒரு பிரம்மாண்டமான விருந்துக்கு ஏற்பாடு செய்தார். அவருடைய குடும்பத்தினரும் பிறநாட்டுப் பிரமுகர்களும் அவ் விருந்தில் கலந்து கொண்டனர்.

விருந்து வைபவத்துடன் ஒரு களியாட்ட விழாவினையும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இக்களியாட்டம், விருந்து முடிவடைந்த போதிலும் கலைக்கப்பட்டு விடாமல், புரூணி மக்களுக்காக வழங்கப்பட்டது.

இந்த விருந்துவைபவத்தில் மைக்கேல் ஜாக்சனின் 3 நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இந்த இசை நிகழ்ச்சிக்கு மட்டும் ஒரு கோடி பவுண் செலவானதாம். இந்த விருந்து வைபவம், கேளிக்கை, மைக்கேல் ஜாக்சன் இசை நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் மொத்தம் ஒரு கோடி 70 லட்சம் பவுண் செலவானதெனக் கணக்கிடப்பட்டுள்ளது. (ஒரு பவுண் இன்றைய இலங்கை நிலைமைப்படி ரூ.117.00)

## பாட்டி நல்ல பாட்டிதான்...



## என்ன பார்வை



பூமியில் வாழ்பவர்கள் வான மண்டலத்தில் சஞ்சரிக்கும் கோள்களின் நடமாட்டத்தினால் பாதிக்கப்படுகிறார்கள் என்று அன்றே மெய்ஞானிகள் கூறிச் சென்றுள்ளனர். இதில் உண்மை இருக்கிறது என்று சூரிய சந்திரகிரகணங்களே நிரூபிக்கின்றன.

முக்கியமாக சூரியகிரகணத்தைப் பார்ப்பவர்களுக்குப் பல தீங்குகள் ஏற்படுவதாகக் காணப்பட்டுள்ளது. முக்கியமாக கிரகணம் சம்பவிக்கும் போது வெறுங் கண்களால் பார்த்தால் பார்வை பாதிப்படைகிறது. கடந்த 1995ம் ஆண்டு ஒக்டோபர் 24ம் திகதி தாய்லாந்தின் தலை நகரான பாங்கொக்கில் பூரண சூரியகிரகணம் இடம்பெற்ற போது தாயும் சேயும் கறுத்தக் கண்ணாடி அணிந்து கிரகணத்தைப் பார்வையிடும் போது பிடிக்கப்பட்டபடம் இது.

## அதிரடித் தலைவன்



அடிமேல் அடிவாங்கிக் கொண்டிருந்த இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக வங்கப்புயல் சௌரவ் கங்குலி மாற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்திய அணி வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவுக்கு விஜயம் செய்த தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கில் இந்தியாவை சொந்த மண்ணிலேயே மண்ணைக் கவ்வ வைத்தது.

டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் ஆட்டம் ஏனோ தானோவென்று இருந்தது. டெஸ்ட் தொடரின் தோல்வியால் இந்திய அணியில் மாற்றங்கள் செய்ய உத்தேசிக்கப்பட்டது. முதலில் அணித் தலைவரை மாற்றும் யோசனைகள் விவாதிக்கப்பட்டன.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவராக இருந்த டெண்டுல்காரின் இடத்திற்கு அஜய் ஜடேஜா தான் வருவார் எனப் பலர் நினைத்திருந்தனர். அதுபோலவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிலும் பேச்சுக்கள் அடிபட்டன.

இறுதியில் இந்திய அணிக்கு அதிரடியாக சௌரவ் கங்குலி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் தலைமையில் தென்னாபிரிக்காவுடனான ஒரு நாள் போட்டித் தொடரில் 3-2 என்ற கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்றது.

சென்ற வருடம் டொரண்டோவில் நடந்த மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரில் இந்திய அணிக்குத் தலைமை தாங்கிச் சென்று வெற்றிக்கு வழி வகுத்தார் கங்குலி. அத்துடன் இந்த வருட ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற மூன்று நாடுகள் கலந்து கொண்ட ஒரு நாள் தொடரிலும் கங்குலி சிறப்பாக விளையாடினார்.

## 3வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் ஆகவின்-அருண்தவச்செல்வன் (28.03.2000)

மட்டுவில் வடக்கைச்சேர்ந்த அருண்தவச்செல்வன்-கருணா தம்பதியினரின் செல்வமகன் "ஆகவின்" 28.03.2000 அன்று தனது 3வது பிறந்தநாளை "கவின்" "ஹவுஸ்" நகரில் உள்ள தமது இல்லத்தில் சிறப்பாக கொண்டாட மகிழ்ந்தார். இவரை அப்பா-அம்மா, அப்பப்பா-அம்மம்மா, அம்மப்பா-அப்பம்மா, மாமா-அத்தைமார், சித்தப்பாமார்-சித்திமார், பெரியப்பாமார்-பெரியம்மாமார், அண்ணாமார்-அக்காமார், மச்சான்மார்-மச்சாள்மார் மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஐங்கரன் அருள் பெற்று இனிதே வாழ இனிய மனதுடன் ஆகவினை மனமார வாழ்த்துகின்றனர்.

தகவல்: அருண்-கவின்